
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் உபயநாச்சியாருடன், சென்னை-1

மாலை 7] விசுவாவசு சித்திரை—மே 1965 [மணி 8

சென்னை அரசாங்க அறநிலையப்



ஸ்ரீவராக அவதார சிற்பம், மாமல்லபுரம் குகைக் கோயில்.

## பொருள் அடக்கம்


1. சைவ சித்தாந்தம்
2. ஸ்ரீ ஆஞ்சநேயர்
3. ஈசன் இயற்கை
4. திருவாய் மொழி
5. எழில் ஞான பூசை
6. திருச்சந்த விருத்தம்
7. ஆழ்வார்களும் நாயன்மார்களும்
8. வண்ணத்தியல்பு நூல்
9. பராங்குசமுனியும்—பரகாலகவியும்.
10. திருக்கச்சூர்க் கல்வெட்டுக்கள்
11. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
12. ஸ்ரீவைஷ்ணவ—பரிபாஷைச் சொற்கள்
13. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] விசுவாவசு சித்திரை—மே [மணி 8


## சைவ சித்தாந்தம்

**திரு. ஜி. யூ. போப்.**

"சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையானது, தென்னிந்தியத் தமிழ் மக்களுடைய பேரறிவின் பெரும் பயனாகும். இந்திய நாட்டிலுள்ள சமயங்கள் எல்லாவற்றிலும் சைவ சமயமே மிக விரிந்ததும், பெரும்பான்மையான மக்களால் தழுவப் பெற்றதும், ஐயத்திற்கு இடனின்றி உண்மையிலேயே பெருஞ் சிறப்பு வாய்ந்ததும் ஆகும். தமிழ் மக்களின் உள்ளங்களை அது பெரிதும் கவர்ந்து அரசு வீற்றிருக்கின்றது" *(1)*.

**திரு. கௌடி :**

"பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும், கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விடச் சைவ சித்தாந்தமானது சில சிறப்பியற் பண்புகளைத் தனக்கெனப் பெற்றொளிர்கின்றது. அது பெரிதும் பழைமை வாய்ந்ததாய், அப் பழைமையினாலாய பெருமைகளையெல்லாம் பெற்று விளங்குகின்றது. சமய உலகில், தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரும் பழைமையான சிறந்த கருத்துகளுக்கெல்லாம் சைவ சமயமே நேரிதின் உரிமைத் தொடர்புடையதாகும். தமிழ் மக்களின் சமயமாகிய அதனை நோக்க, அடுத்துள்ள ஏனையன பிறவெல்லாம் ஒப்பியல் முறைமையில் அயலவர்க்கு உரியனவும், அண்மையில் தோன்றியனவுமே யாகும். சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை வாழ்க்கை என்பனவற்றின் வெளிப்பாட்டு முறையிலும், மிக மிகச் சிறந்ததொன்றாகத் தென்னிந்தியா பெற்றிருப்பது சைவ சித்தாந்தமே எனலாம்" *(2)*.

**சமயநூற் பயிற்சி :**

இங்ஙனம் மேலைநாட்டுப் பேரறிஞர்கள் பலரும் பாராட்டும் சீரும் சிறப்பும் பெற்றது, நம் சைவ சித்தாந்தம்! ஆயினும் நம்மிற் சிலருக்குக் கூட அத்

---

(1) "The Saiva Siddhantha system is the most **elaborate**, **influential**, and undoubtedly the most intrinsically **valuable**, of all the religions of India. It is peculiarly the South-Indian and **Tamil Religion**. It is the choicest product of the Dravidian intellect. It holds sway over the hearts of the Tamil People......".

—**Dr. G. U. Pope.**

(2) The Rev. Mr. Goudie.

தத்துவக் கொள்கை பற்றி யாதும் தெரிவதில்லை. அதற்குக் காரணங்கள் பல கூறலாம். நம்மிற் பலர் சமய நம்பிக்கை யுடையவர்களே யாயினும், சமய நூற் பயிற்சியில் ஆர்வமும், சமய அறிவு பெறுதலில் வேட்கையும் உடையவர்கள் அல்லர்! ஓரோவழி சிறிது ஆர்வமும் வேட்கையும் இருப்பினும், இந்நாளைய பலதிற வகையான வாழ்வியற் போக்குகளினால், நாம் இவற்றில் ஓரளவாதல் கருத்துச் செலுத்துவதோ, உழைப்பும் முயற்சியும் எடுத்துக் கொள்ளுவதோ இயலுவது இல்லை.

**சாரம் கொண்ட சைவசித்தாந்தம்:**

சைவசித்தாந்த நூல்களின் பயிற்சிக்கு, இலக்கணம் இலக்கியம் தருக்கம் திருமுறைகள் புராணங்கள் பொது நூல்கள் பிறசமய நூல்கள் சங்க இலக்கியங்கள் என்பன போன்ற பல துறை அறிவுகளும் வேண்டியிருக்கின்றன. ஏனெனில், இவற்றினின்று திரண்டெழுந்த சிறந்த பெருஞ்சாரமாகவே சைவசித்தாந்தம் திகழ்கின்றது. இத்துணை அறிவும் புலமையும் பெற்றிருக்கக் கூடிய நிலையில் ஒரு சிலரே யுளராவர். பொதுமக்கள் அனைவருமே அத்தகைய அறிவுநலனைப் பெறுதல் என்பது எளிதில் இயலாதது. இது பற்றியே,

> "ஓரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
> ஆரா இன்ப அருங்கனி பிழிந்ததன்
> சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
> தேனமுது அருந்தினர் சிலரே"

என நம் **குமரகுருபரசுவாமிகள்** குறிப்பிட்டருளிச் செல்வாராயினர்.

**அருமை பெருமை:**

மேலும் இங்கொன்று நாம் கருதுதற்கு உரியது உண்டு. உலகப் புகழ் பெற்ற விஞ்ஞான மேதை ஆகிய **ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன்** அவர்கள் கண்டறிந்த 'தொடர்பியற் கொள்கை' பற்றித் தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட விளக்க நூல்கள் வெளிவந்திருப்பினும், அதனை உள்ளபடி நன்கு உணர்ந்துகொண்டிருப்பவர்கள் உலகிலேயே பன்னிருவர் மட்டுமே உள்ளனர் என அறிஞர்கள் கூறுவர் (3). இவ்வாறு ஒரு சிலர் மட்டுமே அறிந்துகொள்ளத்தக்க நிலையினதாக இருப்பது, அவ்விஞ்ஞானக் கொள்கையின் அருமை பெருமைகளை யுணர்த்துவதாகுமேயன்றி, அதன் சிறுமையினையோ இழிவினையோ குறிப்பதாகாது. இவ்வுண்மை, நம்முடைய சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கைக்கும் பொருந்தும்.

**இடைநிலை நெறி:**

எனினும் தமிழ்நாட்டில் தமிழ்மக்களாகப் பிறந்துள்ள நாம், தமிழ்ச் சான்றோர்கள் ஆகிய ஆசிரியர் மெய்கண்டார் முதலிய நம் தமிழ் முன்னோர்கள், நம்மனோர் நலங்கருதி வகுத்து வைத்து விளக்கியருளிச் சென்றுள்ள தமிழியல் ஞானம் ஆகிய சைவ சித்தாந்த தத்துவக் கொள்கையின் அடிப்படையுண்மைகளையேனும், ஓரளவாதல் உணர்ந்து கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். ஆதலின் மிகவும் **நுணுகி ஆ**ழ்ந்து செல்லாமலும், மேற்புறமாகவே **நுனிப்புல்** மேய்ந்தொழியாமலும், **இடை நிலை நெறியில்,** ஈண்டு இயன்ற அளவு சைவ சித்தாந்தம் பற்றி ஆராய்ந்து அறிய முயலுவோம்! (4).

---

(3) "Einstein said that there were **only twelve people** living who understood his Theory of Relativity, although more than **nine hundred** books have been written attempting to explain it..."

—**Dale Carnegie,** Little-known Facts About Well-known People, p. 10.

(4) Anyone who has ever tried to present a rather **abstract** scientific subject in a popular manner knows **the great difficulties** of such an attempt.

Either he succeeds in being intelligible by **concealing** the core of the problem and by offering **superficial** aspects or **vague** allusions, thus **deceiving** the reader by arousing in him the deceptive **illusion** of comprehension; or else he gives an expert account of the problem, but in such a fashion that the **untrained** reader is unable to follow the exposition.

—**Dr. Albert Einstein,**
Dr. Einstein and Universe.

**முப்பொருள்கள்:**

சைவ சித்தாந்தத்திற் கூறப்படும் முதன்மையான பொருள்கள் மூன்றே யாகும். பதிபசுபாசம் என்னும் முப் பொருள்களும் மக்கள் அனைவரும் ஆராய்ந்துணர்தற் குரியன. உலகி லுள்ள நூல்களெல்லாம் இம் மூன்ற னையோ, அல்லது இம் மூன்றனுள் ஒன்றனையோ, அல்லது இவற்றின் ஒவ் வொரு தனித்தனிப் பகுதியினையோ ஆராய எழுந்தனவேயாம். உலகில் இம் முப்பொருள்களின்கண் அடங்காததாய பொருள் எதுவும் இல்லை. ஆதலின் எல்லா நூற்களும் ஒருவகையில் இம் முப்பொருள்களையே நுதலி எழுந்தன எனப்படும்.

> சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
> மூன்றுள; மறைஎலாம் மொழிய நின்றன;
> ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த்தொகை,
> வான்திகழ் தளைஎன வகுப்பர் அன்னவே
>
> —கந்தபுராணம்

எனவரும் செய்யுளும், "பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதிபசு பாசம் தெரித்தல்" எனவரும் சிவப்பிர காசத் திருமொழியும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

**பதிபசுபாசம்:**

உலகாயதம் சார்வாகம் போன்ற சில சமயங்கள், உலகை மட்டுமே உடன் படும். பௌத்தம் சமணம் போன்ற சில சமயங்கள் உலகையும் உயிரையுமே உடன்படும். பிறிதொரு சமயம் கடவுளை மட்டுமே உடன்பட்டு, உலகையும் உயி ரையும் இல்லையென மறுக்கும். இங்ஙனம் பலதிறமாக மறுதலைப்படும் சமயங்களைப் போலாமல், சைவ சித்தாந்தமானது உலகம் உயிர் கடவுள் என்னும் மூன்றை யுமே ஆராய்ந்து உண்டென உடன்படு கின்றது. ஒவ்வொரு கொள்கையாளரும் தத்தமக்கெனச் சில குறியீடுகளைப் படைத்துக் கொண்டு வழங்குவது இயல்பு. அம் முறையில் இம் முப் பொருள்களையும் **ஜக ஜீவ பரம்** என்றே, **சித்து அசித்து ஈசுவரன்** என்றே வைஷ்ணவ சித்தாந்தம் வழங்கும். **பதி பசு பாசம்** என்பது சைவசித்தாந்திகள் பொதுவாகக் கையாளும் குறியீடு.

**சொற்பொருள்:**

பதி பசு பாசம் என்பன தமிழில் முறையே கடவுள் உயிர் உலகம் எனவும், இறை உயிர் தளை எனவும் வழங்கப் படும். வடமொழியில் **பாசம்** என்னும் சொல் 'கட்டுவது' என்னும் பொரு ளுடையதாய், உயிர்களைப் பிணித்து நிற்கும் மும்மலங்களையும் குறிக்கும். **பசு** என்னும் சொல் 'கட்டுப்பட்டது' என் னும் பொருள்தந்து, மும்மலப் பிணிப் புண்ட உயிர்த்தொகைகளை யுணர்த்தும். **பதி** என்னும் சொல் 'காப்பாற்றுபவர்' என்னும் பொருள் பயந்து, இறைவனைச் சுட்டும். எனவே, பதிபசு பாசம் என் னும் சொற்கள், ஆழ்ந்த பொருள் பொதிந்த உருவகக் குறிப்புடைய அழகிய சொற்களாக விளங்குகின்றமை யுணரலாம்.

இனி, எல்லா உயிர்ப்பொருள் உயிரல் பொருள்களிலும் கலந்து பதிந்திருப் பவன் **பதி**; மனிதனால் நடத்தப்பெறும் பசுக்கள் ஆகிய விலங்குகள் போலச் சிற்றறிவுடையனவாய், ஒரு முழு முதற் றலைவனால் இயக்கப்பெறும் உயிர்த் தொகைகள் **பசுக்கள்**; தொடுவுழித் தொடுவுழி நீங்கி விடுவுழி விடுவுழிப் பரத்தலான் நீரினை மறைக்கும் பாசி போல, உயிர்களின் அறிவினை மறைப் பன **பாசங்கள்** எனக் கொள்ளுதலும் உண்டு.

**பதிப்பொருள்:**

பதிபசு பாசம் என்னும் முப்பொருள் களுள் பாசம் ஆகிய உலகமும், பசு ஆகிய உயிரும் உண்டு என மக்களிற் பெரும் பாலோர் உடன்படுவராதலின், உண்டு எனக் காரணங் காட்டி நிறுவப்பட வேண்டியிருப்பது, பதிப்பொருளே யாகும். பதிப்பொருள் காட்சி யளவை யால் அறியப்படுவதன்று. கண்களாற் காணப்படும் அனைத்தும் அழிந்துபடும் தன்மையின. '**கண்டன எலாம் அழியும்**'

என்பர் தாயுமானவர். ஆதலின், பதியாகிய கடவுட் பொருளும் கண்களாற் காணப்படுமாயின், அழியும் இயல்பினதாக முடியும். சாத்திரங்கள் ஆகிய நூல்களைக் கொண்டு கடவுளை யறிய இயலுமெனின், "ஒன்றுரைத்தது ஒன்றுரையா சாத்திரங்கள்". எனவே ஆகமப் பிரமாணம் பற்றியும் கடவுளை யுணர்தல் என்பதும், உணர்த்த முயலுதல் என்பதும் எளியன அன்று. எனவே கடவுட் பொருளின் உண்மையினை நிறுவுதற்குக் கருதலளவையினையே சான்றோர்கள் அனைவரும் கைக்கொள்ளுகின்றனர். மனிதன் அறிவுநலனும், அதன்பயனாகிய சிந்தனைத் திறனும் பெற்றிருத்தலின், கருதலளவையைத் துணையாகக் கைக்கொள்ளுவது பொருத்தமே எனலாம்.

கருதலளவை என்பது கண்டதனைக் கொண்டு காணாததனைக் கருதியுணர்தல். கண்டதைக் கண்டபடியே அறிபவர் சிறியர். "**பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்**" என மாணிக்க வாசகர் கூறுவர். எனவே கண்டதனைக் கொண்டு காணாததனை அறிபவரே பெரியர், சிறந்தவர். கரும்பலகையில் ஆசிரியர் எழுதிய எழுத்தினைத் தான் கண்டுணர்ந்தவாறே 'கோடுகள்' என்பவன், அறிவிற் சிறியவன்; ஆனால் அதனையே அகரம் முதலியனவாகக் கருதியுணர்ந்து கூறுபவன், அறிவிற் பெரியவன், சிறந்தவன்! ஏனெனில், அவன் கண்டதனைக் கண்ட அளவில் மட்டுமே கொண்டு அமையாமல், தான்கண்ட வரிவடிவினைக் கொண்டு காணாத ஒலிவடிவினைக் கருதி யுணர்ந்து கூறினன்.

இங்ஙனமே காணப்படும் உலகத்தைக் கொண்டு, காணப்படாத கடவுளைக் கருதி யுணர்ந்து கொள்ளுபவர்களே பெரியோர்களாவர். "**ஞாலமே கரியாக** நானுனை நச்சி நச்சிட வந்திடும் காலமே உனை ஓத நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" எனவரும் திருவாசகம், காணப்படும் உலகத்தைக் கொண்டே காணப்படாத கடவுளைக் கருதி யுணர்தல் வேண்டும் எனக் குறிப்பிடுதல் அறிந்தின் புறற்பாலது. "ஆதி பகவன் முதற்றே யுலகு" எனத் **திருக்குறளும்**, 'அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் தோற்றிய திதியே" எனச் **சிவஞான போதமும்** கூறுதல் இங்கே எண்ணுதற் குரியது.

நாம் குடத்தைக் கண்டால் அதனைச் செய்த குயவன் ஒருவன் உண்டு என உணர்கின்றோம்; அதுபோலவே உலகத்தைக் காணும் நாம் இதனைப் படைத்த கடவுள் ஒருவன் உண்டு என எண்ணி உணரற்பாலம். குடம்போன்றது **உலகம்;** குடம் வனைதற்குரிய மண்போன்றது **மாயை**; குடம் வனைதற்குத் துணை செய்யும் தண்ட சக்கரங்கள் போல்வன **அருளாற்றல்கள்**; குடம் வனைந்த குயவன் போல்பவன் **இறைவன்.** மண் **முதற்காரணம்** (Material cause); தண்ட சக்கரங்கள் **துணைக்காரணம்** (Instrumental cause); குயவன் **நிமித்தகாரணம்** (Efficient cause).

எழுத்துக்களுக்கு அகரம் முதலாக நிற்றல்போல, உலகிற்கும் முதலாய் நிற்கும் தலைவன் ஒருவன் வேண்டப்படுவான். அவயவப் பகுப்பு உடையனவும், சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவனவும், சுட்டி யறியப்படுவனவும் ஆகிய பொருள்கள் யாவும் தோன்றி நின்று அழியும்.

அவன் அவள் என்னும் உயர்திணையும், அது என்னும் அஃறிணையும் ஆகிய **அவயவப் பகுப்பு**டைமையானும்; அவன் என்றும் அவளென்றும் அதுவென்றும் **சடமுமாய், பலவுமாய்** உரைக்கப்படுதலானும்; அவன் அவள் அது எனச் **சுட்டி யறியப்** படுதலானும்; காணப்படும் இவ்வுலகம் தோன்றி நின்றுஅழிதல் ஆகிய முத்தொழில்களையுடையதாகும்.

"செய்வோனை இன்றிச் செய்வினை இல்லை" யாதலால், உலகம் முத்தொழிற்படுதற்குரிய வினை முதலாக இறைவன் ஒருவன் உண்டு என்பது தெளிப்படும். ஜகத் அழிவது, பிரபஞ்சம் மிகப்பரவியிருப்பது, லோகம் பார்க்கப்படுவது என்னும் சொற்பொருள் நுட்பங்களா

லும், உலகம் முத்தொழில் உடையதென உணரலாம்.

சமணர்கள் முதலினோர் உலகம் நித்தப் பொருள் என்பர். "மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்த" என்பது **சீவகசிந்தாமணி.** வேறு சிலர் உலகம் தானே தோன்றி நின்றழியும் என்பர். அவற்றை மறுத்தற்கே ஆசிரியர் மெய் கண்டார் **"தோன்றிய"** எனக் கூருமல், முதல்வன் ஒருவனல் தோற்றுவிக்கப் பட்டது என்னும் உண்மையினை வலி யுறுத்தத் **"தோற்றிய"** எனப் பிறவினை வாய்பாட்டால் ஓதியருளினர். ஆசிரியர் திருவள்ளுவர் தாமும் **"உலகியற்றி யான்" "வகுத்தான்"** எனக் குறித்திருப் பதுடன், "உலகத்தார் உண்டென்பதில் லென்பான் வையத் தலகையா வைக்கப் படும்" என அருளிச் செய்திருத்தலும் காண்க.

> " ஒருவனே டொருத்தி ஒன்றென்று
> உரைத்திடும் உலகம் எல்லாம்,
> வருமுறை வந்து நின்று
>
> போவதும் ஆத லாலே,
> தருபவன் ஒருவன் வேண்டும்."
>
> —சித்தியார்

**பசுக்கள்**

இனி, பசு எனப்படும் ஆன்மாக்கள் ஆகிய உயிர்ப் பொருள்கள் பற்றிப் பல வேறு மதத்தினரும் பலவேறு வகையாகக் கூறுவர். அவர்களுள் உயிர் என்பதொரு பொருள் இல்லை என்பர் **சூனியான்ம வாதிகள்.** உடம்பையே உயிரென்பர் **தேகான்ம வாதிகள்.** ஐம்பொறிகளே உயிர் என்போர் **இந்திரியான்ம வாதி கள்.** அந்தக்கரணங்களே உயிர் என்பர் **அந்தக்கரணுன்ம வாதிகள்.** நுண்ணுட லையே உயிர் என்று கூறுவோர் **சூக்கும தேகான்ம வாதிகள்.** பிராண வாயுவே உயிர் என்று சொல்பவர்கள் **பிராணுன்ம வாதிகள்.** பிரமப் பொருளே உயிராகும் என்னும் கொள்கையுடையர் **பிரமான்ம வாதிகள்.** மேற் கூறிய உடல் பொறி கரணம் பிராணன் முதலிய அனைத்தும் கூடிய சமுதாயமே உயிர் என்பர் **சமுதா யான்ம வாதிகள்.** இங்ஙனம் உயிர்ப் பொருள் பற்றி இன்னும் வெவ்வேறு கொள்கைகளைக் கூறுவோர் மற்றும் பலருளர்.

(1) உயிர் என்பதொன்று இல்லை இல்லை என்று சொல்லிக்கொண்டு நிற்கும் **அறிவு** ஒன்று உண்டு ஆதலால், ஆன்மா என்பதொன்று யாண்டும் இல்லை எனச் சொல்லும் சூனியான்மவாதிகள் கூற்றுப் பொருந்தாது.

(2) யான் உடம்பு, யான்கை, யான் கால் என வழங்குவார் இன்றி, என்னு டம்பு என்கை எனது கால் எனத் தம் மினின்று வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்கின்ருே மாகலின், உடம் பினின்று வேருக உயிர் என்பது உள்ளது.

(3) ஐம்புலனுய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களை அறியுங்கால், ஐம் பொறிகளுள் ஒன்றறிந்ததனைப் பிறி தொன்று அறியமாட்டாமையினுல், ஐம் பொறிகளானும் ஐந்து புலன்களை அறிந்து நுகர்வதாகிய உயிர் வேறென்று உண்டு.

(4) கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனை நினைந்து அ[illegible] யின், தான் முன் கண்டவாறே அறியா மல் மயங்கிக் கலங்கி யறியக் காரண மில்லை. எனவே விழிப்புநிலையில் அகத்தே நிற்றலும், கனவுநிலையிற் புறத்தே போதலும் பற்றி மயங்கி யறிவதாய்ச் சூக்கும தேகத்தின் வேறுபட்டு, உயிர் என்பதொரு பொருள் உண்டு.

(5) ஐம்பொறிகள் அறிந்த நுகர் பொருள்களைச் சித்தம் சிந்தித்தும், மனம் சங்கற்ப விகற்பம் செய்தும், அகங்காரம் ஒருப்பட்டெழுந்தும், புத்தி நிச்சயம் செய்தும் அறியுமாயினும், யான் சிந்தித்தேன் யான் சங்கற்பித்தேன் யான் ஒருப்பட்டெழுந்தேன் யான் நிச்சயித் தேன் என எண்ணி அறிய இயலாத சடப்பொருள்களாகலின், அந்தக்கரணங் களே உயிர் என்றல் அமையாது.

(6) உறங்கும் பொழுதும் விழிக்கும் பொழுதும் பிராணவாயு ஒரே தன்மையில் இயங்கி நிற்கின்றது ஆயினும், உறக்கத்தின்கண் இன்பதுன்ப நுகர்ச்சிகளும் உடலியக்கமும் நிகழாமையினுல், பிராணவாயுவின் வேருக உயிர் என்பது துண்டு.

(7) எக்காலத்தும் திரிபின்றி இயல்பாக முழுதுணர்ந்து நிற்றல் பிரமத்தின் பண்பு ஆகலின், உணர்த்திய வழியே உணரும் குணமுடைய உயிரைப் பிரமம் என்பது, பொருந்தமன்று.

(8) உடல் பொறி கரணம் முதலிய அனைத்தும் கூடிய சமுதாயமே உயிர் எனின், உடல் பொறி முதலியன எல்லாம் மாயையின் காரியங்களேயாய் நிலைபேறுடையன அன்மையின், நிலைபேறுடைய அநாதி நித்தியப் பொருள் எனப்படும் உயிர் ஆகமாட்டா.

எனவே, மாயா காரியங்களான் யாக்கப்பட்டு இயன்றுள்ள உடம்பின்கண், இவற்றிற்கெல்லாம் வேருக உயிர் அல்லது ஆன்மா என்பது தனியே உண்டு என்பது தெளிவாம். இத்தகைய ஆன்மாவானது உடம்புதோறும் வேருய், "எண்ணரிதாய் நித்தமாய்" இருக்கின்றன.

**பாசங்கள் : ஆணவமலம்.**

பாசமானது ஆணவம் கன்மம் மாயை என மூவகைப்படும். ஆணவமானது 'நெல்லிற்கு உமியும் செம்பிற்குக் களிம்பும்' போலத் தொன்மையே உயிர்களுக்கு உளதாவது. ஆதலின் அது **மூலமலம்** என்றும் **சகசமலம்** என்றும் பெயர்பெறும். கருமம் மாயை என்பன, ஆணவ மல நீக்கத்தின் பொருட்டு இடையே வந்து செயற்கையாகக் கூடுவன ஆகலின், அவை **ஆகந்துக மலம்** என வழங்கும்.

ஆணவ மலமாவது கண்ணை மறைக்கும் இருள்போல, உயிர்களின் அறிவை மறைத்துத் தடை செய்து கொண்டு நிற்பதாகும். பூத இருளானது நமக்கு ஒரு பொருளையும் காட்டாது மறைத்துத் தடை செய்யுமாயினும், தன்னை மட்டும் காட்டிவிடும்; ஆணவ இருளோ பிற பொருள்களைக் காட்டாமை மட்டுமேயன்றித் தன்னையும்கூட நமக்குக் காட்டுவதில்லை. மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என்னும் ஏழும் ஆணவ மலத்தின் காரியங்கள் ஆகும் என்பர் **சிவஞான முனிவர்.** விகற்பம் கற்பம் குரோதம் மோகம் கொலை அஞர் மதம் நகை என்னும் எட்டும் ஆணவ மலத்தின் குணக்குறிகள் என்று **அருள்நந்திசிவாசாரியர்** குறிப்பிடுவர்.

**கன்ம மலம் :**

ஆணவமலச் சார்பால் உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பே கன்மமலம் ஆகும். காரியங்கள் எல்லாம் ஒருங்கே தோன்ருமல் அடைவே தோன்றுதற்குக் காரணம் வேண்டுதலான், **கன்ம மலம்** ஆகிய வினையுண்மை துணியப்படும். வினையில்லையாயின், விதித்தன செய்து விலக்கியன ஒழிதலாற் பயனின்ருய் முடியும். உயிர்களின் இன்ப துன்ப நுகர்ச்சிகளுக்குக் காரணமாய் அமைவன இரு வினைகளே யாம்.

வினையானது மந்திரம் முதலிய அத்துவாக்கள் இடமாக, மனம் வாக்குக் காயங்களால் ஈட்டப்பட்டுத் தூல கன்மமாய் **ஆகாமியம்** எனப் பெயர் பெறும். பின்னர் அது பக்குவம் எய்தும் அளவும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக் கோடாக மாயையிற் கிடந்து, **சாதி ஆயுள் போகம்** என்னும் மூன்றற்கும் ஏதுவாய் முறையே **சனகம் தாரகம் போக்கியம்** என்னும் மூவகைத்தாய், அபூர்வம் புண்ணிய பாவம் **சஞ்சிதம்** என்னும் ஒருபொருட்பெயர்கள் பெற்று வழங்கும். பின்னர் அது பயனுக எய்தி விளைவுபடுங் காலத்தில் **ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆதியான்மிகம்** என்னும் முத்திறத்தாற் பலவகைப்பட்டுப் **பிராரத்தம்** எனப்பெயர் கூறப்பெறும்.

**மாயா மலம் :**

இங்ஙனம் கன்மமலம் ஆகிய வினையுண்மை பெறப்படவே, அஃது இயை

வதற்குப் பற்றுக்கோடாகிய மாயா மலம் உண்மையும் தெளியப்படும். குடத்திற்கு மண்போல உலகிற்கு முதற்காரணம் ஆக விளங்குவது எதுவோ அதுவே மாயை யாகும். '**மா**' என்பது ஒடுங்குதல், '**யா**' என்பது வருதல்; ஆகலின் எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்று மீள வெளிப்பட்டுத் தோன்றுதற்கும் காரண மாக நிற்பது **மாயை** எனப்படும்.

உலகத்தின் தோற்ற ஒடுக்கங்களுக் குரிய முதற்காரணமாய் (Material Cause), ஒன்றற் கொன்று நுண்ணிதாகிச் செல்லும் சூக்குமப் பொருள்கட்கு முடிவிடமாய் நிற்கும் சூக்குமப் பொருள் யாது, அது மாயை என்றல் அமையும். மாயையின் காரியங்கள், **தனு, கரணம். புவனம், போகம்,** என்பன.

மாயை, சுத்தமாயை அசுத்த மாயை சுத்தாசுத்த மாயை என மூவகைப் பட்டுத் தத்துவங்களின் தோற்ற ஒடுக் கங்களுக்குக் காரணமாகும்.

ஆணவ இருளின் அழுந்திக் கேவல நிலை யில் அறிவிழந்து கிடக்கும் உயிர்களுக்கு உடலும் கருவியும் பிறவுமாக அமைந்து, ஒரு சிறிது அறிவாகிய ஒளியைத் தோற்றி உதவி செய்வது மாயையே யாகும். இது குறித்தே ஆசிரியர் **மெய் கண்டார்.** "மாயா தநுவிளக்கா மற்றுள்ளம் காணாதேல் ஆயாதாம் ஒன்றை" என அருளிச்செய்வா ராயினர், இங்ஙனம் உயிர்களின் விழைவு அறிவு செயல்களை விளக்கும் இயல்பிற்றாகிய மாயையானது, ஆணவ மலத்தின் தொடர்பினால் ஓரோவழி உயிர் களின் அறிவு விழைவு செயல்களை மறைப்பதும் உண்டு. ஆயினும் அப் பெற்றி மாயைக்கு ஆணவமலச் சார்பா லாகிய செயற்கைப் பண்பேயன்றி, இயற்கையியல்பு ஆகாது'

**முடிவுரை :**

இதுகாறும் சைவ சித்தாந்தம் என்னும் பொருள்பற்றி இயன்ற பெற்றியில் ஓரளவு சுருக்கமாக வகுத்துணர்த்தப் பட்டது. **பதி பசு பாசம்** என்னும் முப் பொருள்களையும் குறித்து, நம் சைவ சித்தாந்த மூல முதலாசிரியர் எனப் பெரிதும் வழுத்திப் போற்றத் தக்க ஆசிரியர் **திருமூலர்** அருளிச் செய்த திரு மந்திரப் பாடல் ஒன்றை, ஈண்டு நாம் நினைவு கூர்ந்து இன்புறுவோம்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே."

—தொடரும்

[அன்பியற் பெருந்தகையாகிய நமது அற நிலைய ஆணையர் அவர்கள் தலைமையில், தாம் பரம் கற்பக விநாயகர் கோயிலில், "சைவ சித் தாந்தம்" என்னும் பொருள்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது.]

—ஆசிரியர்

---

## ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்:

**12—4—65** திருப்போரூர்—ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் ஸ்ரீமத் சிதம்பரசுவாமிகள் இயற்றிய "சந்நிதி முறை" "மீனாட்சி கலி வெண்பா" ஆகியவற்றின் கல்வெட்டுத் திறப்பு விழா.

**14—4—65** குமாரவயலூர்—ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணிக்காகத் திருச்சித் தேசிய உயர் நிலைப் பள்ளி மைதானத்தில் திருமுருக கிருபானந்தவாரி யார் அவர்களின் மகாபாரதச் சொற்பொழிவுத் தொடக்க விழா.

**16—4—65** சென்னை மயிலை—ஸ்ரீ கபாலீசுவரர் கோயிலில் முதலமைச்சர் அவர்களால் "சமயக் கலை மலர்" வெளியீட்டு விழா.

# ஸ்ரீ ஆஞ்சநேயர்

**முன்னுரை :**

நம் இந்திய நாட்டினைக் கங்கை, யமுனை, சிந்து, கோதாவரி, காவிரி முதலிய பற்பல ஆறுகள் பாய்ந்து வளம் படுத்துகின்றன. அதுபோல நம் இந்திய மக்களின் உள்ளங்களிற் பதிந்து வளம் படுத்தும் பழம் பெரும் நூல்கள் பல வற்றுள், **இராமாயணம்** என்பது ஒன்று. திருவரங்கத்தமுதனார் என்னும் சிறந்த வைணவப் பெரியார், இராமாயணம் என்பது ஒரு சிறந்த **பக்திவெள்ளம்** என்று, பாராட்டிக் கூறுகின்றார்.

> "படிகொண்ட கீர்த்தி
> இராமாயணம் என்னும்
> பக்தி வெள்ளம்"

என்பது **இராமாநுச நூற்றந்தாதி** என்னும் நூலில் வரும் ஓர் அழகிய பாடல்!

இத்தகைய இதிகாசத்தின்கண் வரும் சிறந்த உத்தம புருஷர்களுள், இராமனுக்கு அடுத்தபடியாக நம்மனோர் உள்ளங்களை யெல்லாம் கவர்ந்து, நாம் வணங்கிப் போற்றத் தக்க நிலையில் திகழ்பவர் **ஸ்ரீ ஆஞ்சநேயர் !**

**ஸ்ரீராம நவமித்** திருநாளை ஒட்டி, இராமபிரானின் இணையற்ற பெருந் தொண்டராய், அவர்தம் அன்பையும் அருளையும் பெற்றுச் சிறந்தினிது திகழும் ஸ்ரீ ஆஞ்சநேயர் பற்றி, ஈண்டு நாம் ஒரு சிறிது சிந்தித்து வந்திப்போம்!

**ஆஞ்சநேயர் :**

ஆஞ்சநேயர் என்னும் பெயரினை, நாம் பலரும் பலகாலும் கேட்டறிவோம். ஆயினும் அப்பெயர் அமைந்ததற்குரிய காரணத்தினை நம்மிற் பலர் அறியோம். இவருடைய தந்தை **கேசரி** என்னும் வானரன். தாய் **அஞ்சனை** என்பவள். அஞ்சனையின் நேயத்துக்குரிய மைந்தராகத் தோன்றிய காரணம் பற்றியே, இவருக்கு **ஆஞ்சநேயர்** எனப் பெயர் அமைந்தது. இதனை இவர் தம் கூற்றிலேயே வைத்துக் கம்பர் விளக்கியருள்கின்றார்.

இருசியமுக மலையின் சாரலில் இராமபிரானும் இலக்குவனும் சீதையைத் தேடிக்கொண்டு வருவதை ஆஞ்சநேயர் காண்கின்றார்! இராமனும் இலக்குவனும் ஆகிய இருவரையும் கூர்ந்து நோக்கிக் கவனித்து, இவர்கள் தருமமும் தகவும் இவை எனும் தகையர்; கருணையின் கடல் அனையர்; மதனன் அஞ்சும் வடிவினர்; மறலி அஞ்சும் வலிமையர் என்றெல்லாம் உணர்ந்து கொள்கின்றார்! எதிரே சென்று நல்வரவு கூறுகின்றார். இராமபிரான் அதுகேட்டு இவரை நோக்கி 'எவ்வழி நீங்கியோய்? நீ யார்? என வினவுகின்றார். அதற்கு விடை கூறும் நிலையில், ஆஞ்சநேயர் தாம் வாயு தேவனுக்கு அஞ்சனையின் வயிற்றில் உதித்த மைந்தர் என்று கூறி, இராமபிரான்பால் அறிமுகம் செய்துகொள்ளுகின்றார்!

> "மஞ்செனத் திரண்ட கோல
> மேனிய! மகளிர்க் கெல்லாம்
>
> நஞ்செனத் தகைய ஆகி
> நளியரும் பனிக்குத் தேம்பாக்
>
> கஞ்சமொத் தலர்ந்த கண்ண!
> யான்காற்றின் வேந்தற்கு
>
> அஞ்சனை வயிற்றில் வந்தேன்!
> நாமமும் அநுமன் என்பேன்"
>
> —அநுமப் படலம்

எனவரும் கம்பர் பாடலினால், அஞ்சனையின் நேயத்திற்குரிய புதல்வரே ஆஞ்சநேயர் எனப் பெயர் பெற்றமை தெளியலாம்.

**மாருதி :**

வாயுதேவன் ஆகிய காற்றுக்கு **மாருதம்** என்று ஒரு பெயர் உண்டு. மெல்லிய இனிய காற்றினை 'மந்த மாருதம்' என்றும், வலிய கொடிய சூறைக் காற்றினைச் 'சண்டமாருதம்' என்றும் வழங்குதல் காணலாம். ஆதலின் மாருதம் என வழங்கும் காற்றுக்குரிய வாயு தேவனின் மைந்தர் ஆகிய இவருக்கு **மாருதி** என்றும் ஒரு பெயர் உண்டு.

நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு என்பன ஐம்பூதங்கள். அவற்றுள் நிலம் பொறுமைக்கும், நீர் தண்மைக்கும், நெருப்பு தெறுதலுக்கும், காற்று வலிமைக்கும், விசும்பு விரிவுக்கும் சிறந்தன என்பர்.

"மண் திணிந்த நிலனும்
நிலன்ஏந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
திமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்"

—புறநானூறு, 1

எனவரும் **முரஞ்சியூர் முடிநாகராயர்** பாடலில், வலிமை காற்றுக்குரிய சிறந்த பண்பு எனக் கிளந்து கூறப்பட்டிருத்தல் காணலாம். எனவே மாருதி வல்லமையும் ஆற்றலும் மிக்கவர் என்பது தெளியப்படும்.

**அனுமான் :**

இவர் பிறந்தபோதே, வானத்தில் உதித்துக் கொண்டிருந்த சூரியனை ஒரு கனி என்று நினைத்துப் பிடித்து உண்ண விரும்பிப் பாய்ந்து சென்றனர். அப்போது இந்திரன் தன் கைக் குலிசத்தால் இவரது கவுளில் அடித்தான். அதனால் இவர் மூர்ச்சை அடைந்து கீழே விழ, வாயுதேவன் கண்டு மிகவும் சீற்றமுற்று, உலகவுயிர்கள் எல்லாம் வருந்தும்படி, தன்னுடைய மூச்சினைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டான். அந்நிலையில் தேவர்களெல்லோரும் வருந்திப் பிரமன் பாற் சென்று முறையிட்டனர். அவர் தேவர்கள் அனைவரும் சூழப் போந்து, மயங்கி விழுந்துகிடந்த ஆஞ்சநேயரைக் கண்ணால் நோக்கி, கையால் எடுத்து அன்புடன் தடவிக் கொடுத்தார். ஆஞ்சநேயர் களைப்பும் மயக்கமும் தெளிந்து, கண்விழித்து நோக்கிக் களிப்புற்றுப் பிரமனைத் தொழுது நின்றார். பிரமனின் கட்டளைப்படி, வாயு தேவனின் மனமகிழும் வண்ணம், ஆஞ்சநேயர் ஆகிய குழந்தைக்குத் தேவர்கள் பலரும் ஒவ்வொரு வரம் கொடுத்தார்கள். அவர்களுள் தேவேந்திரன், 'என் வச்சிராயுதத்தால் அடிபட்டு **ஹநு** (கவுள்) முறிந்தபடியால், இன்று முதல் இவனுக்கு **அநுமான்** என்ற பெயர் வழங்கக் கடவது. என்னுடைய படை எதனாலும் இவனுக்கு ஊறு நேராது இருப்பதாக!' என்று கூறி, ஒரு பொற்றாமரை மாலையையும் வழங்கியருளினான்.

**'உருத்ரற் சிறந்த அநுமன்'**

இங்ஙனம் அநுமான் எனப் பெயர் பெற்ற ஆஞ்சநேயர், உருத்திரனின் அம்சமாக உதித்தருளியவர் என்று பெரியவர்கள் கூறுவர். பகைவர் அழித்தலில் உருத்திரனைப் போன்று, மிக்க சீற்றமும் ஆற்றலும் பெற்று விளங்குபவர் ஆஞ்சநேயர்.

"இரவி இந்திரன் வெற்றிக் குரங்கின்
அரசர் என்றும், ஒப்பற்ற உந்தி
இறைவன் எண்கினக் கர்த்தன் என்றும், நெடுநீலன்
எரிய தென்றும், ருத்ரற் சிறந்த
அநுமன் என்றும் ஒப்பற்ற அண்டர்
எவரும் இந்த வர்க்கத்தில் வந்து புனம்மேவ,
அரிய தன்படைக் கர்த்தர் என்று
அசுரர் தங்கிளைக் கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே!"

—திருப்புகழ்.

எனவரும் திருப்பரங்குன்றத்துத் திருப்புகழில், அருணகிரிநாத சுவாமிகள், சுக்கிரீவன் வாலி சாம்பவான் நீலன் **ஆஞ்சநேயர்** ஆகியோரை முறையே சூரியன் இந்திரன் பிரமன் அக்கினி **உருத்திரன்** ஆகியோரின் அம்சமாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

## நீடுவாழ்பவர் :

நெடுங்காலம் இறப்பின்றி வாழும் பேறு ஆகிய சிரஞ்சீவிப்பதம் பெற்றவர்கள் எழுவர் என நூல்கள் கூறும். அவர்கள் முறையே அசுவத்தாமர், மகாபலி, வியாசர், விபீஷணர், கிருபர், பரசுராமர், ஆஞ்சநேயர் என்பவர்கள் ஆவர். இலங்கையில் அசோகவனத்தில் இருந்த சீதைப் பிராட்டியினைத் தேடிக் கண்டறிந்து, இராமபிரானின் அடையாளச் சொற்களைக் கூறி, மோதிரத்தையும் காட்டி மகிழ்வித்தார் ஆஞ்சநேயர். அதனால் அவர்பால் எல்லையற்ற மகிழ்ச்சி எய்திய சீதைப்பிராட்டியார்,

" மும்மையாம் உலகம் தந்த
முதல்வற்கும் முதல்வன் தூதாய்ச்

செம்மையால் உயிர்தந் தாய்க்குச்
செயல்என்னால் எளிய துண்டே ?

அம்மையாய் அப்பன் ஆய
அத்தனே ! அருளின் வாழ்வே !

இம்மையே மறுமை தானும்
நல்கினை இசையோடு என்றாள். "

" பாழிய பணைத்தோள் வீர !
துணையிலேன் பரிவு தீர்த்த

வாழிய வள்ள லே ! யான்
மறுவிலா மனத்தேன் என்னின்,

ஊழிஓர் பகலாய் ஓதும்
யாண்டெலாம், உலகம் ஏழும்

ஏழும்வீ வுற்ற ஞான்றும்,
இன்றென இருத்தி ! என்றாள் ".

—உருக்காட்டுபடலம், 56—57.

இங்ஙனம் சீதைப்பிராட்டியினால் ஆஞ்சநேயர் சிரஞ்சீவியாக நீடினிது வாழ்தற்குரிய வரம் பெற்றமை காணலாம். இவ்வாறே இராவணன் எறிந்த வேல் விபீஷணன் மேற்பட்டால் அடைக்கலப் பொருளைக் காவாத பழியும் பாவமும் நேருமே என்று கருதி, அனைவரினும் முன் சென்று அதனைத் தன்மார்பில் ஏற்றுக்கொண்ட இலக்குவன் மூர்ச்சையுற்று மயங்கிக் கிடந்ததும், ஆஞ்சநேயர் விரைந்து சென்று மருத்துமலையைக் கொணர்ந்து அவரை உயிர்ப்பித்ததும் ஆகிய செய்திகளைச் சாம்பவான் கூறக் கேட்ட இராமபிரான்,

" பெற்றனன் உன்னை ! என்னை
பெறுதன ? பெரியோய் ! என்றும்

மற்றிடை யூறு செல்லா
வாய், உளை யாகுக !"

—வேல் ஏற்ற படலம், 46.

என ஆஞ்சநேயரை அகமகிழ்ந்து வாழ்த்தியருளிய செய்தியும், ஈண்டு அறிந்து இன்புறற்பாலது.

## சொல்லின் செல்வர்.

முதன்முதலாகக் கண்ட மாத்திரத்திலேயே இராமபிரான், ஆஞ்சநேயரின் உயர்வற உயர்ந்த பண்புகளையெல்லாம் உன்னித்து உணர்ந்துகொண்டு வியந்து மகிழ்ந்தார்.

" ஆற்றலும் நிறைவும் கல்வி
அமைதியும் அறிவும் என்றும்

வேற்றுமை இவனோ டில்லை "

—அனுமப்படலம், 19.

என்று இராமபிரான், ஆஞ்சநேயரின் அரும்பெரும் பண்புகளை வியந்து புகழ்ந்ததாகக் கம்பர் பாடியருள்கின்றார்.

ஆஞ்சநேயர் தமக்கு நல்வரவு கூறித் தன்னை அறிமுகம் செய்து கொண்ட இனிய உரைகளைக் கேட்ட இராமபிரான் மிகவும் மகிழ்ந்து, இலக்குவனை நோக்கி, ' உலகத்தில் இவன் கற்காத கலைகளும்

வேதக் கடல்களும் இல்லை என்பது இவனுடைய சொற்களினாலேயே தெரிகின்றதன்றோ? சொல்லின் செல்வன் எனத் திகழும் இவன் யாரோ? ஒருகால் இவன் பிரமனாக இருப்பானோ, அன்றி விடை ஏறும் உருத்திரன் தான் இவ்வுருவில் வந்துளனோ?' என வியந்து பாராட்டி மகிழ்கின்றார்.

"இல்லாத ; உலகத் தெங்கும்
ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே ; என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே !
யார்கொல்இச் சொல்லின் செல்வன் !
வில்லார்தோள் இளைய வீர !
விரிஞ்சனோ ? விடைவல் லானோ ?

—அநுமப் படலம், 63.

**சுந்தரன் :**

அழகு என்பது சிறப்பாக மூன்று வகைப்படும் என்பர் அறிஞர். அவைகள் முறையே ரூபசௌந்தரியம், ஞானசௌந்தரியம், குணசௌந்தரியம் எனப்படும். உருவ அழகு அறிவழகு பண்பழகு என்னும் இம் மூன்றுவகை அழகுகளும் ஆஞ்சநேயர்பால் அமைந்துள்ளன. ஆதலின் அவருக்குச் **சுந்தரன்** என்றும் ஒருபெயர் உண்டு. இராமாயணத்தில் மிகவும் சிறந்த ஒரு பகுதி **சுந்தரகாண்டம்** என்பது. அன்பர்கள் பலர் அதனை நித்தியபாராயணம் செய்வது உண்டு. சுந்தரகாண்டம் எனப் பெயர் அமைந்ததற்குரிய காரணங்கள் பலவற்றுள், ஆஞ்சநேயர் ஆகிய சுந்தரன் பற்றிய அரும் பெருஞ் செயல்களும் செய்திகளுமே மிகுதியாக இடம் பெற்றிருத்தலும் ஒரு காரணம் ஆகும்.

**கலையனைத்தும் கற்றோன் :**

ஆஞ்சநேயர் சூரியன்பாற் சகல கலைகளையும் தகவுறக் கற்றுத் தேர்ந்தவர். ஒருநிலையில் நில்லாமல், உலகமெலாம் எப்பொழுதும் ஓடிச் சுற்றிச் சுழன்று திரிந்து செல்லும் சூரியன்பால், அவனது வேகத்திற்குப் பின்னிடாமல் தானும் தொடர்ந்து பின்சென்று, கலைகளெல்லாம் கற்றுத் தேர்ந்தவர் ஆஞ்சநேயர். மாணவர்கள் பல கலைகளையும் பயின்று கொள்ளுதலில், எத்தகைய ஆர்வமும் வேகமும் அறிவின் திறனும் உழைப்பும் உடையவர்களாக விளங்குதல் வேண்டும் என்பதனை, ஆஞ்சநேயரின் வரலாறு விளக்குகின்றதெனலாம். சூரியனைத் தொடர்ந்து சென்று, அவன்பால் எல்லாக் கலைகளையும் ஆஞ்சநேயர் கற்றறிந்த செய்தியினைப் பின்வரும் கம்பராமாயணப் பாடல் குறிப்பிடுதல் காணலாம்.

ஆதலால் இவன்வரவு நல்வரவே
என உணர்ந்தேன் ; அடியேன் உன்றன்
வேதநூல் எனத்தகைய திருவுளத்தின்
குறிப்பறியேன் என்று விட்டான் ;
காதல்நான் முகனுனும் கணிப்பரிய
கலையனைத்தும் கதிரோன் முன்
சென்று
ஓதினன் ; ஓதநீர் கடந்துபகை
கடிந்துலகை உய்யச் செய்தான் !"

—விபீடணன் அடைக்கலம், 105

அநுமானின் விசுரூவபக் காட்சியைக் கண்ட இராமன் வியந்து கூறுவதாக அமைந்த பின்வரும் செய்யுளும், அநுமான் கதிரவன்பாற் கல்வி கற்ற செய்தியினைத் தெற்றென உணர்த்தும்.

கண்டிலன், உலகம் மூன்றும்
காலினாற் கடந்து கொண்ட
புண்டரி கக்கண் ஆழிப்
புரவலன், பொலங்கொள் சோதிக்
குண்டல வதனம் என்றால்
கூறலாம் தகைமைத் தொன்றோ ?
பண்டைநூல் கதிரோன் சொல்லப்
படித்தனன் படிவம் அம்மா !"

—அநுமப் படலம், 78.

**சிறிய திருவடி :**

ஆஞ்சநேயர்க்குச் சிறிய திருவடி என்றும் ஒரு பெயர் உண்டு. இராம பிரான்மேற் போர்புரிய இராவணன் தேர் செலுத்திப் போந்தான். அவனை நோக்கி இராமபிரான் நடந்து செல்லுதலைக் கண்டார் ஆஞ்சநேயர். 'இராவணன் தேரின்மேல் இருக்க, தாங்கள் நிலத்தில் கீழே நிற்பது கூடாது' என்று கூறி, 'மெல்லியன் எனினும் ஏறுநீ ஐய! என்னுடைத் தோளின்மேல்' என்று வேண்டி, அங்ஙனமே இராமபிரானைத் தம்முடைய தோள்களினால் தாங்கப் பெற்றார் ஆஞ்சநேயர். அப்போது ஆஞ்சநேயர் திருப்பாற்கடலைப் போன்றார்; இராமபிரான் திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால் போன்றார். ஆஞ்சநேயர் வேதத்தைப் போன்றார்; இராமபிரான் வேதாந்தம் ஆகிய உபநிஷதங்களினால் விளக்கப்பெறும் ஞானசொரூபனாகிய முழுமுதற் பொருள் எனத் திகழ்ந்தார். அதுகண்டு அவதார லீலையில் திருமாலைத் தாங்கும் பேறு தனக்குக் கிடைத்திலதே என்று கருடாழ்வான் நாணினான். இராம ஆஞ்சநேயர்களின் சுமையினைத் தாங்க முடியாமல் ஆதிசேடன் தலை நடுக்குற்றான்.

"மாணி யாய்உல களந்தநாள்
அவனுடை வடிவை
ஆணி யாய்உணர் மாருதி
அதிசயம் உற்றான் ;
காணி யாகப்பண் டுடையனும்
ஒருதனிக் கலுழன்
நாணி னான் ; மற்றை அனந்தனும்
தலைநடுக் குற்றான்."

"ஓதம் ஒத்தனன் மாருதி ;
அதனகத் துறையும்
நாதன் ஒத்தனன் என்னிலோ,
துயில்கிலன் நம்பன் ;
வேதம் ஒத்தனன் மாருதி ;
வேதத்தின் சிரத்தின்
போதம் ஒத்தனன் இராமன்;
வேறிதின் இல்லை பொருவே !"

—முதற்போர் புரிபடலம், 220—221.

ஆஞ்சநேயர்க்குச் சிறிய திருவடி எனப் பெயர் வழங்குதலைப் **பிறிதின் நவிற்சி** என்னும் அணிநலன் அமையப் பின்வரும் கம்பராமாயணச் செய்யுள் ஒன்றும் சுவைமிக விளக்குதல், அறிந்து மகிழ்தற்குத் தகும்.

பொருவரு வேலை தாவும்
புந்தியான், புவனம் தாய
பெருவடி வுயர்ந்த மாயோன்
மேக்குறப் பெயர்ந்த தாள்போல்,
உருவறி வடிவின் உம்பர்
ஓங்கினன்; உவமை யாலும்
திருவடி என்னும் தன்மை
யாவர்க்கும் தெரிய நின்றான்.

—மயேந்திரப் படலம், 23.

திருமாலைத் தன்னுடைய தோள்களின் மேல் என்றும் சுமக்கும் பேற்றினை, முன்னமே தனக்குக் காணியாட்சியாகப் பெற்றிருப்பவர் கருடாழ்வார் ஆதலின், அவருக்குப் **பெரிய திருவடி** என்றும்; அவரை நோக்கப் பின்னை இராமாவதாரத்தில் அப்பேற்றைப் பெற்ற இளையவர் ஆகிய ஆஞ்சநேயர்க்குச் **சிறிய திருவடி** என்றும் பெயர்கள் வழங்குவன ஆயின.

**உயர்வற உயர்ந்தோன் :**

'ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன' என்பது **தொல்காப்பியம்**. எனவே மிகவும் உயர்ந்த குணநலங்களை யுடைய உயர்ந்த பெரியவர்கள் தாம் தூதுவர்களாகச் செல்லமுடியும் என்பது தெளியலாம். **திருவள்ளுவர்** 'அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை ஆகிய மூன்று பண்புகளும் தூதுவர்க்கு இன்றியமையாதன' என்பர். தூய்மை துணைமை துணிவுடைமை ஆகிய குணங்களும் தூதுவர்க்கு வேண்டப்படும். இத்தகைய குணநலங்கள் எல்லாம் **இராமதூதர்** ஆகிய ஆஞ்சநேயர் இடத்தில் சிறக்க அமைந்திருந்தன என்று சொல்லவும் வேண்டுமோ ?

வீரர்களிலெல்லாம் பெருவீரர் ஆகிய ஆஞ்சநேயர், கிருஷ்ணாவதாரத்தில் துவாபரயுகத்தில் பாரதப்போர் நிகழ்ந்த பொழுது, கண்ணபிரானின் கட்டளைப் படி அருச்சுனனுக்குக் காட்சி யளித்து, என்றும் எங்கும் வெற்றி பெறுதற்கு ஏதுவாகிய **விஜயப்ரதம்** என்னும் மந்திரத்தை உபதேசித்து, அவனுடைய தேரிற் கொடியாகவும் இருந்து, உதவி புரிந்தருளினார்.

**தெய்விக புருஷர் :**

ஆஞ்சநேயர் திருமணம் செய்து கொள்ளாமல், பிரமசரியவிரதம் கடைப் பிடிப்பவர். **மாணி** (பிரமசாரி)யாம் படிவம் உடையரேனும், இவ்வுலகுக் கெல்லாம் **ஆணி** (உரையாணி, அச் சாணி)யாம் சிறப்பின் மிக்கவர்! இராம பிரானை இமைப்பொழுதும் மறவாமல், அவர்தம் திருநாமத்தினை இடைவிடாது செபித்துக்கொண்டே இருப்பவர். பிரமாத்திரத்தினால் கட்டப்பெற்று மயங்கியிருந்த நிலையிலும், இவர் 'இராமன் நாமம் அயர்த்திலர்'. இராம கதை எங்கெங்கே படிக்கப் பெறுகின்ற றதோ, அங்கங்கெல்லாம் எழுந்தருளி யிருந்து கேட்டு மகிழ்பவர்! **இராம** பிரானால், மிகவும் மதிக்கப் பெற்றவர்.

> "முன்ன தாக்கிய மூவுலகு
> ஆக்கிய முதலோன்
> பின்ன தாக்கிய பதம்நினக்கு
> ஆக்கினன் பெற்றாய்"

எனப் பிரமபதம் அளிக்கப் பெற்றவர்! நாட்படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் கோட்படாப் பதமே, ஆஞ்சநேயர் ஆகிய தெய்விக புருஷராகப் போந்தருளியது!

**முடிவுரை :**

ஆஞ்சநேயர் ஒரு சிறந்த தெய்விக புருஷர், ஒப்புயர்வற்ற அருளாளர். தவ ஒழுக்கமும் பக்திநலமும் சான்றவர். அறிவும் கல்வியும் ஆற்றலும் மிக்கவர். இணையற்ற பிரமசரிய விரதத்தினர். அன்பர்களுக்கு எளிவந்து இன்னருள் புரியும் இயல்பினர், அவரை அன்புடன் வழிபடுபவர்களுக்கு, அவரைப் போன்றே வீரம் தீரம் ஞானம் பக்தி ஒழுக்கம் பண்பு நலம் முதலியன விளையும் என்பதில் ஐயமில்லை.

—ஆசிரியர்

---

## ஆஞ்சநேயர் துதி

அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி,
அஞ்சிலே ஒன்று ஆறாக, ஆரியற் காக ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு, அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான், அவன் எம்மை அளித்துக் காப்பான்!

(பொருள்) ஐம்பூதங்களில் ஒன்றாகிய வாயு தேவன் தன் மைந்தனைப் பெற்றெடுத்தவனும், ஐம்பூதங்களில் ஒன்றாகிய நீர் ஆகிய கடலைத் தாண்டி, ஐம்பூதங்களில் ஒன்றாகிய வானம் தனக்கு வழியாக அமைய, இராமன் ஆகிய மேலோன் பொருட்டுச் சென்று, ஐம்பூதங்களில் ஒன்றாகிய நிலம் தன்னிடத்துப் பெற்ற சீதைப் பிராட்டியைக் கண்டறிந்து, பகைவர்களின் ஊர் ஆகிய இலங்கையில், ஐம்பூதங்களில் ஒன்றாகிய நெருப்பை வைத்து எரித்தவனும் ஆகிய ஆஞ்சநேயர், அன்பர்களாகிய நமக்குப் பல நலங்களை யும் கொடுத்து, நம்மைக் காப்பாற்றுவார்.

[ஆறு - வழி. ஆரியன் - மேலோன், இராமன். அணங்கு - பெண்தெய்வம், சீதை.]

—ஆசிரியர்.

# "ஈசன் இயற்கை"

**முன்னுரை :**

இறைவன் நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டருள்பவன். நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே, கடவுள் புக்குநின்று எழுந்தருளி விளங்குகின்றார். இறைவன் தன்னை நினைப்பவர்களைத் தானும் நினைந்து அருள்புரிகின்றான். தன்னை நினையாதவர்களைத் தானும் நினையாமல் இருந்து விடுகின்றான். கம்பி முழுவதிலும் பரவி நிற்பினும், சொடுக்கி (switch) யினைத் தட்டும்போது மட்டுமே மின்னாற்றல் வெளிப்பட்டு மின்னொளியினை நல்குகின்றது; சொடுக்கியினைத் தட்டாதபோது, மின்னாற்றல் மின்னொளியினை நல்காமல் வாளாதே இருக்கின்றது. அதுபோலவே, உயிர்களின் உள்ளங்களி லெல்லாம் உயிர்க்குயிராய் எழுந்தருளி விளங்கும் இறைவன் தன்னை நினைக்கும் பொழுது கூடியும், நினையாத பொழுது நீங்கியும் நின்று, உயிர்களுக்கு அருள்புரிந்து வருகின்றான்.

**ஈசன் இயல்பு :**

தன்னை உணர்விறால் உன்னி, அன்புடன் நினைந்து உருகும் அடியவர்களுக்கு, இறைவன் தேனும் பாலும் அமுதமுமாகத் தித்திக்கின்றான்! நினைத்தொறும் நினைத்தொறும் அன்பர்களின் உள்ளத்தில் ஆனந்தத் தேனைச் சொரிகின்றான் ஆண்டவன்! "காயத்துள் **அமுது ஊற ஊறக்** கரையிலா இன்ப உணர்வைக் **கண்டுகொள்மின்**" எனக் காட்டியருள்கின்றான் கடவுள்! பன்னில் ஊறும் பழத்தினும் இன்சுவையாய் அன்பர்களின் உள்ளத்தில் ஊறி, அளவிலாக் களிப்பினை அளித்தருள்கின்றான் எம் பெருமான்! இறைவனைத் தைலதாரை போல **இடைவிடாமல்** சிந்தித்துத் தியானித்தல் வேண்டும் என்பது எல்லாச் சமயங்களும் கூறும் முடிவான கருத்து,

> "இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
> எங்கெழுந் தருளுவ தினியே"

என மணிவாசகப் பெருந்தகையும் திருவாய் மலர்ந்தருளுதல் காணலாம்.

**தேவாரப் பாடல் :**

இங்ஙனம் இறைவனின் சிறந்த அருளியல்பினை, செந்தமிழ் நாட்டுத் தெய்வச் சான்றோர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசர், தமது தேவாரப் பாடல் ஒன்றில் விளக்குகின்றார்.

> "பன்னில் ஊறும் பழத்தினும் இன்சுவை
> என்னில் ஊறி எனக்கே களிதரும்
> உன்னில் உன்னும் உறைவிடில் விட்டிடும்
> என்னுள் ஈசன் இருந்த இயற்கையே"

**அச்சில் இல்லை :**

திருநாவுக்கரசர் பெருமான் பாடியருளிய இந்தத் தேவாரப்பாடல், அச்சில் இடம் பெறாமல் விடுபட்டுப் போயிருக்கின்றது. எத்தனையோ பல தேவாரப் பதிப்புக்கள் இந்நாளில் வெளிவந்துள்ளன ஆயினும், அவற்றில் இப்பாடல் இடம்பெறாமல் தவறிப் போய்விட்டிருக்கின்றது. எனினும் இத்திருப்பாடல், திருநாவுக்கரசரின் சிறந்த தேவாரப் பாடல்களுள் ஒன்று என்பதும், இதனை நம் முன்னைச் சான்றோர்கள் பலரும் படித்துச் சுவைத்து மகிழ்ந்து பாராட்டியுள்ளனர் என்பதும், நமக்குப் பெருமகிழ்ச்சியை விளைவிக்கின்றன.

**பாம்பன் சுவாமிகள் :**

இத் திருப்பாடலை ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அவர்கள், தாம் அரிதின் ஆராய்ந்து எழுதியுள்ள **'சைவ சமய சரபம்'** என்னும் நூலில் மேற்கோள் காட்டியிருக்கின்றார்கள். **'தகர வித்தை'** என்னும் அரிய பொருள்

பற்றி விளக்கிக் கொண்டு வருங்கால், இத்தேவாரத் திருப்பாடல் ஸ்ரீமத் சுவாமிகளால் மேற்கோளாக எடுத்து ஆளப்பட்டுள்ளது.

**சுவாமிநாத பண்டிதர் :**

இங்ஙனம் ஸ்ரீமத் பாம்பன் குமரகுரு தாச சுவாமிகள் அவர்களால் 1908 ஆம் ஆண்டில் வெளிவந்த **சைவ சமய சரபம்** என்னும் நூலின் முதற் பதிப்பிலேயே மேற்கோளாக எடுத்தாளப் பெற்றிருந் தும், இச் சிறந்த தேவாரப் பாடல் இதற்குப் பின்னர் வெளிவந்த எத்தனையோ பல தேவாரப் பதிப்புகளிலும் விடுபட்டுப் போயிருத்தல் மிகவும் வியப் பிற்குரியதாகத் திகழ்கின்றது. எனி னும் 1911 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் திரு. சுவாமிநாத பண்டிதர் அவர்களால் வெளியிடப்பெற்ற அடங்கன் முறைப் பதிப்பில், இப்பாடல் 'அனுபந்தம்' என் னும் பிற் சேர்க்கையாகத் தரப்பெற் றிருப்பது ஒரு வகையில் நமக்கு ஆறுதல் அளிக்கின்றது.

**தாயுமானவர் :**

திருநாவுக்கரசர் அருளிச் செய்த இவ் வரிய இனிய பாடலை, வேதாந்த சித் தாந்த சமரச ஞான வித்தகச் செல்வர் ஆகிய தாயுமான சுவாமிகள் (கி. பி. 1610-1661) தாமும், மிகவும் எடுத்துச் சிறப்பித் துரைத்து மகிழ்விக்கின்றார். தாயுமான சுவாமிகள் பாடலில், **அறிஞருரை** என்னும் பகுதியில்,

" உன்னிலுன்னும் என்ற
உறுமொழியால் என்இதயம்
தன்னிலுன்னி நன்னெறியைச்
சாரும் நாள் எந்நாளோ ?"

எனவரும் **'எந்நாட் கண்ணியில்'**, இச் சிறந்த இனிய தேவாரப்பாடல் எடுத் தாளப் பெற்றிருத்தல் காணலாம். தாயுமானவர் இப்பாடலை எடுத்தாண் டிருக்கும் செய்தியினை, நமக்கு விளக்கி யருளியவர் பாம்பன் சுவாமிகளே யாவர்.

**அருள்நந்தி சிவம் :**

தாயுமான சுவாமிகளைப் போலவே, நம் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர் களுள் ஒருவரும், சிவஞான சித்தியார் என்னும் ஒப்புயர்வற்ற செந்தமிழ்த் தத்துவ நூலினை இயற்றியருளியவரும் ஆகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமி கள் (கி பி 13 ஆம் நூற்றாண்டு), தாம் பாடியருளிய இருபா இருபஃது என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலிலும், இப் பாடலை மேற்கோளாக எடுத்தாண்டுள் ளார்.

எண்டிசை விளங்க இருட்படாம் போக்கி
முண்டகம் மலர்த்தி மூதறிவு அருளும்
மேதினி யுதய மெய்கண்ட தேவ !
கோதில் அமுத ! குணப்பெருங் குன்ற !
உன்னின் ஆர்தலும் அகறலும்
என்னைகொல் ?
உன்னில் உன்னி உறுவிடிற் பெயர்குவை
என்னும் அதுவே நின்னியல்பு எனினே,
வியங்கோ ளாஎனும் ஆகி இயங்கலும்
உண்டெனப் படுவை .....

எனவரும் இருபா இருபஃது என்னும் சைவ சித்தாந்த நூலின் 12ஆம் பாட லில், 6—7ஆம் வரிகளில் " **உன்னில் உன்னி உறுவிடிற் பெயர்குவை** என் னும் அதுவே நின்னியல்பு எனினே" என அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அநுவாதம் செய்து மேற்கோளாகக் காட்டி எடுத்து மொழிந்திருப்பது,

" உன்னில் உன்னும்
உறுவிடில் விட்டிடும்
என்னுள் ஈசன்
இருந்த இயற்கையே "

எனவரும் இவ்வழகிய தேவாரப் பாட லின் இரண்டு வரிகளையும் நினைவு கூர்ந்தே யாகும்.

# திருவாய் மொழி

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம் 343)

*நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்*
*நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்*
*என்றும்ஓர் இயல்வினர் எனநினைவு அரியவர்*
*என்றும்ஓர் இயல்வொடு நின்றஎம் திடரே*

(பொழிப்புரை) நிற்பவர்கள் இருப்பவர்கள் கிடப்பவர்கள் திரிபவர்கள் ஆக உள்ள மக்கள் எல்லோருடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலிய தொழில்கள் எல்லாம், எம்பெருமானின் வசமேயுள்ளன! அங்ஙனமே நில்லாதவர்கள் இராதவர்கள் கிடவாதவர்கள் திரியாதவர்கள் ஆக உள்ள மக்கள் எல்லோருடைய நில்லாமை இராமை கிடவாமை திரியாமை முதலிய தொழில்கள் எல்லாமும் எம்பெருமானுடைய வசமேயுள்ளன! எப்போதும் ஒரேவிதமான இயற்கையையுடையவர் என்று நினைக்க முடியாதவரும் அவரே. அவர் தாம் யாவர் என்னில், எப்போதும் ஒரே விதமான இயற்கையோடு கூடியிருக்கின்றவராய், திடமான பிரமாணத்தினால் ஸித்திப்பவராயுள்ள எம் கடவுள்.

(கருத்து) லீலா விபூதியினுடைய பிரவிருத்தி நிவிருத்தி ஆகிய இரண்டிற்கும் இறைவனே காரணனாக விளங்குகின்றான். முதலடியில் பிரவிருத்தியும், இரண்டாம் அடியில் நிவிருத்தியும் சொல்லப்பெற்றன. இறைவனின் இயல்புகள் எல்லையற்றன ஆகையால், எத்தனை நெடுங்காலம் ஆராய்ந்தாலும் இத்தகைய இயல்பினன் என்று, நெஞ்சால் நினைக்கவும்கூட முடியாமல் நிற்றலின், **"என்றும் ஓர் இயல்வினர் என நினைவரியவர்"** என்றார். இறைவன் பலபல இயல்பினனாயினும், என்றும் ஓர் இயல்வினர் என நினைவரியவர் என்று சொல்லப்பட்ட இயல்பு மட்டும் என்றைக்கும் மாறாதே ஒருபடிப்பட்டிருக்கும் ஆதலின், **"என்றும் ஓர் இயல்வொடு நின்ற எம் திடர்"** என்றார். திடமான பிரமாணம் ஆகிய வேதத்தினால் உண்டென உணரப் படுபவர் ஆதலின், **"திடர்"** என்றது இறைவனை. **"எம் திடர்"** என்றது உரிமைத் திறமும் அன்பு மிகுதியும் பற்றி.

---

**நமச்சிவாயத் தம்பிரான் :**

இவ்வுண்மையைப் பிற உரையாசிரியர்கள் நுண்ணிதின் உணர்ந்து எடுத்துக் காட்டாமலே போயினர் எனினும், திருவாவடுதுறை ஆதீனத்து நமச்சிவாயத் தம்பிரான் அவர்கள் மட்டும், தமது நுண்மாண் நுழைபுலம் தோன்றுமாறு, தாம் இயற்றிய இருபா இருபஃது உரையில் இவ்வரிகளுக்குப் பொருள் விளக்குங்கால், இத்தேவாரப் பாடலை முழுவதாக எடுத்துக் காட்டி இன்புறுத்துகின்றார்கள். மேலும் இப்பாடல் தேவாரம் என்றும் அவர்களாற் கிளந்து கூறப் பெற்றுள்ளமை, நமக்குத் தெளிவும் மகிழ்வும் பயக்கின்றது.

**முடிவுரை :**

இதுகாறும் கூறியவாற்றால் யாழ்ப்பாணம் திரு. சுவாமிநாத பண்டிதர், ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் நமச்சிவாயத் தம்பிரான், தாயுமான சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் முதலிய பலரானும், நாம் மேலே கண்ட திருநாவுக்கரசர் திருப்பாடல் பெரிதும் போற்றப் பெற்றிருக்கும் செய்தி செவ்விதில் தெளியப்படும்.

எனவே, இச்சிறந்த இனிய தேவாரத் திருப்பாடலை இனிவரும் திருமுறைப் பதிப்புக்களிலேனும் சேர்த்துப் பதிப்பிட்டுப் பயன் கொள்ளுதல், சைவத் தமிழுலகிற்கு இன்றியமையாத கடப்பாடாகும்.

—ஆசிரியர்.

பிரவிருத்திக்கேயன்றி நிவிருத்திக்கும் கூட எம்பெருமானே காரணம் என்றல் யாங்ஙனம் எனின், "சுவர்க்கத்தில் நின்றும் விழுகின்ற **திரிசங்கு** மன்னனை ஆற்றலுடையோன் நிற்கச் சொல்ல நிற்க வேண்டிற்றுக் கண்டாயே; அப்படியே நிவிருத்திக்கும் எம்பெருமான் வேணுங் காண்" என்று **எம்பார்** அருளிச் செய்தனராம். (6)

*திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை*
*படர்பொருள் முழுவது மாய்அவை யவைதொறும்*
*உடல்மிசை உயிர்எனக் கரந்தெங்கும் பரந்துளன்*
*சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே*

(பொழிப்புரை) வலிமை மிக்க ஆகாயம், நெருப்பு காற்று நீர் நிலம் ஆகிய இவற்றை ஆதாரமாகக்கொண்டு, விரிந்து படர்ந்துள்ள பொருள்கள் யாவும் தானாகும்படி அவற்றை உண்டாக்கி, அந்தந்தப் பொருள்கள் எல்லாவற்றிலும் உடலின்கண் உயிரானது பரவி நிற்பதுபோல, மறைந்து உள்ளும் புறம்பும் வியாபித்து, ஒளி மிகுந்த வேதங்களில் உள்ளவனை எம்பெருமான், ஊழிக் காலத்தில் இவற்றையெல்லாம் தன் பக்கலிலே யாக்கிக்கொள்ளும் தேவன் ஆவான்.

(குறிப்புரை) இப்பாசுரம் **விசிஷ்டாத்வைதம்** என்னும் வைஷ்ணவ சித்தாந்தத்தின் கோட்பாட்டினைச் சாரமாகச் சுருக்கி விளக்குவதாகும்.

ஐம்பூதங்கள் முதலாக உள்ள எல்லாப் பொருள்களுக்கும் எம்பெருமானே **உபாதான காரணம்** என்பது. "திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை படர் பொருள் முழுவதுமாய்" என்னும் வரிகளினல் உணர்த்தப்பெற்றது.

'திட விசும்பு' என்பதிலுள்ள 'திடம்' என்னும் அடைமொழி ஏனைய பூதங்களையும் சுட்டுவதாகக் கொள்ளலாம்; காரியங்கள் அழிந்துபோனாலும் காரணங்களான பூதங்கள் சிறிது காலம் அழியாதிருத்தல் பற்றி. உலகாயதன் முதலான சிலர், 'பூதங்கள் நான்கே. ஆகாயம் என்பதொன்றில்லை' எனக் கூறுதலின், அதனை மறுத்து 'ஆகாசம் என்பதொன்று திடமாக உண்டு' என நிலை நாட்டுகின்றபடியுமாம்.

சரீரத்தில் ஆன்மாவானது மறைந்திருக்குமாறு போலே, ஒவ்வொரு பொருளிலும் மறைந்திருந்து எல்லாவற்றின்கண்ணும் தனித்தனியே குறைவற வியாபித்திருப்பவன் எம்பெருமான்! அதனால் 'அவையவைதொறும் கரந்து எங்கும் **பரந்துளன்**' என்றார்.

ஒருவரும் அறிய ஒண்ணாமல் மறைந்து நின்று சரீரத்துக்கு ஆன்மா தாரகனாய் நியாமகனாய், சேஷியாய் இருப்பது போலே, அந்தந்தச் சரீரத்திலுள்ள ஆன்மாக்களுக்கெல்லாம் எம்பெருமான்தான் தாரகனாய் நியாமகனாய் சேஷியாய் மறைந்து நின்று விளங்குகின்றான். எனவே அவ்வியல்பினை "**உடல்மிசை உயிர்** எனக் கரந்து எங்கும் பரந்துளன்" எனக் குறிப்பிட்டருளினர்.

இங்ஙனம் அறுதியிட்டு உறுதியாகக் கூறுதற்குரிய பிரமாணம் வேதங்களே என்பதனை வலியுறுத்தச் "சுடர் மிகு **சுருதியுள் உளன்**" என்றார். சுருதி வேதம்; மிகு சுருதி வேதாந்தம்; சுடர் மிகு சுருதி **நாராயணாநுவாகம்** என்பர் பெரியோர்.

மேற்பாசுரங்களில் உலகத்தைத் தோற்றுவித்தலும் காத்தலும் எம்பெருமானுடைய செயல்களே என்றார். இப்பாசுரத்தில் ஒடுக்குதல் ஆகிய ஸம்ஹாரமும் அவனுடைய செயல் என்கின்றார். "**இவையுண்ட சுரனே**" என்பது உலகங்களையெல்லாம் ஒடுக்கியருளும் தேவனும் இவனே என்கின்றது. **சுரன்** — தேவன். பிரளய காலத்தில் எல்லா உலகங்களையும் தன் திருவயிற்றிலே வைத்து அடக்கி, எம்பெருமான் ஆலந் தளிரிலே பள்ளி கொள்ளுகின்றான் என்பது நூன் மரபும் கொள்கையும் ஆகும். (7)

சுரர்அறி வருநிலை விண்முதல் முழுவதும்
வரன்முத லாயவை முழுதுண்ட பரபரன்
புரம்ஒரு மூன்றெரித்து அமரர்க்கும்
அறிவியந்து
அரன்அயன் எனஉலகு அழித்தமைத் துளனே

(பொழிப்புரை) பிரமன் முதலிய தேவர்களுக்கும் அறிய ஒண்ணாத நிலையையுடையவனாய், மூலப் பிரகிருதி முதலாகிய எல்லாப் பொருள்களுக்கும் சிறந்த காரணனாய், அவற்றையெல்லாம் ஊழிக் காலத்திலே திருவயிற்றிலே வைத்துக் காப்பவனாய் உள்ள மிக மேலான தலைவன், உருத்திர மூர்த்தியின் உருவத்தைத் தரித்தவனாகி ஒப்பற்ற முப்புரங்களை எரித்தும், உலகங்களை அழித்தும்; பிரமன் வடிவில் நின்று தேவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்தும், உலகங்களைப் படைத்தும், அவர்களுக்குள்ளே உயிர்க்குயிராக விளங்குகின்றான்.

**(குறிப்புரை)** காத்தற்றொழில் ஒன்று மட்டுமேயன்றி, ஏனைப் படைத்தல் அழித்தல்களுக்கும்கூட, எம்பெருமானே காரணம் என்கின்றார். **விண்** - மூலப் பிரகிருதி. **வரன் முதல்** - சிறந்த காரணமாக இருப்பவன். பரம் - மேலான. **பரபரன்** - மிகமேலான தலைவன். தேவர்களுக்கு நான்முகன் ஞானம் அளித்தனனாயினும், அந்நான்முகனைத் தனது திருநாபிக் கமலத்தில் தோற்றுவித்து அவனுக்கு வேதங்களை உபதேசித்து ஞானம் அளித்தருளினன் எம்பெருமான் என்று சுவேதாசுவதர உபநிடதம் கூறும். (8)

உளன்எனில் உளன்அவன் உருவம்இவ்
வுருவுகள்
உளனலன் எனில்அவன் அருவம்இவ்
அருவுகள்
உளன்என இலன்என இவைகுணம்
உடைமையின்
உளன்இரு தகைமையொடு ஒழிவிலன்
பரந்தே

(பொழிப்புரை) இறைவன் உண்டு என்று வைதிகர்கள் கூறுவதுபோலக் கூறினாலும், இறைவன் இல்லை என்று நாத்திகர்கள் கூறுவது போலக் கூறினாலும், இறைவன் உண்டு என்பதாகவே தேறும். உளன் என்றும், இலன் என்றும் சொல்லப்படுகின்ற உண்மை இன்மைகளுக்குப் பற்றுக்கோடாகும் தன்மையினாலேயே, உருவமுடையனவாகவும், உருவமில்லாதனவாகவும் இருக்கின்ற உலகப் பொருள்கள் யாவும், அப்பெருமானுக்குப் பருவுடலும் நுண்ணுடலும் ஆகும். உருவமும் அருவமுமாகிய தூல சூக்குமப் பிரபஞ்சங்களை வடிவாகக் கொண்டு, எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் உள்ளவனாகவே அவன் தெளியப்படுவான்.

(குறிப்புரை) இப்பாசுரம், ஸர்வ சூந்ய வாதியை மறுத்தொழிக்கின்றது. இப்பாசுரத்தின் கருப்பொருளை உட்கொண்டே, இராமாநுஜர் தாம் இயற்றியருளிய பிரம்ம சூத்திரம் ஸ்ரீ பாஷ்யத்தில் சூந்யவாதத்தைக் கடிந்து மறுத்தெழுதியிருப்பதாகப் பெரியோர்கள் கூறுவர்.

'இறைவனுளன்' என்று கூறினால் எங்ஙனம் இறைவனின் உண்மை தேறுமோ, அங்ஙனமே 'இறைவன் உளன் அலன்' என்று கூறினாலும் இறைவனுண்மை தேறும். ஒரு பொருளையே உண்மை இன்மை என்னும் வாய்பாடுகளாற் கூறியவாறு அன்றிப் பிறிதில்லை என்பது கருத்து.

பரந்ததண் பரவையுள் நீர்தொறும்
பரந்துளன்
பரந்தஅண் டம்இதென நிலவிசும்பு
ஒழிவறக்
கரந்தசில் இடம்தொறும் இடந்திகழ்
பொருள்தொறும்
கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட
கரனே

**(பொழிப்புரை)** எங்கும் பரவியுள்ள குளிர்ந்த கடலினுள், நீரின் நுண்ணிய அணுத்தோறும் விரிவான அண்டம் இது என்று சொல்லும்படி நெருக்குண்ணாமல் பரவி நிற்பவனாய், இங்ஙனமே நிலவுலகிலும் மேலுலகங்களிலும் ஒரு சிறிதும் நீங்குதல் இல்லாமல், அதிநுட்பமாய்

அற்பமாக உள்ள இடங்கள் தோறும் அவ்வவ் இடங்களிலே விளங்குகின்ற உயிர்ப்பொருள்கள் தோறும், ஒருவரும் அறியாதபடி எல்லா இடங்களிலும் பரவி நிற்கின்றான். அவனே இவ்வுலகங்களையெல்லாம் ஊழிக் காலத்தில் தனக்குள்ளே ஒடுக்கிக் கொண்டு, தான் ஒருவன் மட்டுமே நிலைத்திருக்கும் எம்பெருமான் ஆவன்.

**(குறிப்புரை)** ஸர்வ வியாபகத்துவமே வேதங்களில் நாராயண நாமத்தின் தேர்ந்த பொருள் என்பதனை இப்பாசுரம் வற்புறுத்துகின்றது. கரன்-திடமாக உள்ளவன்; திடமான பிரமாணம் ஆகிய வேத வேதாந்தங்களினால் தெளியப்படுபவன். அணுத்தன்மை வாய்ந்த பொருள்களில் விபுத்தன்மை வாய்ந்த பொருள் குறையறப் பரவி நிற்பது இயலுமோ? என்பதற்கு விடை போல, "**இவை யுண்ட கரனே**" என்னும் இனிய தொடர் அமைந்துள்ளது. (10)

*கரவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை*
*வரன்நவில் திறல்வலி அளிபொறை யாய்நின்ற*
*பரன்அடி மேல்குரு கூர்ச்சட கோபன்சொல்*
*நிரல்நிறை ஆயிரத் திவைபத்தும் வீடே*

**(பொழிப்புரை)** திடமான ஆகாசம் நெருப்பு காற்று நிலம் ஆகிய இந்த பூதங்கள் ஐந்தின்மீதும் உள்ள, சிறந்த ஒலித்தல் எரித்தல் வல்லமை தண்மை பொறுமை ஆகிய இயல்புகளெல்லாம், தன்வயமாகக் கொண்டிருக்கின்ற தலைவனுடைய திருவடிகளின்மேல், குருகூர் என்னும் திருநகரியில் அவதரித்த நம்மாழ்வார் அருளிச் செய்த வரிசை முறையான ஆயிரம் பாடல்களிலே இப்பத்துப் பாடல்களும், வீடுபேற்றைப் பயப்பன ஆகும்.

**(குறிப்புரை)** இப்பாசுரம் கற்பார்க்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகின்றது. பரன்-மேலானவன், தலைவன். இப்பாடலின் முன் இரண்டு அடிகள். பரனுக்கு அடைமொழிகளாக வந்துள்ளன. முதல் அடியில் ஐந்து பூதங்களும், இரண்டாம் அடியில் அவற்றிற்குரிய இயல்புகளும் கூறப்பெற்றன. ஐம்பூதங்களைப் படைத்து, அவற்றிற்குரிய பண்புகளையும் அமைத்து, அவைகளை யெல்லாம் தான் வகுத்தவாறே இயங்குமாறு இறைவன் செய்தருள்கின்றான் ஆதலின் "...**இவையாய் நின்ற பரன்**" என்றார். வரன-சிறந்த, நவில்-ஒலித்தல், திறல்-எரித்தல், வலி-வலிமை, வல்லமை. அளி-தண்மை, குளிர்ச்சி, பொறை-பொறுமை.

இப்பாடலின் ஈற்றடியில் வரும் '**நிரனிறை**' என்னும் தொடரைக் குறித்து, **ஈடு** முப்பத்தாறாயிரப் படியுரை பின்வருமாறு அழகுற விளக்கியருள்கின்றது. "நிரல்நிறை என்னுதல், நிரன்நிறை என்னுதல். **நிரல்நிறை** என்றபோது சப்தங்களும் நிறைந்து, அர்த்தங்களும் புஷ்கலமாக இருக்கை; **நிரன்நிறை** என்றபோது நேரே நிறுத்தப்படும் ஆலட்சணங்களிற் குறையாமே எழுத்தும் சொல்லும் பொருளும் அந்தாதியும் கிரமத்திலே நிறுத்தப் படுகை."

ஆழ்வார் ஆயிரம் பாசுரங்கள் பாட வேண்டும் என்று உறுதி செய்து கொண்டு அருளிச் செய்யப் புகவில்லை. ஆயிரம் பாசுரங்கள் தம் திருவாக்கில் தாமே வெளிப்படும் என்று, தம் மயர்வறும் மதிநலத்தால் உணர்ந்து அருளிச் செய்தவாறு. பெருமானின் பெரும் புகழை ஆயிரம் பாசுரங்கள் கொண்டு விரித்துப் பேசியல்லது தரிப்புக் கொள்ள மாட்டாத தம்முடைய நிலையினை யுணர்த்தியவாறுமாம். வீடு பயப்பதனை **வீடு** என்றே குறிப்பிட்டருளினார். வீடு-விடுதல், **சமர்ப்பணம்** செய்தல் எனவும் சிலர் பொருள் கொள்வர். (11)

# "எழில் ஞான பூசை"

**முன்னுரை :**

திருஞான சம்பந்தர் உலகத்தினைத் "**துயர் இலங்கும் உலகு**" எனக் குறிப்பிட்டருள்கின்றார். "**இன்னாது அம்ம இவ்வுலகம்**" எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்றும், உலகியல் வாழ்க்கை மிகவும் துன்பம் நிறைந்தது எனப் புகலுகின்றது. இத்தகைய உலகியற் றுன்பங்களில் இருந்து விடுபடுவதற்கும், அதன் பொருட்டு இறைவனின் அருளைப் பெறுவதற்கும், உலக மக்கள் பற்பல வழிவகைகளில் முயன்று உழன்று வருகின்றனர்.

**பல வழிகள் :**

இறைவனின் அருளைப் பெற விரும்பிப் பலர் பல செயல்களைச் செய்கின்றனர். ஒரு சிலர் கோதானம், பூதானம், சொர்ண தானம் முதலிய தானங்களைச் செய்கின்றனர். ஒருசிலர் அக்கிட்டோமம், வாஜபேயம், அக்நிஹோத்திரம், சௌத்திராமணி முதலிய யாகங்களைச் செய்வதன் மூலம் நலம் பல பெறலாம் என நவிலுகின்றனர். வேறு சிலர் கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, கோதாவரி முதலிய நதிகளில் மூழ்கி நீராடினால், நம்முடைய பாவங்கள் பலவும் நீங்கி, நாம் இன்பங்கள் எல்லாம் எய்தலாம் என நம்புகின்றனர். மற்றும் சிலர் பஞ்சாக்கினி மத்தியிலும், நீரின் நடுவிலும், மலைக்குகைகளிலும் இருந்து பொறி புலன்களை அடக்கித் தவஞ் செய்தால் பெறலரும் சித்திகளைப் பெறலாம் எனக் கூறுகின்றனர். பிறிதொரு சாரார் சாந்திராயணம் கிருச்சிரம் அஷ்டமி ஏகாதசி முதலிய விரதங்களைக் கடைப்பிடித்து ஒழுகினால், இறையருளைப் பெறுதல்கூடும் என அறைகின்றனர்.

**பிறவழிகளின் கடினம் :**

'ஒன்றது பேரூர் ; வழி ஆறு அதற்கு உள' எனத் திருமூலர் **திருமந்திரம்** கூறுதல் போல, இவ்வழி வகைகள் எல்லாம் ஒவ்வொரு வகையில் இறைவனின் அருளைப் பெறுதற்குரிய நல்ல சாதனங்களே என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆயினும் இம்முறைகள் கடினமானவையும், மக்கள் அனைவராலும் எளிதில் கடைப்பிடித்தொழுக இயலாதனவும் ஆக உள்ளன. அன்றியும்,

> " தானம் யாகம் தீர்த்தம்
> ஆச்சிரமம் தவங்கள்
> சாந்தி விரத கன்ம
> யோகங்கள் சரித்தோர்
> ஈனம் இலாச் சுவர்க்கம்
> பெற்று இமைப்பளவின் மீள்வர் .."


எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் கூறுதல் போல, மேற்கூறிய முறைகளால் எய்தும் பயனும் நிலைபேறு உடையதன்று எனத் தெரிகின்றது. இவைகளெல்லாம் மீண்டும் மீண்டும் பிறவிக்கே ஏதுவாகி நிற்கும் எனவும் அறிகின்றோம்.

**எளிய இனிய நெறி :**

எனவே, இறைவன் பெரிதும் விரும்பி மகிழ்வதும், யாவரும் விரும்பி மேற்கொண்டு ஒழுகுதற்குரியதும், எல்லோராலும் எளிதாகக் கைக்கொள்ளத் தக்கதும் ஆகிய நெறி ஒன்றினை, அறிந்து கொள்ள நாம் பெரிதும் அவாவி நிற்கின்றோம். அத்தகைய எளிய இனிய நல்ல நெறி ஒன்று உள்ளது என ஞான சம்பந்தப் பெருமான் நமக்கு அறிவுறுத்தியருள்கின்றார் !

**நுண்ணறிவு வழிபாடு :**

இறைவனுக்குச் செய்யும் வழிபாடுகள் பலதிறப்படும் என்றும், அவைகளுள்



தையல்நாயகி அம்மன், வைத்தீசுவரன்கோயில்

நுண்ணறிவாற் செய்யும் வழிபாடு ஒன்று என்றும், அதுவே மிகவும் சிறந்த வழிபாடு என்றும், திருஞான சம்பந்தர் தமது தேவாரத் திருப்பாடல் ஒன்றிற் குறிப்பிடுகின்றார்;—

தோலுடையான் வண்ணப் போர்வையினான்
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கும்

நூலுடையான் இமையோர் பெருமான்
நுண்ணறிவால் வழிபாடு செய்யும்

காலுடையான் கரிதாய கண்டன்
காதலிக்கப் படும் காட்டுப்பள்ளி

மேலுடையான் இமையாத முக்கண்
மின்னிடையா ளொடும் வேண்டினானே

எனவரும் தேவாரப் பாடலில், திருஞான சம்பந்தர் **நுண்ணறிவாற் செய்யும் வழிபாடு** பற்றிக் குறிப்பிட்டிருத்தல் காண்க. இந் நுண்ணறிவு வழிபாடே, எல்லோரும் எளிதாகப் பின்பற்றத் தக்க இனிய நல்லநெறி எனலாம்.

**ஞானபூசை :**

அவ் எளிய இனிய சிறந்த நெறியினையே, 'ஞானபூசை' என அருள் நந்தி சிவனார் பெயர் குறிப்பிட்டு வழங்குகின்றார். ஞான பூசையின் இயல்புகளும் அவரால் நலமுற விளக்கப்பட்டுள்ளன ;—

(1) நல்ல சிறந்த இறையருள் நூல்களை ஓதுதல் (2) பிறரையும் ஓதும்படி செய்வித்தல் (3) அவ் இறையருள் நூல்களின் அரிய ஞானப் பொருள்களை நயந்தினிது கேட்டுணர்தல் (4) பிறரையும் கேட்டுணர்ந்து கொள்ளும்படி செய்தல் (5) அவற்றினைப் பலகாலும் பயின்று இடைவிடாமற் சிந்தித்துத் தெளிந்து வந்தித்து வருதல். ஆகிய இவ்வைந்து செயல்களும் 'ஞான பூசை' எனப்படும்.

**பல வழிகள் :**

இவை ஐந்து செயல்களையும் முறையே இனிது செய்து வருபவன், இறைவனை ஞான பூசை புரிந்து சிறப்புற வழிபட்டு மகிழ்வித்து வருபவன் ஆவான். ஏனைய பிறவகைப் பூசைகளை யெல்லாம் விட, இந்த ஞான பூசையே மிகவும் சிறந்தது. இதனையே இறைவன் பெரிதும் விரும்பி மகிழ்ந்து ஏற்றருள்கின்றான். இறைவனை மகிழ்வித்து உள்ளம் களிப்பிக்கச் செய்தலில், இதனினும் சிறந்த பூசனை பிறிதொன்றில்லை. ஆதலின் இதனை 'ஞான பூசை' என வறிதே குறியாமல், **'எழில் ஞான பூசை'** என்று ஏற்றம் கொடுத்துச் சிறப்பித்துக் கூறுகின்றார், ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரியார் !

**சிவஞான சித்தியார் :**

சைவ சித்தாந்த ஞானப் பெருஞ்சான்றோர் ஆகிய ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள்.

" ஞான நூல் தனை ஓதல்
ஓது வித்தல்

நற்பொருளைக் கேட்பித்தல்
தான்கேட்டல் நன்று

ஈனமிலாப் பொருளதனைச்
சிந்தித்தல் ஐந்தும்

இறைவனடி அடைவிக்கும்
எழில்ஞான பூசை."

எனவரும் சிவஞான சித்தியார் பாடலால், ஞானபூசையின் சிறப்பினை நன்கினிது எடுத்து நலமுற விளக்கியிருத்தல் காணலாம் !

**கச்சியப்ப முனிவர் :**

அண்மைக் காலத்தில் விளங்கிய அரும் பெருங் கவிஞர்களுள்ளும், சைவத் தமிழ்ச் சான்றோர்களுள்ளும், கச்சியப்ப முனிவர் ஒருவர். 'கவிராட்சசர்' என்று சிறப்பித்து, அவரைக் கற்றறிந்தோர் அனைவரும் பாராட்டுவர். தாம் இயற்றியருளிய தணிகைப் புராணம் என்னும் நூலில், கச்சியப்ப முனிவரரும் ஞான பூசையின் இயல்பினை, இச் சிவஞான சித்தியார் செய்யுளைத் தழுவிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் .

"ஞான நூல் ஓதல் ஓதுவித் திடுதல்
நற்பொருள் கேட்டல் கேட் பித்தல்
ஆன அப் பொருளைச் சிந்தனை செய்தல்
ஐந்தும் ஞா னத்துறு பூசை..."

—நந்தி உபதேசப்படலம் 154.

## திருமுறைகளின் சிறப்பு :

தமிழ்நலமும் சைவநலமும் உடைய தக்கோர் அனைவருக்கும், நம்முடைய அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் முதலிய சமயாசிரியப் பெருமக்கள் அருளிச் செய்த திருமுறைகளைக் காட்டிலும் சிறந்த ஞானநூல்கள் வேறு பிறிதெதுவும் இல்லை என்பது ஒருதலை. திருமுறைகள் ஆகிய அருள்ஞான நூல்களின் அருமை பெருமைகளை, நம்மனோர் அனைவரும் தெளிவுற நன்குணர்வர், இந்நில உலகில் வேறு எம்மொழியிலும். வேறு எந்த நாட்டிலும், இத்துணைப் பழமையும் பெருமையும் மிகுதியும் செறிந்து, சிறந்த தெய்வநலம் பெற்றுத் திகழும் இறையருள் ஞானப் பக்தி நெறிப் பனுவல்கள் காணப்படுகின்றில. இதனை நடுவுநிலைமை யுடைய நல்லறிஞர்கள் பலரும் நன்கினிது ஆராய்ந்து உடன்பட்டு நவிலு கின்றனர்*.

## முடிவுரை :

ஆதலின், நாம் திருமுறைகளையே நம் "வாழ்முதல் ஆகிய பொருள்" எனச் செவ்விதில் தெளிந்து, அவற்றை ஓதியும் ஓதுவித்தும், கேட்டும் கேட்பித்தும், சிந்தித்துத் தெளிந்தும், எல்லாம் வல்ல சிவபிரானை **எழில் ஞான பூசை** செய்து வழிபட்டு,' வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.

(1) "No cult in the world has produced a richer devotional literature, or one more instinct with brilliance of imagination, fervour of feeling and grace of expression..."

—**L. D. Barnett**, The Heart of India, P. 82.

(2) "In no literature with which I am acquainted has the individual religious life, its struggles and dejections, its hopes and fears, its confidence and its triumph received a delineation more frank and more profound."

—**Sir Charles Eliot**, Hinduism and Buddhism, Vol II, P. 217.

(3) "In the matter of pure devotional outpouring, exuberance and ebullience of language, Tamil has hardly a parallel in the world's literature."

—**Dr. C. P. Ramaswamy Aiyer**. Indian Writers at Chidambaram.

(வெண்பா)

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அருளின்
நலம் நிரம்பிச் சொற்பொருள்கள் நன்ருய்,—விலைவரம்பின்(று)
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்;
தெள்ளு **திருமுறை** நூற் சீர்.

மனக்கவலை மாற்றும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய திக்குணமும் நீக்கும்;—தனக்கிணையில்
தெய்வத் **திருமுறை**நற் செந்தமிழ் நூல்களைப்போல்
வையத் துயர்ந்தன இல்மற்று.

—ஆசிரியர்

# திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் தொடர்ச்சி: பக்கம், 340)

கங்கைநீர் பயந்த பாத
பங்கயத் தெம் அண்ணலே!
அங்கை யாழி சங்கு தண்டு
வில்லும் வாளும் ஏந்தினாய்!
சிங்கம் ஆய தேவ தேவ!
தேன் உலாவும் மென்மலர்
மங்கை மன்னி வாழும் மார்ப!
ஆழி மேனி மாயனே!

**(பொழிப்புரை)** கங்கைநீர் வெள்ளத்தினைத் தோற்றுவித்த திருவடித் தாமரைகளையுடைய எம்பெருமானே! அழகிய திருக்கையிலே சங்கு சக்ரம் தண்டு வில் வாள் என்னும் ஐந்து படைகளையும் ஏந்திக் கொண்டு இருப்பவனே! நரசிங்க மூர்த்தியாகத் தோன்றியருளிய, தேவர்களுக்கெல்லாம் தேவனே! தேன் பொருந்திய மென்மையான தாமரைப் பூவிற் பிறந்த பிராட்டியார், அப் பூவை விட்டு வந்து நிலையாகத் தங்கி வாழும் படியான திருமார்பை யுடையவனே! கடல்போன்ற நீலநிறமான திருமேனியை யுடைய மாயனே!

**(குறிப்புரை)** பாத பங்கயம் - திருவடித்தாமரை. செருக்கின் மிக்க உருத்திரனுக்கும், தன் திருவடியில் தோன்றிய கங்கை நீரினைத் தந்து அருள்புரிந்தார் திருமால். அடியார்களின் இடர் நீக்கிக் காப்பதில் காலதாமதம் நேராமைக்காகத் திருமால் எப்போதும் ஐம்படைகளைச் சமைவாகத் தாங்கிக் கொண்டிருக்கின்றார். அடியார்களைப் பாதுகாத்தலில் பெருமாளுக்குள்ள அதிவேகத் தன்மையினை நரசிங்காவதாரம் புலப்படுத்தும். இத்தகைய குணங்களுக்குத் தோற்றே, பெரிய பிராட்டியாகிய திருமகள் எம்பெருமான் மார்பில் எப்போதும் மன்னி வாழ்கின்றாள் கருங்கடலைக் கண்டாற் போல, இறைவனின் திருமேனியைத் தரிசிக்கும் அளவில், கண்கள் குளிர்ந்து, எல்லா வெம்மைகளும் அகன்று குளிர்ச்சியுறுகின்றன. **மாயன்** - வியக்கத் தக்க பண்புகளும் செயல்களும் உடையவன். (24)

வரத்தினிற் சிரத்தை மிக்க
வாள் எயிற்று மற்றவன்
உரத்தினிற் கரத்தை வைத்து
உகிர்த் தலத்தை ஊன்றினாய்!
இரத்தி நீ! இதென்ன பொய்?
இரந்த மண் வயிற்றுளே
கரத்தி! உன் கருத்தை யாவர்
காண வல்லர்? கண்ணனே!

**(பொழிப்புரை)** பிரமன் கொடுத்த வரத்திலே கண் மிகுதியான நம்பிக்கையுடையவனும், வாள் போன்று அஞ்சத்தக்க கோரப்பற்களை யுடையவனுமான, அன்பனின் எதிரியான, இரணியனுடைய மார்பிலே திருக்கைகளை வைத்து நகங்களை அழுத்திக் கொன்றாய். இத்தகைய பேராற்றலும் பெருமையும் மிக்க நீ, முன்பு ஒருகால் மகாபலியிடம் சென்று இரந்து பெறுகின்றாய். இஃது எத்தகைய மாயச்செயல்! மேலும், அங்ஙனம் இரந்து பெற்ற உலகத்தினையே நின் திருவயிற்றுக்குள்ளே ஒளித்து வைக்கின்றாய்! கண்ணபிரானே! இங்ஙனமெல்லாம் செய்யும் நின்னுடைய திருவுள்ளத்தினை, யாவர்தான் ஆராய்ந்து காண வல்லவர்கள் ஆவர்?

**(பொழிப்புரை)** சிரத்தை - மிகுந்த நம்பிக்கை. வாள் எயிறு - வாளைப் போன்ற பல். மற்றவன் - பகைவன்,

இரணியன். உரம் - மார்பு, கரம் - கை, உகிர்த்தலம் - நகம், இரத்தி - இரக்கின்ருய். இரணியனைக் கொன்றதனுல் நின் பேராற்றலும். வாமநனுய் வந்து மாவலியை இரந்ததனுல் நின் எளிமைத் தன்மையும், உலகங்களையெல்லாம் திருவயிற்றுக்குள் கரத்தலால் நின் பெருங்கருணையும் வெளிப்படுகின்றன என்றபடி. அடியவனுகிய பிரகலாதன், பயனை விரும்புபவனுகிய இந்திரன், நின்னை விரும்பாமல் புறக்கணித்து ஒழுகுகின்ற உலகமக்கள் ஆகிய அனைவரையும், ஒரு தன்மையில் வைத்துப் பாதுகாக்கின்ற நின்னுடைய திருவுள்ளக் கருத்து யாதோ? அதனை யாங்கள் அறிதல் இயலாது. தேவரீரே அருளிச் செய்தல் வேண்டும் என்பது கருத்து. (25)

ஆணி னோடு பெண்ணும் ஆகி
அல்ல வோடு நல்லவாய்
ஊனொ டோசை ஊறும் ஆகி
ஒன்ற லாத மாயையாய்
பூணி பேணும் மாயன் ஆகிப்
பொய்யி னோடு மெய்யுமாய்
காணி பேணும் ஆணியாய்க்
கரந்து சென்ற கள்வனே!

(பொழிப்புரை) ஆண் பெண் என்னும் இரண்டுபால்களையும் தோற்றுவிப்பவனுய்; அவ்விரண்டிலும் சேராத அலிகளையும், ஆண் பெண் அலி என்னும் இம் மூவகைப் பாகுபாட்டிலும் சிறந்தனவாக உள்ளவைகளையும் நடத்துபவனுய்; சுவை ஒலி பரிசம் முதலிய உணர்ச்சிகளை அமைத்தருள்பவனுய்; உலகிலுள்ள எல்லாப் பொருள்களாகவும் தோன்றி வெளிப்படுகின்ற பிரகிருதியைச் செலுத்துபவனுய்; பசுக்களை மேய்க்கின்ற இடையனுய்; துரியோதனன் முதலிய பொய்யர்க்குப் பொய்யனுய்; பாண்டவர் முதலிய மெய்யர்க்கு மெய்யனுய்; மூவடி நிலத்தினை விரும்பிய வாமநப் பிரமசாரியாய், மாவலியின் வேள்விக் களத்திலே வஞ்சகமாக வடிவுகொண்டு சென்ற கள்வனே! உன்னை உள்ளபடி அறிந்து அளவிடக் கூடியவர்கள் யார்?

(குறிப்புரை) வாமனுவதாரமும் கிருஷ்ணுவதாரமும் தம்முள் ஒருபுடை ஒத்திருக்கையினுல், அவ்விரண்டினையும் இயைத்து ஒருங்கே எண்ணி ஈடுபடுகின்ருர். மக்களை மிகுதிப்படுத்தி லீலா விபூதியாகிய உலகத்தினை விரிவடையச் செய்ய, இறைவன் ஆணினேடு பெண்ணும் தோற்றுவிக்கின்ருன். **அல்ல** - ஆணும் பெண்ணும் அல்லாத அலிகள். **நல்ல** - செல்வம் அழகு முயற்சி முதலியன; அல்லது ஆண் பெண் அலி என்னும் மூன்றிலும் சிறப்புற்று விளங்குவன. **ஒன்றலாத மாயை**-உலகிற் பலபொருள்களாகப் பரிணமிக்கக் கூடிய பிரகிருதி மாயை. **பூணிபேணும் ஆயன்** - பசுக்களை மேய்த்துக் காக்கும் இடையன். **காணி**-நிலம். **மாணி**-பிரமசாரி, வாமநன். (26)

விண் கடந்த சோதியாய்
விளங்கும் ஞான மூர்த்தியாய்
பண் கடந்த தேசம் மேவு
பாவ நாச நாதனே!
எண் கடந்த யோகி னேடு
இரந்து சென்று மாணியாய்
மண் கடந்த வண்ண! நின்னை
யார் மதிக்க வல்லரே?

(பொழிப்புரை) வானத்தையும் கடந்து வீசும் பேரொளி மிக்கவனே! இயல்பாகவே விளங்குகின்ற ஞானத்தினைத் திருவுருவமாகக் கொண்டவனே! வேதங்களையும் கடந்த சிறப்பினையுடைய பரமபதத்தின்கண் எழுந்தருளி வீற்றிருக்கின்ற, பாவங்களை அழித்தொழித்து அருள்கின்ற தலைவனே! எண்ண முடியாத அளவிறந்த சிறந்த பண்புகளோடு கூடி, வாமந வடிவினனுய் மூவடிநிலம் வேண்டும் என்று இரத்தற்றொழிலை மேற்கொண்டு போய், உலகினை அளந்து கடந்த சிறப்பினையுடையவனே! உன்னை அளவிடக்கூடிய ஆற்றலுடையவர்கள் யார்?

(குறிப்புரை) விபுவான மூலப் பிரகிருதியும் தனக்குள்ளே யாகும்படியான ஸ்வரூப வைபவத்தையுடைய சுயம்

பிரகாசப் பொருள் இறைவன் என்பதனை 'விண் கடந்த சோதியாய்' என்று குறிப்பிட்டார். **விண்** - மூலப் பிரகிருதி, ஜீவாத்மாவைச் சரீரமாக உடையவன் இறைவன் என்பது 'விளங்க ஞான மூர்த்தியாய்' என்பதனுற் குறிக்கப் பெற்றது, யோகு-யோகம், மங்கலப் பண்புகள். **எண்**-எண்ணம், எண்ணிக்கை. **வண்ணம்**-அழகு, சிறப்பு. 'வண்ண' என விளியாகவும் கொள்ளலாம். (27)

படைத்த பார் இடந்து அளந்து
அதுண்டு உமிழ்ந்த பௌவநீர்
படைத்து அடைத்து அதிற்கிடந்து
முன் கடந்த பெற்றியோய்!
மிடைத்த மாலி மாலிமான்
விலங்கு காலன் ஊர்புகப்
படைக்கலம் விடுத்த பல்படைத்
தடக் கை மாயனே!

**(பொழிப்புரை)** கடல்நீரினைத் தோற்றுவித்து, தோற்றுவித்த உலகத்தினை ஸ்ரீ வராக மூர்த்தியாக அதன்கண் இருந்து பெயர்த்து எடுத்து, திரிவிக்கிரமனாக அளவிட்டு, ஊழிக்காலத்தில் திருவயிற்றில் வைத்து, பின்பு வெளிப்படுத்தி, இலங்கை செல்லுதற்குக் கடலை அணைகட்டித் தூர்த்து, முன் ஒருகால் அக்கடலிற் கண்வளர்ந்தருளி, மற்றும் ஒருகால் அமிழ்தம் எடுப்பதற்காகக் கடைந்தருளிய பெருமைகளையுடையவனே! எதிர்த்து வந்த **மாலி, சுமாலி** என்னும் அரக்கர்கள் கூற்றுவனின் ஊருக்குச் சென்று சேரும்படி படைக்கலங்களை ஏவியருளிய, பலவகைப் பட்ட சிறந்த படைக்கருவிகளை விசாலமான திருக்கையிலே உடையவனாகிய பெருமானே! உன்னை யார் அளந்து அறிய வல்லவர்கள்?

**(குறிப்புரை)** 'மாலிமான்' என்பதனை 'மான்மாலி' என்று கொண்டு சுமாலி என்று பொருள் கொள்ளப்பட்டது. 'மான்' என்றது 'மகான்' என்பதன் விகாரம். அன்றி **'மாலியவான்'** என்பவனை மாலிமான் என்று கூறியதாகவும் கொள்ளலாம். அல்லது மாலி, (சு) மாலி, **மான்விலங்கு** (மாரீசன்) என்றும் கொள்ளுதல் பொருந்தும். (28)

பரத்திலும் பரத்தை ஆதி
பௌவநீர் அணைக்கிடந்து,
உரத்திலும் ஒருத்தி தன்னை
வைத்து உகந்த தன்றியும்,
நரத்திலும் பிறத்தி நாத!
ஞான மூர்த்தி ஆயினாய்!
ஒருத்தரும் நினாது தன்மை
இன்ன தென்ன வல்லரே?

**(பொழிப்புரை)** தலைவனே! ஞானத்தின் வடிவமாக விளங்குபவனே! மேலானவர்களிலும் மேலானவனாகத் திகழ்கின்றாய்! ஒப்பற்ற பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே பிரியாமல் அணைத்து வைத்து மகிழ்ந்து, திருப்பாற்கடல் ஆகிய படுக்கையிலே கண்வளர்ந்து அன்பர்களைக் காத்தருள்கின்றாய்! அது மட்டுமே யல்லாமலும், அடியார்களுக்கு அருள் வழங்குதற் பொருட்டு வெறுக்கத்தக்க மனிதக் குலத்திலும் வந்து பிறக்கின்றாய். உன்னுடைய அருளின் இயல்பினை, ஒருவரும் இத்தகையது என்று அளவிட்டுக் கூறவல்லவர்கள் அல்லர்.

**(குறிப்புரை)** திருப்பாற்கடலிற் பள்ளிகொள்ளுதலும், திருமகள் நாதனாதலும் எம்பெருமானின் பராத்பரத் தன்மையினை விளக்குதலால் 'பரத்திலும் பரத்தை ஆதி' என்றார். **ஆதி**— ஆகின்றாய்; முன்னிலை ஒருமை வினைமுற்று. **பரத்தை** — பரமாக விளங்குகின்றாய்; இதுவும் 'பரம்' என்பதன் அடியாகப் பிறந்த முன்னிலை ஒருமை வினைமுற்று. விலைமகளைக் குறிக்கும் 'பரத்தை' என்னும் பெயர்ச் சொல் இதனின் வேறாகும். இராமன், கிருஷ்ணன் முதலிய திருவவதாரங்களை எடுத்தருளியமை பற்றி, இறைவனை 'நரத்திலும் பிறத்தி' என்றார். உம்மை இழிவு சிறப்பு, பிறத்தி — பிறக்கின்றாய். **'நினாது'** என்பது 'நினது' என்பதன் நீட்டல் விகாரம்; 'ஆது' என்பது ஆறும் வேற்றுமை யுருபு எனினுமாம். (29)

வானகமும் மண்ணகமும்
வெற்பும் ஏழ் கடல்களும்

போனகம் செய்து ஆலிலைத்
துயின்ற புண்ட ரீகனே!

தேனகம் செய் தண்ணறு
மலர்த்துழாய் நன் மாலையாய்!

கூனகம் புகத் தெறித்த
கொற்ற வில்லி அல்லையே?

**(பொழிப்புரை)** வானுலகத்திலுள்ளாரையும், மண்ணுலகத்திலுள்ளாரையும், ஏழு மலைக் குலங்களையும், ஏழு கடல்களையும் உணவுபோல உட்கொண்டு, ஆலிலையின்கண் கண்வளர்ந்தருளிய, தாமரைபோன்ற அழகிய உறுப்புக்களையுடைய பெருமானே! தேன் நிறைந்த உட்புறத்தைக் கொண்டதாய், குளிர்ந்த மணங்கமழ்கின்ற திருத்துழாயினை நல்ல மாலையாக அணிந்தவனே! நீ, **மந்தரை**யாகிய கூனியினுடைய கூனனது உள்ளே சென்று இல்லையாகும்படி விட்டெறிந்த வெற்றி வில்லை யுடையவன் அன்றோ?

(குறிப்பு) போனகம் - உணவு. போனகம் செய்தல் - உணவுபோலத் திருவாயினால் உட்கொள்ளுதல். துழாய்- துளசி, தெறித்தல் - விட்டு எறிதல், குறி வைத்து அடித்தல், கொற்றம் - வெற்றி, வில்லி-வில்லினையுடையவன் (30)

—தொடரும்

---

## ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்:

**18—4—65** திருவிடந்தை—ஸ்ரீ நித்திய கலியாண சுவாமி கோயிலில் ஸ்தலபுராண வெளியீட்டு விழா.

**19—4—65** திருச்செங்கோடு—ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் கோயிலில் மாநில முதலமைச்சர் அவர்களால் திரு. வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் அவர்களால் திருப்பணி செய்யப்பட்ட மண்டபத் திறப்பு விழா.

**21—4—65** ஸ்ரீபெரும்புதூர்—ஸ்ரீ ஆதிபுரீசுவரர் ஆலயத்தில் மாநில முதலமைச்சர் அவர்களால் மின்விளக்கு ஏற்று விழா.

**24—4—65** காஞ்சிபுரம்—சிலத்திரு ஞானப்பிரகாசர் ஆதினக் குருபூசை விழா.

---

## ஆலய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| அழகர் கோவில் | ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானம் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் சைத்திரோற்ஸவம் (11-4-65 — 19-4-65) |
| காட்டுப்பரூர் | ஸ்ரீ ஆதி கேசவப் பெருமாள் தேவஸ்தானம் பிரம்ம உற்சவம் (8-5-65 — 17-5-65) |
| காஞ்சீபுரம் | ஸ்ரீ தேவராஜ சுவாமி தேவஸ்தானம் பிரம்ம உற்சவம். (11-5-65 — 26-5-65) |
| சோளசிம்ஹபுரம் | ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மஸ்வாமி தேவஸ்தானம் பிரம்ம உற்சவம். (3-5-65 — 12-5-65) |
| ஸ்ரீ பெரும்புதூர் | ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், பாஷ்யகாரசுவாமி கோயில் உடையவர் சைத்ரோற்சவம். (26-4-65 — 6-5-65) |

# ஆழ்வார்களும் நாயன்மார்களும்

## முன்னுரை :

சைவம் வைணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களும் தமிழ் நாட்டில் மிகவும் சிறப்புடன் போற்றப்பட்டு வருவன ஆகும். "ஓர் ஆவிற்கு இருகோடு பூத்தாற்போல" இவ்விரு பெருஞ் சமயங்களும் தமிழகத்தில் தொன்று தொட்டே இணைந்து இயைந்து நிலவி வருகின்றன. தமிழ் மக்களுக்கு வழி காட்டி உய்வித்து வருதலால், இவற்றைத் தமிழ்நாட்டின் இரண்டு கண்கள் என்று பாராட்டிப் போற்றலாம்.

## நீரும் நெருப்பும் :

உலக வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது. 'நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும் வானின் றமையா தொழுக்கு' என்னும் திருக்குறளில் நீரின் சிறப்பினைத் திருவள்ளுவரும் வற்புறுத்தியுள்ளார். நீரைப் போலவே நெருப்பும் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் தேவைப் படுவதொன்று. நீரும் நெருப்பும் ஆகிய இரு பொருள்களின் இன்றியமையாமையினையும் சிறப்பினையும் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நன்குணர்ந்திருந்தனர். அதனால் உலகைப் படைத்து இயக்கிவரும் பரம் பொருளின் இயல்பினை இவற்றோடு இயைபுறுத்தி மகிழ்ந்தனர்.

## திருமாலும் சிவபிரானும் :

நீர் நீல நிறம் வாய்ந்தது; நெருப்பு சிவப்பு நிறம் வாய்ந்தது. நீலநிறம் பெண்மையையும், சிவப்பு நிறம் ஆண்மையையும் குறிக்கும் என்பர் (1). திருமால் நீலநிறம் (பச்சை கருமை ஆகிய நிறங்களும் நீல நிறத்தில் அடங்கும்) உடையவராகப் போற்றப் பெறுகின்றார்; சிவபிரான் செந்நிறம் உடையவராகப் புகழப் பெறுகின்றார். நீர் தண்மை யுடையது; நெருப்பு வெம்மை யுடையது. திருமால் காத்தற் கடவுளாகக் கருதப் பெறுகின்றார்; சிவபிரான் அழித்தருளும் கடவுளாகக் கூறப் பெறுகின்றார். நீர் நிலத்திற் பரவும் தன்மையுடையது;

நெருப்பு மேல் நோக்கி நின்று எழும் இயல்புடையது; திருமால் பள்ளி கொண்டருளும் பரமனாக — அரங்கநாதராகப் பரவப் படுகின்றார்; சிவபிரான் நின்றாடும் தெய்வமாக — அம்பல வாணராக வழிபடப் பெறுகின்றார்!

## ஆழ்வார்களும் நாயன்மார்களும் :

மிகப் பழங்காலத்தில் திருமால் நெறியும் சிவநெறியும் ஒரு கொடியிற் பூத்த இரு மலர்கள் எனவே தமிழகத்தில் வேறுபாடின்றி இயைந்து விளங்கி வந்தன. இடைக் காலத்திற் சில புதிய கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் உடைய புறச் சமயங்கள் சில, தமிழ் நாட்டிற் புகுந்து பரவத் தலைப்பட்டன. அந் நிலையில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி யருளி, அரும் பெருஞ் செயல்களை ஆற்றி, இறையருள் உணர்ச்சியினை யாண்டும் பரப்பி, மக்களுக்கு உய்திநெறி காட்டி உதவினர்.

## கலைச்செல்வக் களஞ்சியங்கள் :

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆகிய பெருமக்கள் அருளிச் செய்த

---

(1) "Every artist knows how he Can make a scene before his eyes appear warmer or colder in colour, according to the way he sets his attention. If for warm, he soon begins to see the **red** start out of every thing; if for cold, the **blue**...

And Finally, it is a real puzzle when the colour pale blue is said to have **feminine** and blood-red **masculine** affinities."

—**Prof. William James,**
The Principles of Psychology,
Vol I, P. 425, 582.

தெய்விக நலம் பொதிந்த திவ்வியப் பிரபந்தம், தேவார திருவாசகத் திருமுறைகள் ஆகிய திருவருட் பாடல்கள், அழியாத அரும்பெருங் கலைச் செல்வக் களஞ்சியங்கள்! அத் தெய்விகப் பாடல்களின் வாயிலாக, ஆழ்வார்கள் நாயன்மார்கள் அருளனுபவங்களையும் அறிவுரைகளையும் நாம் அனைவரும் அறிந்து கொண்டு அளப்பரிய நலங்களை அடையலாம்.

திருவருள் நலம் நிரம்பித் திகழும் திவ்வியப் பிரபந்தமும், தேவாரத் திருமுறைகளும் ஆகிய இத் தெய்விகப் பாடல்கள் நவில்தொறும் நன்னயம் நல்குகின்றன; பயில்தொறும் பரவசப்படுத்தி நம்மை மகிழ்விக்கின்றன; அறிவுக்கு உயர்விருந்தாய், நம் அல்லல்களுக்குப் பெருமருந்தாய்ப் பிறங்குகின்றன. இவற்றை ஓதுதலால் நம் உள்ளம் தூய்மையுற்று ஒளி பெறுகின்றது. தீவினைகள் தேய்ந்து சிதைந்து அகலுகின்றன. இவற்றின் அரிய பெரிய இலக்கியச் சிறப்புகளையும், சொற்பொருட் சுவை நலங்களையும் உன்னி யுன்னி உணருந்தொறும், நாம் வியப்பும் விம்மிதமும் எய்தி இன்புறுகின்றோம்.

## சிறந்த சாதனங்கள் :

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆண்டவனின் அருளைப் பெற்று, அவ்வருளனுபவத்தில் மிக ஆழ்ந்து நயந்து திளைத்து இன்புற்றவர்கள்; வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத் தன்மை பெற்றொளிரும் ஒப்புயர்வற்ற அருட் பெருஞ் சான்றோர்கள்! நம்மனோர் ஈடேறி உய்தற் பொருட்டுத் திருவவதாரம் செய்து, செயற்கருஞ் செயல்கள் பலவும் புரிந்து, நமக்கெல்லாம் வாழும் நெறி காட்டி யுணர்த்திப் போந்தருளிய பெருமக்கள்! இழுக்கலுடைய இடத்தே ஊன்றுகோல் போல, அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அருட் பாடல்களே, நமக்கு உலகியல் வாழ்வில் தளர்வு நேரும் பொழுதெல்லாம், பற்றுக் கோடாக அமைந்து துணைபுரியும் சிறப்புடையன! புறந்தூய்மை நீரான் அமைதல் போல, நம்முடைய அகம் தூய்மை அடைதற்கு, ஆழ்வார்களும் நாயன்மார்களும் வழங்கியுள்ள அருளிச் செயல்கள், நமக்கு இன்றியமையாத சிறந்த சாதனங்களாக விளங்கி வருகின்றன.

## சான்றோர் உணர்வுகள் :

சான்றோர் பெருமக்கள் உலகின் பல பகுதிகளில், நாடு மொழி இனம் காலம் சூழ்நிலை ஆகியன பலவும் அறவே வேறுபட்டுத் தோன்றியவர்களாக இருந்த போதிலும், அனுபவநலம் நிரம்பிச் சிறந்து திகழும் அவர்தம் அறிவுரைகள் அனைத்தும், ஒரே கருத்தும் ஒரே குரலும் ஒரே போக்கும் உடையனவாகவே இருக்கும். வெவ்வேறு இடத்திலும் காலத்திலும், வெவ்வேறு இனத்திலும் மொழியிலும் சூழ்நிலையிலும், சான்றோர்கள் ஆங்காங்கே தோன்றுவார்களாயினும்,

> பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
> மாமலை பயந்த காமரு மணியும்
> இடைபடச் சேய வாயினும், தொடை புணர்ந்து
> அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
> ஒருவழித் தோன்றி யாங்கு, என்றும்
> சான்றோர் சான்றோர் பாலர் ஆவர்... !
>
> —புறநானூறு.

சான்றோர்கள் கூறும் கருத்துக்களிலும் நோக்கங்களிலும் வாய்மொழிகளிலும், என்றும் எங்கும் **முரண்பாடுகள்** ஒரு சிறிதும் இருக்கமாட்டா. 'பெரிய உள்ளங்கள் ஒரே தன்மயமான-ஒத்த உணர்வையே உடையனவாக விளங்கும்' (Great minds feel alike) என அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து கூறுவர்.

## ஒப்புமைத் தன்மைகள் :


இவ்வுண்மை, நம்முடைய ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆகிய சான்றோர்களின் திறத்தில், பெரிதும் இயைந்து பொருந்துவதாகத் திகழ்கின்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளிச் செய்துள்ள திருப்பாடல்களில் நாம் பல சொற்கள் சொற்றொடர்கள் கருத்துக்கள் ஆகியவற்றின் ஒப்புமைத் தன்மையினைக் கண்டு அறிந்து பெரிதும் வியப்பும் உவப்பும் அடைகின்

CONNEMARA PUBLIC LIBRARY
10 JAN 1966
MADRAS




ஸ்ரீ வேங்கடாசலபதிப் பெருமாள்—ஒப்பிலியப்பன் கோயில்.

CONNEM... 10 JAN 1966 ...DRAS




...யில் சிவனை வழிபடல்—ஸ்ரீ கபாலீசுவரர் கோயில்,
திரு மயிலாப்பூர்



அதிகார நந்திசேவை—ஸ்ரீ சென்னமல்லீசுவரர் கோயில்,
சென்னை

ரும். அங்ஙனமே அவர்களின் அரிய பெரிய அறிவுரைகளும் அருளனுபவங்களும் மிகவும் இணைந்து இயைந்து காணப்படுகின்றன. அவ்வருட் பெருஞ் சான்றோர்களின் ஓங்கி யுயர்ந்த சிறந்த பெருநிலையினை, அவர்கள் செய்து போந்த தெய்விகப் பாடல்கள், பளிங்கென விளங்கக் காட்டுகின்றன. அவற்றின் ஒப்புமைத் தன்மையினை விளக்கும் ஒரு சில சான்றுகளை மட்டும், இங்கே கண்டு அமைவோம்.

எப்படி ஊரா மிலைக்கக்
குருட்டா மிலைக்கும் என்னும்
அப்படி யானும் சொன்னேன்
அடியேன்மற் றியாதென் பேனே.

—நம்மாழ்வார்

ஊரா மிலைக்கக் குருட்டா
மிலைத்திங்குன் தாளிணை அன்புக்கு
ஆராய் அடியேன் அயலே
மயல்கொண்டு அழுகேனே

—மணிவாசகர்.

உள்ளத்தே யுறையும் மாலை
உள்ளுவான் உணர்வொன் றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்!
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கிப்போய் என்னுள் ளேநான்
விலாஇறச் சிரித்திட் டேனே!

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்!
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாஇறச் சிரித்திட் டேனே!

—திருநாவுக்கரசர்

வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேனும்
பாதியும் உறங்கிப் போகும்!
நின்றதிற் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்!
பிணிபசி மூப்புத் துன்பம்!
ஆதலாற் பிறவி வேண்டேன்!
அரங்கமா நகரு ளானே

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்

வேண்டிய நாள்களிற் பாதியும்
உறங்கிப் போகும்;
ஈண்டிய வெந்நோய் முதலது;
பிள்ளைமை மேலது; மூப்பு
ஆண்டின; அச்சம் வெகுளி
அவா அழுக் காறு இங்ஙனே
மாண்டன; சேர்தும் வளர்புன்
சடை முக்கண் மாயனையே!

—சேரமான் பெருமாள் நாயனார்

என்பன போன்ற எத்துணையோ பல பாடல்களை இங்கு எடுத்துக்காட்டலாம்!

**"பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"** என்றார் திருநாவுக்கரசர் பெருமான். "ஓவும் நாள் உணர்வு அழியும் நாள் உயிர்போகும் நாள் உயர் பாடைமேற் காவும் நாள் என்றலால் கருதேன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இக் கருத்தே,

"உண்ணுநாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோநாரணா என்று
எண்ணு நாளும் இருக்கெசுச் சாமவேத
நாண்மலர்கொண் டுனபாதம்
நண்ணுநாள் அவைதத் துறு மாகில்
அன்றெனக்கு அவை பட்டினிநாளே"

எனவரும் பெரியாழ்வார் பாடலிலும் அமைந்திருத்தல் காணலாம்.

"கனபவளம் சிந்தும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ?"

என்னும் தேவாரப் பாடலைப் போலவே,

" கலையிலங்கும் மொழியாளர் கண்ணபுரத்
தெம்மானைக் கண்டாள் கொல்லோ ?"

எனவரும் **திருமங்கையாழ்வார்** பாடல் இருத்தல் காணலாம்!

' திருவடி பரவி நிற்கத்
திண்ணம் நான் உய்ந்த வாறே' (அப்)

' பையர வணையான் நாமம்
பரவி நாம் உய்ந்த வாறே
(திருமங்கை)

' வாசி வல்லீர் இந்தளூரீர்
வாழ்ந்துபோம் நீரே ' (திருமங்கை)

' வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே ' (சுந்தரர்)

' மழக்கை இலங்குபொற் கிண்ணம்
என்றலால்

அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்'
(மணிவாசகர்)

" கள்ளவிழ் கோதை காதலும் எங்கள்
காரிகை மாதர் கருத்தும்

பிள்ளைதன் கையிற் கிண்ணமே ஒக்கப்
பேசுவ தெந்தை பிரானே "
(திருமங்கை)

என்றாற் போல வரும் எண்ணற்ற ஒப்புமைப் பகுதிகளைத் தேவார திருவாசகத் திருமுறைகளிலும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களிலும் நாம் காணலாம்.

இம்மட்டோ? ஆண்டாளின் திருப்பாவையும் மணிவாசகரின் திருவெம்பாவையும் எத்துணையளவுக்கு ஒப்புமையுடையன என்பதை யாவரும் அறிவர். 'தாண்டக வேந்தர்' எனப்பெறும் திருநாவுக்கரசரைப் போலவே, திருமங்கை யாழ்வாரும் திருக்குறுந் தாண்டகங்கள் திருநெடுந்தாண்டகங்கள் அருளிச் செய்திருத்தல் காணலாம். சைவத் திருமுறைகளில் உள்ள திருப்பல்லாண்டு போல, திவ்வியப் பிரபந்தத்திலும் பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு உள்ளது! மணிவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சிபோலவே, தொண்டரடிப் பொடி ஆழ்வாரும் ஒரு திருப்பள்ளி எழுச்சி பாடி யிருக்கின்றார்! திருஞான சம்பந்தர் பாடிய திருவெழு கூற்றிருக்கையைப் போலவே, திருமங்கை யாழ்வாரும் திருவெழுகூற்றிருக்கை என்னும் ஒரு சித்திர கவியினைச் சிறந்த முறையில் அருளிச் செய்துள்ளார்!

**சமய சமரசஞானம் :**

இத்தகைய பல ஒப்புமைப் பகுதிகளை, நாம் நம்முடைய ஆழ்வார்கள் நாயன்மார்களின் அருளிச் செயல்களில் ஆராய்ந்து கண்டு அநுபவித்து மகிழலாம். நம்முடைய இலக்கியச் சுவைத் திறன், பக்திப் பண்பு, ஆராய்ச்சி யுணர்வு ஆகிய பலபிற நலங்களும், இதனால் வளர்ந்து பெருகும். மேலும் இந்நாளைய உலகில் சமய சமரச மனப்பான்மை மிகவும் இன்றியமையாத தொன்றாகத் திகழ்கின்றது. பிறசமய வெறுப்பும் மறுப்பும் இன்றைய உலக நிலைக்குச் சிறிதும் பொருந்தாதன. அரைகுறைச் சமய வுணர்வு உடையவர்களும், அஃது அறவே இல்லாதவர்களும் தான், சமயக் கொள்கைகள் முதலியனபற்றிச் சர்ச்சைகளை எழுப்பிச் சண்டைகளை விளைத்து வருவர் (2).

**முடிவுரை :**

உண்மைச் சமயவுணர்வு கைவந்தவர்கள், ஒருபோதும் சமயச் சச்சரவுகளில் தலைப்படமாட்டார்கள்; சமய அறிவு அநுபவ நலங்களிலேயே பெரிதும் மூழ்கித் திளைத்து இன்புறுவார்கள்.

வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமையினை வளர்ப்பதன் பொருட்டே, சான்றோர்களாற் சமயங்கள் தோற்றுவிக்கப் பட்டன. சமய வுணர்வும் அனுபவமும், சமரச ஞானநிலையிலேயே சென்று நிறைவுறுகின்றன. அத்தகைய சிறந்த சமய சமரச ஞானவுணர்வை நாம் அனைவரும் தகவுறப் பெற்று, நம்முடைய ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற சான்றோர் பெருமக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப், பத்திமை பூண்டு ஒழுகி, நலம்பெற்று உய்வோமாக! —ஆசிரியர்

---

(2) "The half-religious and the irreligious fight about dogmas and not the truly religious. In the biting words of **swift**, 'we have enough religion to hate one another but not enough to love one another'. The more religious we grow the more tolerant of diversity shall we become."

—**Dr. S. Radhakrishnan.**
The Hindu View of Life, p. 44

# வண்ணத் தியல்பு நூல்

(மகான் வண்ணச் சரபம் திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள்)

**அறிமுகம் :**

நம் தமிழ்மொழியானது, கவிதை வளத்திற்கு மிகவும் புகழ் பெற்றது. உலகிலுள்ள மொழிகளிலெல்லாம், கவிதைத் துறையில் தமிழ்மொழியானது தனிச்சிறப்பிடம் பெற்றுத் திகழ்தலை ஆராய்ந்து அறிந்து, மேலைநாட்டு அறிஞர்களும் சாலவும் வியந்து போற்றியுள்ளனர் (1).

தமிழ்மொழியின்கண் உள்ள கவிதை வகைகள் பலவற்றிலும் **வண்ணம்** என்பது, மிகவும் அருமையும் பெருமையும் வாய்ந்தது. வண்ணம் பாடுதல், மிகவும் கடினம் வாய்ந்ததொரு கலைத்திறன் ஆகும். வண்ணம் என்னும் கலை நலஞ் சான்ற கவிதை பாடுதல், எத்துணைக் கடினமான செயல் என்பதனைப் **பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்**, தம் நூலில் ஓரிடத்திற் பின்வருமாறு குறிப்பிட்டருளி யிருக்கின்றார்.

"உயிரோடும் உயிர்மெய்யோடும் அளை குறிலுக்குக் குறிலும், நெடிலுக்கு நெடிலும், வல்லொற்றுக்கு வல்லொற்றும், மெல்லொற்றுக்கு மெல்லொற்றும், இடையொற்றுக்கு இடையொற்றும், எதுகை மோனையொடு கூடிய நாலடிகளும் அளவாகப் பொருந்த, எழுவாய் பயனிலை ஏய, வண்ணக் குழிப்புடைய பாட்டுப் பாடுதல், கால்களில் தளை பூட்டிக்கொண்டு மேளதாளங்கட்கு இசைய நடிப்பதொப்ப, மிகவும் கடினமான அருஞ்செயல் ஆகும்."

—திருப்பா, பாயிரம்.

இத்தகைய கடினமான சிறந்த வண்ணப் பாடல்களைத் **திருஞானசம்பந்தர்** பட்டினத்தார் அருணகிரிநாதர் வில்லிபுத்தூரார் பகழிக்கூத்தர் படிக்காசுப் புலவர் இரட்டையர் முதலிய சான்றோர்கள் பலர் பாடி இருக்கின்றனர். ஆயினும் வண்ணச் சந்தயாப்புப் பற்றிய இலக்கணம் ஒன்றும் தமிழில் இயற்றப் பெறவில்லை. ஆசிரியர் **தொல்காப்பியர்** தம்முடைய தொல்காப்பிய நூலின் செய்யுளியலில் 'வண்ணம்' பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றாராயினும், அதனால் தெளிவாகவும் விரிவாகவும் ஏதும் அறிந்து கொள்ளக் கூடவில்லை.

இந்நிலையில் சென்ற நூற்றாண்டில் தோன்றி வாழ்ந்திருந்தவரும், முருகன் அருள்பெற்ற சான்றோரும், பல்லாயிரக் கணக்கான பாடல்களைப் பாடியருளியவரும், வண்ணம் பாடுதலில் தலைசிறந்து விளங்கி யிருந்தவரும் ஆகிய மகான் **வண்ணச்சரபம்** திருப்புகழ்த் **தண்டபாணிசுவாமிகள்** அவர்கள், வண்ணப் பாடல்களின் இயல்பினை வகையுற விளக்கி, (?)தன்முதலாக **"வண்ணத் தியல்புநூல்"** என்னும் அரிய இனிய நூலொன்றை இயற்றி யளித்தார்கள். அதனை அவர்கள் நல்லிசைப் புலவர் ஆகிய நக்கீரர் போற்றி வழிபட்டு அருள்பெற்ற முருகன் தலம் ஆகிய திருப்பரங்குன்றத்தின்கண் புலவர்கள் வியக்கும் வண்ணம் அரங்கேற்றமும் செய்தருளினார்கள். இங்ஙனமே **"அறுவகை இலக்கணம்"** என்றும், சுவாமிகள் ஒருநூலை இயற்றி யிருக்கின்றார்கள்.

தமிழ் அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படத் தகுந்த **"வண்ணத்தியல்பு நூல்"** என்னும் இவ்வரிய சிறந்த இலக்கண நூல், இது பொழுது கிடைப்பதற்கு அரிதாக இருத்தலின், அருங்கலை ஆர்வலரும் அன்பியற் பெருந்தகையும் ஆகிய நமது **அறநிலைய ஆணையர்** அவர்கள், இதன் கையெழுத்துப் பிரதியினைப்

---

(1) "It is not perhaps extravagant to say that in its **poetic form,** the Tamil is more **polished** and **exact** than the Greek, and more **copious** than the Latin. In its fulness and power, it more resembles English and German than any other living language." —Dr. Winslow

பெரிதும் அன்புடன் பார்வையிட்டு, அருமையுணர்ந்து, இதனை நம் 'திருக்கோயில்' இதழில் வெளியிடுக என விரும்பிக்கூறி இசைவளித்தருளினார்கள்.

நூறு சூத்திரங்களும், உரையும் கொண்ட இவ்விலக்கண நூல், நம் இதழில் தொடர்ந்து வெளிவந்து, விரைவில் முடிவுறும். தமிழன்பர்கள் படித்துப் பயின்று பயன்கொள்வார்களாக!

—ஆசிரியர்

## வண்ணத்தியல்பு நூல்

### (நூற்றெடக்கம்)

**உயிர்வகை யீராறு, ஒற்றுச ரொன்பான்,**
**இவற்றின் புணர்ச்சி இருநூற் றீரெட்(டு),**
**ஆய்த மொன்றுஇவண் ஆய நால்வகை**
**எழுத்தும், பல்வகை எதுகைச் சொல்லும்,**
**பன்னரும் பொருளும், பழிப்பில் யாப்பும்,**
**வாய்பாட் டணியும், வழுவற வுணர்ந்தோர்**
**ஏவலின் முயல்வோர், எழிற்றவம் கோற்போர்**
**முருகன் தானே முதலெனத் தெளிந்தோர்,**
**மலய மால்வரை வந்தனம் புரிவோர்,**
**அனையவர் தமக்கே அழுக்கிலா தமைந்து**
**குலவுசீர் வண்ணம் குனிக்கில்எண் வகைத்தே.**

**(இ-ள்)** எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐவகையிலக்கணங்களையும் நன்கு கற்று வல்லுநராய், பெரும்புலவர்பால் அடுத்து அவரது பணி புரிவோரும், கொலைபுலையாதிய தீங்கு நீங்கிய அழகிய தவ நெறி யொழுகுவாரும், குருத்துவத்தைத் தனது அங்கமாகக் கொண்ட கௌமார இலக்கியப் பொருள் முருகக் கடவுளே என்றுணர்ந்தோரும், தமிழிலக்கணத் தலைவரான அகத்திய முனிவரது பொதிய மலையை நோக்கி வணங்குவோரும், இவர் போன்ற உத்தமர்களுக்குமே செவ்விதின் ஐயமற விளங்கற் பாலதான சந்தமானது, அளவிட்டுக்கூறின் எட்டுவகைப் படும் என்பதாம். (1)

**அருந்தமிழ்ச் சந்தத்து ஐயும் ஔவும்**
**ஈற்றிற் குறளாய் இடையினும் முதலினும்**
**குறிலொடொற்(று) எனவும் குலாஅய்ச் சிறிதும்**
**நெடிலெனல் இன்றி நிகழும் அன்றே.**

**(இ-ள்)** அரிய தமிழ் மொழியின் சந்த யாப்பின்கண் ஐகாரமும், ஔகாரமும், ஒரு சந்தத்துக்கான சொல்லின் ஈற்றில்வரின், குறிலளவாயும், நடுவிலும் முதலிலும் வரின், ஒரு குறிலும் மெய்யும், சேர்ந்தாற்போன்று, ஒன்றரை மாத்திரையாயும் ஒலித்து, நெடிலா யொலிக்கும் தன்மை சிறிது மின்றாகும் என்பதாம்.

**(குறிப்பு)** தத்த, தந்த, தாந்த முதலிய சந்தங்களின் உதாரணப் பெயர்களாகிய பத்தி, மஞ்சு, வேந்து என்பன போலும் பதங்கள், முறையே ஒற்று நீங்கிய இரண்டு எழுத்துக்களால் அமைவதால், முதலும் ஈறுமன்றி, இடை ஏதென்று ஐயுறுவார், ஒன்றரைச் சந்தமாகத் தொடரும் இடத்தைக் குறித்ததென்று அறியக்கடவர். ஒன்றரைச் சந்தம் ஆவன, தத்தன தந்தன என்றாங்கு வருவன. **வித்தைகள், சிந்தையில்** என்றாற்போல் ஐகாரம் சொல் நடுவில் வருமிடங்களிலும் குறிலாகவே யொலிக்கின்றதேனும், **முத்தையன்** (முத்தயன்), **பாலையன்** (பாலயன்) என்றாற்போலும் இடங்களில் இருவிதமாயும், இடத்துக்கேற்றவாறு ஒலிக்கும் உறழ்ச்சியைக் குறித்த ஏகதேச மெனக் கொள்ளலாம்.

இவ்வாசிரியர் தாம் இயற்றிய அறுவகை யிலக்கணத்தில், குறில் ஐந்து ஆனதுபோல் நெடிலும் ஐந்தென்றும், ஐஔ என்னும் இரண்டும் நடுவெழுத்தென்றும். அவற்றிற்கு முறையே மாத்திரை தனித்தனி ஒன்றரை யென்றும் கூறினர்.

**ஔவை** என்ற சொல்லின் முதலிலும் இறுதியிலும் உள்ள ஔகாரமும் ஐகாரமும் தய்ய சந்தத்தில் குறிலாகவே ஒலிக்கும். **எவையும்** என்ற சொல்லின் இடையில் உள்ள ஐகாரமும், **சிரௌதி** என்ற சொல்லின் இடையில் உள்ள ஔகாரமும் குறிலாகவே ஒலிக்கும் எனத் தெரிக. (உ)

1. வையம்-முதலில் ஐகாரம் - தய்ய
2. செவ்வை-ஈற்றில் ஐகாரம் - தய்ய
3. ஔவை-முதலில் ஔகாரம் - தய்ய
4. எவையும்-இடையில் ஐகாரம் - தய்ய
5. சிரௌதி-இடையில் ஔகாரம்-தய்ய.

குறிப்பு:—

1. தய்யன தனதன-கௌசலை யுதவிய
2. தனதன தய்யன-அணிமிகு கௌசலை
3. தனனதன தனனதன-அணிபொலி கௌசலையுதவு.

என ஔகாரம் முதல் இடையில் ஒற்ற ணைந்து ஒன்றரை மாத்திரையாயும், ஈற்றிற் குறிலாயும் நின்றமையும்.

1. தய்யன தனதன-வைதிக மருவிய
2. தனதன தய்யன-பிரபல வைதிக
3. தனனதன தனனதன-அருள்பொலிவை திகமருவு

என ஐகாரம் முதல் இடையில் ஒற்ற ணைந்து ஒன்றரை மாத்திரையாயும், ஈற்றிற் குறிலாயும் நின்றமையும் அறிக. (2)

இடையினத் தொற்றேடு உறமும் ஆய்தமே.

**(இ-ள்)** யரலவழள என்னும் இடையின மெய்களின் இடைநிலையால் ஒலிக்கும் சந்தத்தோ டொப்பவே, தனி நிலை என்னும் ஆய்தவெழுத்தும் இயங் கும், இதன் விவரம் பின் 76ஆம் சூத்திரக் குறிப்பிற்காண்க. (3)

## 2. வகையிலக்கணம்

தத்தவும் தாத்தவும் தந்தவும் தாந்தவும்
தனவும் தானவும் தன்னவும் தய்யவும்
தத்தா வென்பதில் நீடலும் அடங்கும்
எண்வகைச் சந்த மென்பர் பெரியோர்.

**(இ-ள்)** தத்த தாத்த தந்த தாந்த தன தான தன்ன தய்ய எனக்குறிக்கப் படுவன வாகிய சந்தவகை யெட்டினுள், அவற்றின் ஈறு திரிந்து, தத்தா தாத்தா தந்தா தாந்தா தனு தானு தன்னு தய்யா எனவருவனவும் அடங்கு மாற்றுல் வேருகப் பிரித்து எண்ணுது, அவற்றின் சார்பெனக் கொண்டு, புல மை மிக்க பெரியோர்கள் சந்தம் எட்டு வகையே யாமெனக் கூறுவரென்பதாம்.

தத்தா முதலிய சார்புச் சந்தங் களையும், தனித்தனியாகக் கணக்கிட்டுச் சந்தவகை பதினுறென்றும், மற்றுள்ள விகாரங்களைக் கொண்டு வேறு பல்வகை யாயும் மயங்காமல், மாணவர் தெளி வுறும் பொருட்டு இச்சூத்திரம் வகுத்த தென்பது திண்ணம்.

"சித்தி யோரெட்டும் என்றும்" (சந்திய சூத்திரம்), "எட்டு வண்ணமும் பாடிடும் இருந்திறல்" (புலவர்புராணம்) என்றும், இன்னும் பலவாறும் இவ்வா சிரியரே பல இடங்களிலும் கூறியிருத் தல், "தாஅன் நாட்டித் தனுது நிறுப்பு" என்னும் மதம் ஆகும். (4)

அளவிற் கெண்வகைத் தாகிய வண்ணப்
புணர்ப்பிற் றேன்றிப் பொலிவ ஆய
குழிப்பின் தொகைக்குக் கோடியுஞ் சிறிதே.

**(இ-ள்)** முற்சூத்திரத்திற் குறித்த முறையில், எட்டென்று அளவிடப்பட் டுள்ள வண்ணம் என்னும் சந்தங்களின் கலப்பினுல் உண்டாகின்ற குழிப்புகள், எத்தனையென்று ஆராயப்புகின், கோடி யென்னுந் தொகையுஞ் சிறிதென்னுந் தகுதியில் விரிவுறும் என்பதாம்.

தமிழ் நெடுங்கணக்கில் எடுக்கப்பட் டுள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத் துக்களின் பிறழ்ச்சி முறையில் உண்டாகி வழங்கப் பெறும் பதங்களும், பாடல் களும் இனி உண்டாகும் பாடல்களும் அளவு கடந்தது போல், சந்தங்களின் கலப்பினுற் பல குழிப்புகளும், குழிப்பு களின்படி பல கவிகளும், உண்டா கின்றன என்பதாயிற்று. (5)

வண்ணக் குழிப்பால் வழங்கும் செய்யுள்
வாதித் திகலிய வண்டமிழ்ப் புலவர்
தம்முயர் வொளிர்வான் தக்கோர் மாட்டுப்
பாடலும் முழுதுணர் பண்ணவன் அருட்பேறு
எய்தப் பகரலும் இழுக்கிலா வழக்கே.

**(இ-ள்)** சந்தங்களில் சிலவற்றைச் சேர்த்து அமைத்துக் கொள்ளப்படுகிற அளவினதாகிய குழிப்பின்படி பாடப் படும் சந்தக்கவிகள், தம்மிடம் தர்க்கித்து வரும் புலவர்களிடம் வெற்றியடைவதற்

காகவும், எல்லாம் உணர்ந்த முழுப்புல வனுகிய முருகக் கடவுளின் திருவருளேப் பெறும் பொருட்டாகவும், பாடுவது குற்றமற்ற முறை என்பதாம். எனவே சாதாரணப் புலவர்கள் தம் வறுமை தீர்தற்காக அரசர்கள் மீதோ செல்வர் மீதோ பாடுவதும், இச்சை நிமித்தம் பெண்களேயும், சோலே நதி மலே முதலிய வற்றையும் வருணித்து அலங்கரித்துப் பாடுவதும், இழுக் கென்பது இந்நூற்பா வின் கருத்து ஆயிற்று. (6)

**வண்ணத் தளவில் வடமொழி மருஉச் சொற்**
**புல்லினும் மதுரப் பொலிவு குன்றலும்**
**குழிப்புச் சிதைவும் கொடுந்தமிழ்ப் புணர்ப்பும்**
**அளபெடைச் சேர்க்கையும் ஆகா வன்றே.**

**(இ-ள்)** சந்தயாப்புச் செய்யுள்களின் அளவில் வடசொற்களும், உலக வழக்கச் சொற்களும் வருவதாயினும் வருக. சுவைக் குறைவும், குழிப்பின் சந்தச் சிதைவும், அயல் மொழி போன்று இருண்ட பதங்களும், அளபெடைத் தொடர்பும் அமைதல் கூடாதென்பதாம்.

**''வண்ணத் தளவில்''** என்றதால், ஏனைய செய்யுள் யாப்புக்களில் வருதல் பற்றி இந்நூல் மறுத்ில தென்பதும்; **''புல்லினும்''** என ஒருசார் ஒத்துக் கூறியது ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள், வில்லி புத்தூராழ்வார், படிக்காசுப் புலவர், முதலிய சந்தப்பாவலர்களது இலக்கியங்களில் அவ்வகைப் பதங்கள் விரவி வருதல் பற்றியும் என்க.

எனவே, முன்னோர்களின் கவிகளில் உள்ளதை மறுத்திகழாமலும், தாம் அவற்றை ஆதாரமாகக் கொண்டு பாடா மலும் இருத்தல் வேண்டும் என்பதா யிற்று. இனி, இல்கு வடமொழி யென்றது.

சிறப்பெழுத்தாலாகிய தர்மம், த்ரி சூலம், ம்ருகமதம் என்றாற் போலும் பதங்களேக் குறித்ததன்றி, முகம் தெய் வம் ஆகாசம் சந்தனம் என்றாற் போலுள்ள சொற்களேக் குறித்ததன்று என்க. (7)

### தத்த சந்தம்

**இருவகைக் குறிலினும் வல்லினத் தோற்றேடு**
**அவ்வுயிர் மெய்க்குறில் ஒன்றில் தத்தவே.**

**(இ-ள்)** உயிர்க்குறில் உயிர்மெய்க் குறில் என்னும் இவ்விருவகையில், யாதாயினு மொன்றன்பின் வல்லொற் றொன்றும், வல்லினக் குறிலொன்றும் வருமாஞல், **தத்த** என்னும் சந்தம் ஆகும் என்பதாம்.

(உ-ம்) அக்கு, பத்தி. (8)

### இதுவுமது

**குறிலொடு வல்லொற்று அவ்வுயிர் மெய்க்குறில்**
**இசைந்துமற் றிருவகை ஒன்றொன் றடுபினும்**
**தத்த ஆம்எனச் சாற்றுதல் இயல்பே.**

**(இ-ள்)** ஒரு குற்றெழுத்துடன் வல்லினமெய்யும், அவ்வினக் குறிலும், அதன்பின் இடையொற்றேனும் மெல் லொற்றேனும் அடுத்துவரின், **தத்த** என்னும் சந்தமென்று சொல்வது முறையென்பதாம்.

(உ-ம்) ஒற்றர், சிட்டன் (9)

### இதுவுமது

**குறிலொடு இடையினத் தொற்றும் வல்லொற் [றும்**
**அவ்வினத்து உயிர்மெய்க் குறிலும் தத்தவே.**

**(இ-ள்)** குற்றெழுத்தொன்றினுடன், இடையின மெய்யொன்றும், வல்லின ஒற்று ஒன்றும், வல்லினக் குறிலொன்றும் சேர்ந்துவரின் தத்தச் சந்தமாகும்.

(உ-ம்) நெய்த்து.

### இதுவுமது

**குறிலுடன் இடையின மெய்யும் வல்லின**
**மெய்யும் அவ்வுயிர் மெய்க்குறில் ஒன்றும்**
**மெல்லினத் திடையினத் தொற்றினில் ஒன்றும்**
**தத்த ஆம் எனச் சாற்றுவர் புலவோர்.**

**(இ-ள்)** ஒரு குறிலுடன், இடையின மெய்யொன்றும், வல்லொற்றொன்றும், வல்லினக்குறிலொன்றும் மெல்லொற் றொன்றும், அல்லது இடையொற் றொன்றும் வரின், அதுவும் **தத்தச்** சந்த மென்று புலவோர் கூறுவரென்பதாம்,

(உ-ம்) மெய்ச்சொல், கர்த்தன். (11)

# பராங்குச முனியும் - பரகால கவியும்

(மஹாவித்வான் ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கரர்சாரிய சுவாமிகள்.)

பராங்குச முனியென்பது நம்மாழ்வாரை; பரகாலகவி யென்பது திருமங்கை யாழ்வாரை. ஆழ்வார்களுள் இவ்விருவர்க்கும் பலவகைளில் பொருத்தம் காண்பதனால் இவ்விருவரையும் சேர்த்து அநுபவிக்கிறோமிங்கு. "**பராங்குச பரகால யதிவராதிகள்**" என்றருளிச் செய்த முன்னோர்களின் திருவுள்ளத்திலும் இப்பொருத்தம் உறைந்திருப்பதேயாம். திருவரங்கம் பெரிய கோயிலில் திருவத்யயனோத்ஸவத்தில் மற்றையாழ்வார்களிற் காட்டிலும் இவ்விருவர்க்கு முண்டான சேர்த்தியைக் கட் கூடாகவுங் காண்கிறோம். நம்மாழ்வாரருளிச் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி யென்னும் நான்கு திவ்வியப் பிரபந்தங்களானவை அங்கிகளான நான்கு வேதங்களென்றும், திருமங்கை யாழ்வாரருளிச் செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்னும் ஆறு திவ்வியப் பிரபந்தங்களானவை ஆறு அங்கங்களென்றும் கொள்ளப்படுவது ஸம்பிரதாயம். அதாவது, வட மொழியில் அங்கிகளான வேதங்கள் ருக் யஜுஸ் ஸாம அதர்வணமென்று நான்காயும், அவற்றுக்கு அங்கங்கள் சிக்ஷா வ்யாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்று ஆறாயுமிருப்பது போல் தென்மொழியிலும் இங்ஙனே கொள்ளப்படுவதாக வுணரத் தக்கது.

மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் திருமங்கையாழ்வார்க்கு இட்டருளின இரண்டு பாசுரங்களில் இரண்டாவது பாசுரம் "மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கங்கூற வவதரித்த—வீறுடைய கார்த்திகையில் கார்த்திகைநாள் இன்றென்று காதலிப்பார் வாய்த்த மலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து" என்பதாம். **மாறன்**—நம்மாழ்வார்; அவர் பணித்த தமிழ்மறை—திருவிருத்தம் முதலான நான்கு திவ்வியப் பிரபந்தங்கள். மங்கையர்கோன் கூறின ஆறங்கம்—பெரிய திருமொழி முதலான ஆறு திவ்வியப் பிரபந்தங்கள்.

மணவாள மாமுனிகள் இங்ஙனே யருளிச் செய்தது "வேத சதுஷ்டய-அங்கோபாங்கங்கள் பதினாலும் போலே இந்நாலுக்கும் இருந்தமிழ் நூற்பனுவலாறும் மற்றையெண்மர் நன்மாலைகளும்" (43) என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையை அடியொற்றியேயாம். இங்கே ஒரு சங்கை தோன்றும்; நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் நான்காயும், திருமங்கையாழ்வாருடைய பிரபந்தங்கள் ஆறாயும் அவதரித்திருப்பது கொண்டே இப்படி அங்காங்கி பாவம் சொல்லி விடலாமோ? வடமொழியில் வேதாங்கங்களாகச் சொல்லப்பட்டுள்ள சிக்ஷை வியாகரணம் சந்தஸ்ஸு நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்பவையாலும் வேதங்களின் பொருளை நிர்ணயிப்பதற்கு இன்றியமையாதனவா யிருப்பதால் அவற்றை அங்கங்களென்னப் பொருத்தமுண்டு. இங்கு அப்படியில்லையே. பெரிய திருமொழி முதலான திருமங்கையாழ்வார் பிரபந்தங்களைக் கொண்டு திருவிருத்தம் முதலான நம்மாழ்வார் பிரபந்தங்களின் பொருளை நிர்ணயிப்பதென்பது கூடுமதன்றே ஆதலால் நான்கு, ஆறு என்கிற லக்கத்தை மட்டுங்கொண்டு 'அவை அங்கி, இவை அங்கம்' என்று சொல்லிவிடலாமோ?—என்று சங்கிக்க நேரும்.

இதற்குச் சுருக்கமாக வுணர்த்துகின்றோம். வடமொழியிலுள்ள வேதாங்கங்கள் வேதத்திற்கு உபகாரகங்கள் என்று கொள்ளப் படுவதாகத்தானே தேறி

நிற்கும். அப்படியே திருமங்கையாழ்வாருடைய பிரபந்தங்கள் நம்மாழ்வாருடைய பிரபந்தங்களுக்கு உபகாரகங்கள் என்று கொள்ளக் குறையில்லை. ஆயிரத்திற்கு மேற்பட்ட பாசுரங்களை யருளிச் செய்தவரென்கிற பெருமை நம்மாழ்வார்க்கும் திருமங்கையாழ்வார்க்கு மொக்கும். எம்பெருமானை நம்மாழ்வாரநுபவிக்கிற வகைகளும், திருமங்கையாழ்வாரநுபவிக்கிற வகைகளும் பெரும்பாலுமொத்திருக்கின்றன. 1. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினுடைய ஹேயத்தன்மையைப் பேசிக்கொண்டே பிரபந்தம் தொடங்குகை, 2. எம்பெருமான்பக்கலில் அளவுகடந்த ப்ராவண்யத்தை வெளியிடுகை, 3. அதில் அர்ச்சாவதாரத்தில் மிக்க அபிநிவேசத்தைக் காட்டுகை, 4. எம்பெருமானோடு கலவியும் பிரிவும் மாறிமாறி வருகை, 5. தம் வாக்காலே பேசுமளவோடு நில்லாமல் பெண்மையெய்தியும் பேசுகை, 6. தூதுவிடுதல், 7. இரவில் துயரம் பொறுக்க முடியாமை கூறல், 8. எம்பெருமானாகத் தம்மையனுகரித்துப் பேசுதல், 9. மடலெடுக்கை, 10. இந்திரியங்களுக்கு ஆற்றவொண்ணாது கதறுகை, 11. எம்பெருமானுடைய சுதந்திரத்தை நினைத்து அஞ்சுகை, 12. அடிக்கடி ப்ரபத்தி செய்கை, 13. ஆர்த்தியினுடைய கரைபுரட்சி, 14. பிறர்துன்பம் பொறாமல் பலகாலும் ஹிதம் சொல்லுகை......... முதலான பலவும் இவ்வாழ்வார்களிருவர்க்கும் ஒத்திருக்கும். இவற்றையெல்லாம் விரிவாக விளக்கி மகிழ்ந்து மகிழ்விக்க வேண்டியே இஃதெழுதப் புகுந்தபடி.

நம்மாழ்வார் விரிவாக அருளிச்செய்தவற்றைத் திருமங்கையாழ்வார் சுருக்கிப் பேசுவர். அவர் சுருக்கி யருளிச் செய்தவற்றை இவர் விரித்துப் பேசுவர். விபவாவதாரத்திலோ அர்ச்சாவதாரத்திலோ நம்மாழ்வார் கொண்ட அபிநிவேசத்தை இவ்வாழ்வார் மிக்க வுகப்புடனே எடுத்துக் காட்டுவர்—என்னு மிவ்விரண்டு விஷயங்கள் முந்துற முன்னம் ரஸித்து அநுபவிக்கத் தக்கவை.

**— நம்மாழ்வார் விஸ்தரித்து**

**இவ்வாழ்வார் சுருக்கியது —**

திருவாய் மொழியில் (ஐந்தாவது பத்து, ஆறுவது பதிகம்) * கடல் ஞாலஞ் செய்தேனும் யானே யென்னும்* என்று தொடங்குவது தாய் பாசுரமாக அமைந்தது; மகள் ஸர்வேச்வரனாகத் தன்னை யனுகரித்துப் பேசுகிறபடியை வெகு விரிவாகச் சொன்னது. இதைப் பெரிய திருமொழியில் (8—2—6.) ஒரே பாசுரத்தினால் சுருக்கினர். "வட வரை நின்றும் வந்து, இன்று கணபுர மிடவகை கொள்வது யாமென்று பேசினாள்" என்கிற பாசுரங் காண்க. அவ்வாழ்வாருடைய அநுகாரம் தாய்ப் பேச்சில் அமைந்தது போலவே இவ்வாழ்வாருடைய அநுகாரமும் தாய்ப் பேச்சில் தான் அமைந்தது. எம்பெருமானுக்குத் தூது விடுவதென்பதை யெடுத்துக் கொள்வோம். இது திருவாய்மொழியில் "அஞ்சிறைய மடநாராய்" "வைகல் பூங்கழிவாய் "பொன்னுல காளீரோ" "எங்கான லகங்கழிவாய்" என்னும் நான்கு பதிகங்களில் நாற்பது பாசுரங்களினால் விரிவாக நிகழ்ந்திருக்கின்றது. இதனைத் திருமங்கையாழ்வார் மிகச் சுருக்கமாகப் பேசினர். பெரிய திருமொழியில் (3—6.) " "தூவிரிய மலருழக்கி" யென்னும் பதிகம் தூது விடுவதாகத் தொடங்கப்பட்டு நான்கு பாசுரத்தோடு தூது விடுதல் நிறுத்தப்பட்டுவிட்டது. மேலேயும் (9—4.) "காவார் மடற் பெண்ணை" என்னும் பதிகத்தில் இரண்டு பாசுரங்களில் மட்டுமே தூது விடுதல் நிகழ்ந்தது. சோறு கூறைக்காக நரஸ்துதி பண்ணி ஸ்வரூப நாசமடையும் ஸம்ஸாரிகளை நோக்கி நம்மாழ்வார் (3—9.) "சொன்னால் விரோதமிது" என்னும் பதிகத்தில் வெகு விரிவாக ஹிதங் கூறினர். இவ்வாழ்வார் (1—1—7.) "சொற்பொருளாளீர்! சொல்லுகேன் வம்மின் சூழ் புனற் குடந்தையே தொழுமின், நற்பொருள் காண்மின் பாடி நீருய்ம்மின் நாராயணா வென்னும் நாமம்" என்று அதனைச் சுருக்கிப் பேசினர்,

—தொடரும்.

# திருக்கச்சூர்க் கல்வெட்டுக்கள்

(கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.)

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம் 350)

இத் திருக்கச்சூர்க் கல்வெட்டினுல் அறியப்படும் செய்தி பின்வருமாறு: ஒரு சமயம் உடன் பிறந்தாரான ஐந்து பிராமணர்களும் சில வேளாளக் குடியானவர்களும் ஒன்று சேர்ந்து, தங்கள் குல தருமங்களை விட்டொழித்துக் கீழ்மக்களின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டு ஆயுத பாணிகளாகி, நாட்டுக் குடிமக்களை வருத்தி வந்தார்கள். பிராமணர்களின் பெயர்கள் ஆட்கொண்ட வில்லி, பாம்பணையான், மலைவாய்க்கோன், வரதன், செல்வன் என்பன. அக்கூட்டத்தார் உயிருக்கு அபாயமான ஆயுதங்களை ஏந்திக் கொண்டு பிராமணர்களைக் கொன்றும், அவர்கள் காதுகளை அறுத்தும், பிராமணப் பெண்களை அவமதித்தும், நாட்டில் கொள்ளையிட்டும், கால்நடைகளை அழித்தும், நாட்டுமக்களுக்குப் பெரும் கேடுகளை விளைவித்தார்கள். இதுபற்றி அந்நாட்டு அதிகாரிகளான விக்கிரம சோழதேவன், திருமலைதண்டார் என்ற இரண்டு அரசியல் அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவ்வதிகாரிகள் அக்குற்றவாளிகளைப் பிடித்து அடித்தும், தண்டம் விதித்தும், அவர்கள் வீடுகளை இடித்தும், அவர்களைத் தம் மேற்பார்வையில் வைத்திருந்தார்கள். ஆனால் அத்தண்டனை போதவில்லை, அவர்களின் துர்க்குணம் மாறவில்லை. மீண்டும் குற்றங்களைச் செய்துவந்தார்கள். நாட்டு மக்கள் ஆட்சியாளர்களுக்கு மீண்டும் விண்ணப்பித்தார்கள். அந்நாளில் அந்நாட்டின் ஆட்சியாளனை பொத்தப்பி அரையன் என்ற ஆட்சியாளனிடம் முறையிட்டார்கள். அவ்விளவரசன் வள்ளுவநாட்டு ஆள்வான் இருங்கோளர் என்ற தலைவனிடம் உத்தரவு அனுப்பி, மலையாளப் போர் வீரர்களை உடன் கொண்டுபோய்க் குற்றவாளிகளைப் பிடித்து, நீதி செலுத்தும்படி ஆணையிட்டான். குற்றவாளிகளைப் பிடிக்கும்போது நடந்த சச்சரவில் பல மலையாளிகளைக் கொன்றும், மற்றவர்களைக் காயப்படுத்தியும், அவர்களுடைய ஆயுதங்களைக் கொள்ளையடித்துக்கொண்டும், குன்றுகளுக்கு ஓடிவிட்டார்கள். அரசன் அனுப்பிய படை போதாமல் போகவே, கொள்ளைக்காரர்களால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால் ஆட்கொண்ட வில்லியும், பாம்பணையானும் சிக்கிக் கொண்டார்கள். அவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். சில நாள்களுக்குப் பின்னர் அரசன் கண்ணூட்டூரில் பாளையம் இறங்கியிருந்தபோது, அவனிடம் அவர்களைச் சமர்ப்பிக்க, அந்த இரு கொள்ளைக்காரர்களுடன் மற்ற கைதியாட்களும் கொண்டு செல்லப்பட்டார்கள். அப்போது தப்பியோடின மற்ற மூன்று சகோதரர்களும் வந்து, காவலாளிகளைத் தாக்கிக் கைதிகளை விடுதலை செய்து கொண்டு ஓடிவிட்டார்கள். அதிலே காவலாளி கொல்லப்பட்டான். ஊட்டிப் பாக்கத்து வடக்கில் இருந்த மலைக்காடுகளிலே அவர்கள் ஒளிந்து கொண்டார்கள். அதைக் கேட்டு அரசன் அவர்களைப் பிடிக்கும்படி கடுமையாக உத்தரவிட்டான். கீழ்மக்களுக்குரிய தண்டனையும் இடும்படி கட்டளையிட்டான்.

கீழ்மக்களுக்குரிய தண்டனை என்றால், சிறைத் தண்டனை மட்டுமல்ல. குற்றவாளிகளின் பரம்பரைச் சொத்துக்களைக் கோயிலுக்கும், மற்ற அறநிலயங்களுக்கும் விற்று, அந்த விற்பனைப் பணத்திலிருந்து விதிக்கப்பட்ட அபராதம் எடுத்துக்கொண்டு, மற்றும் மீதித் தொகையைக் கோயிலுக்கும் அறநிலயங்களுக்கும் கொடுத்து விட்டு, மீதியிருந்தால் குற்றவாளிகளின் ஆன்மா உய்வதற்காகக் கோயில்களுக்குத் தானம் செய்யப்படுமாம். இந்த உத்தரவுப்படியே நிறைவேற்றப்பட்டது. இதனால் என்ன தெரிகிறது என்றால், ஒரு கிராம சபையால் குற்றவாளிகளை அடக்க முடியாமல் போகும்போது, நாட்டுத் தலைவர்களும் அரசனும்கூட, கட்டளைகளை மேற்கொண்டு தண்டனை இடுவார்கள் என்பதே.

கொள்ளைக் காரர்களைத் தண்டிக்கக் கிராம சபையினரால் முடியாமல் போனபோது, நாட்டுத் தலைவர்களும் ஆட்சித்தலைவர்களும் போர் வீரர்களின் உதவியைக் கொண்டு, அமைதியை நிலைநிறுத்துவார்கள். அதற்கு நாட்டுப் பொதுமக்கள் ஒத்துழைப்பார்கள். தண்டனை இடும்போது மீண்டும் குற்றங்களைச் செய்ய ஒண்ணாதபடி அத்தனை எச்சரிக்கையோடு அதனை இடுவார்கள். மேலும் குற்றவாளிகளின் ஆன்ம ஈடேற்றத்தைக் கருதி, ஒரு பகுதி அபராதத்தைக் கோயிலுக்கும் தருவார்கள். இந்தப்படி குற்ற விசாரணைகள் 13ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடில் நடைபெற்றன. சோழமன்னர்கள் மனுநீதியை ஒருசிறிதும் பழுதுபடாமல் செலுத்தி வந்தார்கள். இது சிறப்பு அல்லவா!

இக்கல்வெட்டினால் நாம் அறியக் கூடியதும் குறிப்பிடத்தக்கதுமான செய்திகள் பல உள்ளன.

(1)13 ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டில் கொலை கொள்ளை முதலிய அநாகரிகச் செய்திகள் நடந்தன. அரசாங்கத்தால் எளிதில் அடக்க முடியவில்லை. போர் வீரர்களைக் கொண்டு அடக்கப்பட்டன.

(2) கொலை கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் சிவ பிராமணர்களும் மற்றவர்களும் ஆவர்.

(3) முதலில் சிறை செய்யப்பட்டதிலும், லகுவாகத் தண்டிக்கப்பட்டதிலும் அடங்கவில்லை. ஆகவே அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டி வந்தது. அதற்காக அக்காலத்து நீதி முறைப்படி அவர்களில் நின்று பிராமணத்துவம் நீக்கிக் கீழ் வகுப்பினராக்கி, அவர்களுக்குரிய தண்டனை விதிக்கப்பட்டது. (சென்ற போரில் Sir Roger Caservent என்ற உயர்ந்த அலுவலாளர் செய்த இராசத்துரோகத்திற்காகத் தண்டனை தருகையில், அவனுடைய 'சர்' பட்டத்தை நீக்கிவிட்டுப், பிறகுதான் தண்டனை தரப்பட்டது). இது ஒரு குறிப்பிடத்தக்க செய்தி அல்லவா.

(4) தண்டனை விதிப்பதில் குற்றவாளிகளுடைய சொத்துக்களை விற்று அத்தொகையிலிருந்து தண்டனைத் தொகையை எடுத்துக்கொண்டு, பாக்கி இருந்த தொகையைத் திருக்கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. கோவில் வழிபாட்டிற்குத் தரப்பட்டதன்றிக் குற்றவாளிகள் ஆன்மா உய்வதற்காகவும் தானம் செய்யப்பட்டது. குற்றம் செய்தவர்களின் ஆன்மாவிற்கு இரக்கமும் தயையும் காட்டப்பட்டது.

(5) குற்றவாளிகளின் பெயர்கள்: 1. ஆட்கொண்டவில்லி, 2. பாம்பணையான், 3. மலைவாய்க்கோன், 4. வரதன், 5. செல்வன் என்று கல்வெட்டிற் குறிக்கப்பட்டுள்ளன.

(6) அதிகாரிகளின் பெயர்கள்: 1 விக்கிரமசோழ தேவன், 2. திருமலை தண்டான். பெரிய அதிகாரியின் பெயர், பொத்தப்பி அரையன். மற்றும் ஒரு அதிகாரி மள்ளுவநாட்டாழ்வான் இருங்கோளன்.

(7) ஊர்கள்: அரசன் தங்கியிருந்த ஊர் காஞட்டூர். கோயில் கச்சூர் ஆலக்கோயில். மற்றைய ஊர் உத்திப்பாக்கம். இவ்வூருக்கு வடபுறத்தில் இருந்த மலைகளில் தான் குற்றவாளிகள் ஒளிந்து கொண்டார்கள். சில மலைகள் தற்காலச் செங்கல்பட்டைச் சுற்றிலும் இருப்பவைகள். வடக்கே ஆலக்கோயில் தெற்கே ஒத்திவாக்கம் வரையில் உள்ளவைகள். திருக்கச்சூர், ஆப்பூர் (516 அடி), திருத்தேரி மலைகள், வல்லம், திருவடிசூலம் (திருவிடைச்சுரம்) 686, திருமணி (771) களத்தூர் அருகு, ஒத்திவாக்கம் இவைகளில் இருக்கின்றன.

(8) இத்தனைக் கடுமையாக நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் நாட்டில் குழப்பம் அடங்கி அமைதி காணல் அரிது.

இந்தச் சம்பவங்கள் நடந்த கி. பி. 13ஆம் நூற்றாண்டில் செங்கல்பட்டு நகரம் தோன்றியிருக்கவில்லை. ஏதாவது ஒரு சிற்றூர் பாலாற்றங்கரையில் மலைகளுக்கு அருகில் இருந்திருக்கலாம். அது ஒரு பெரிய கோயிலில்லாத சிறிய பாக்கமாக இருந்திருக்கலாம். சோழப் பேரரசு பலவீனமடைய, மதுரைப் பாண்டியர் சிறிது முன்னேறினர். அவ்வரசும் வடநாட்டு முசுலிம்களால் அழிந்துபோக விஜய நகரத்துக் கருநாடகப் பேரரசு தென்னாட்டை ஆளத்தொடங்கியது.

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தம் வடநாட்டு யாத்திரையை மலை நாட்டிலிருந்து தொடங்கிய உடையவர் விரைவிலே துவாரகையை அடையவேண்டு மென்று விரும்பினார். அதனால் இடையிலே உள்ள திவ்யதேசங்களில் எழுந்தருளியுள்ள எம்பிரான்களை விரைவிலே ஸேவித்தவராய் தம் பிரயாணத்தின் கதியைத் துரிதமாக்கித் துவாரகையை அடைந்தார்.

எண்ணரும் சமயத் தாரில்
இலங்குமேல் திசையில் ஓங்கி
நண்ணிய புலவர் தம்மை
நான்மறை முடிவால் வென்று
மண்ணவர் வணங்கி வாழ்த்த
வானவர் துதிசெய் தேத்த
உண்ணிறை அறிவின் மிக்கான்
உத்தர திசையை உற்றான்.

வழியிலுள்ள வாதியரைவென்று துவாரகை நகரம் சென்ற எம்பெருமானார் அங்கு "பதினாறுயிரவர் தேவிமார்" பணிசெய்ய வீற்றிருக்கும்" "வண் துவராபதி மன்னனாய்" எழுந்தருளியிருக்கும் கண்ணன் கழலிணைகளை நண்ணி அவனது அவதார ஸௌலப்யத்திலே உள்ளம் ஈடுபட்டுப் பரவினார். அங்கு நின்றும் நேரே வடமதுரை சென்றார்.

வைகுந்த நகரோடொத்த மதுரைமா நகரிலே எழுந்தருளியுள்ள 'மதுரையார் மன்னன்' அடிநிலை தொழுது பின்னர் ஆண்டாள் திருவுள்ளத்திலே பாரித்தபடி அவ்வரிசையிலே மதுரைப்புறம், திருவாய்ப்பாடி, நந்தகோபாலன் கடைத்தலை, யமுனா தீரம், போர்க்களமாகக் காளியன் பண முடிகள் மீதே நடமிட்ட பொய்கைக்கரை, தன்னேராயிரம் பிள்ளைகளும் வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும் போது இது என்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பக்த விலோசனம், பலதேவன் வென்ற பாண்டிவடம், கொற்றக்குடையாக ஏந்தி நின்ற கோவர்த்தனம் என்ற கண்ணனது பிள்ளை நல் விளையாட்டுகள் நிகழ்ந்த தலங்களை எல்லாம் கிட்டி அநுபவித்தார். அங்கே

---

அவர்கள் தென்னாடு முழுதும் கோட்டை கொத்தளங்களைக் கட்டினர். நாயக்கர்கள் நாட்டுத் தலைமை வகித்துக் கருநாடகத்தார் பொருட்டு ஆட்சிபுரிந்தார்கள். 16ஆம் நூற்றாண்டில்நாய்க்கத் தலைவர்களால் தொண்டை நாடு ஆளப்பட்டது அப்போதுதான் செங்கற்பட்டில் ஒரு கோட்டை ஏற்பட்டது. செங்கல்வராயன்பட்டு என்பது செங்கற்பட்டு ஆயிற்று. கச்சூருக்கும் ஓத்திவாக்கத்திற்கும் இடையில் சிறுகுன்றுத் தொடர்களுக்கு இடையில் ஏற்பட்ட இந்தக் கோட்டையினால் நாட்டில் அமைதி ஏற்பட வழி உண்டாயிற்று. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அமைதியின்மை விஜயநகரப் பேரரசுக் காலத்தில் அடியோடு தொலைந்தது. பெரிய ஊராக இருந்த திருக்கச்சூர் சிறிய ஊராகிப் புதிதாக முளைத்த செங்கல்வராயன் பட்டு பெரிய ஊராக வளர்ந்து, ஒரு மாவட்டத்தின் தலை நகரமும் ஆயிற்று.

[இந்நாளில் செங்கற்பட்டு என வழங்கிவரும் நகரத்தின் பெயர், முன்னாளில் செங்கழுநீர்ப்பட்டு அல்லது செங்கழுநீர்ப்பற்று என வழங்கியிருந் திருத்தல் வேண்டும் எனச் சில அறிஞர்கள் கூறுவதுண்டு. ஆனால் இக்கட்டுரையில் நமது 'கோவை கிழார்' அவர்கள் செங்கல்வராயன் பட்டு என்பதே செங்கற்பட்டு எனமருவி வழங்கி வருவதாகக் குறிப்பிட்டிருப்பது, ஒரு புதிய—அரிய சிறப்புச் செய்தியாகும்.

—ஆசிரியர்.]

தமக்கு எதிராய் வாதம் செய்யவென்று வந்த வித்வான்களையும் ஜயித்துத் தம்முடைய வெற்றிக்கொடியேற்றி அங்கு நின்றும் போந்து காச்மீரம் சென்று சாரதாபீடம் என்று பிரஸித்தி பெற்ற வித்வத் பீடத்துக்குச் சென்றருளினார்.

காச்மீரத்திலே வேதாந்த பரமான சகல க்ரந்தங்களும் சேமித்து வைக்கப்பெற்று அதற்குச் சான்றாக ஸரஸ்வதியும் அங்கு எழுந்தருளியுள்ள காரணத்தாலே அது சாரதாபீடம் என்றழைக்கப் பெற்றது. அங்கே சென்ற உடையவர் நான்மறைகளின் உட்பொருளை மறைத்து அபார்த்தங்கள் கூறிவந்த குத்ருஷ்டிகளாய் அங்கிருந்த வித்வான்கள் அனைவருடனும் வாதம் செய்ய அமைந்தார். மஹாபண்டிதனான அவ்வூர் அரசன் மத்யஸ்தமாயிருக்க, உடையவர் தாம் இயற்றியிருந்த **வேதாந்த ஸாரம்** என்னும் கிரந்தம் கொண்டே மற்றைய வித்வான்கள் வாய் திறக்க வொட்டாது வாதிட்டார். மத்யஸ்தமாக நின்ற அரசன் உடையவரை நோக்கி, 'ஸ்வாமி தேவரீருடைய வாதம் அசைக்க முடியாதபடி அமைந்துள்ளது. எனினும் தேவரீர் கூறியவற்றுக்கெல்லாம் பிரமாணம் எது என்பதை அறியலாமோ?' என்று வினவினான். உடையவரும் "அரசனே! நீ கேட்டது சரியே. பிரமாணமின்றி ஒன்றும் நாம் கூறவில்லை. சூத்ரங்களுக்குப் **போதாயன விருத்தி** என்றொரு பெரிய உரையுண்டு, அது லக்ஷம் க்ரந்தங்களை உடையது. அதை அனைவரும் கற்றுத்தெரிவது கடினம் என்று அதற்கு போதாயன விருத்தி சங்கிரகம் என்று சுருக்கமாக இருபதாயிரம் கிரந்தங்களை உடைய நூல் ஒன்று உண்டு. அதுவே டங்கர், த்ரமிளர், குகதேவர் இவர்கள் வழியாக வந்தது. ஸகல வேத தாத்பர்யங்களையும் கொண்டு வேதப்ரமாணங்களையும் குறித்துச் செல்வது. அதுவே நம்முடைய நாலுக்குப்ரமாணம்" என்று பதிலிறுத்தார். அரசனும் "ஸ்வாமி கூறியது சரியா வென்பதை அக்கிரந்தத்தைக் கொணர்ந்தே தெளிந்துவிடலாமே" எனச் சொல்லி, ஸரஸ்வதி பண்டாரத்தினின்றும் அக்கிரந்தத்தைத் தருவித்துப் பண்டிதர்கள் முன்னிலையிலே பரிசோதித்து, உடையவர் கூறியவனைத்தும் அதிலே பரக்கப் பேசியிருப்பதைக் கண்டு, உடையவர் திருவடிகளிலே தெண்டனிட்டு "ஸ்வாமீ! தேவரீரைச் சோதித்தமைக்கு க்ஷமிக்கவேண்டும். இப்படி ஒரு க்ரந்தமிருப்பதே நமக்குத் தெரியாதபடி மறைத்துவிட்டனர். அதன் பலனாக அக்குத்ருஷ்டிகள் மதமே ஸத்யம்போலும் என்று நம்பியிருந்தோம், தேவரீர் வந்து அவ்விருளை மாற்றி ஒளியேற்றியதற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம்" என்று தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டான். உடையவர் அரசனை நோக்கி, நாம் அந்நூலை நாலைந்து தினங்கள் நம்மிடம் வைத்து அதனைப் பூர்ணமாகப் பார்க்கலாமோ?" என்ன, அரசனும் வித்வான்கள் முகத்தைப் பார்க்க, அவர்களும் உடையவர், ஆழ்வார் இவர்களது அறிவுத் திறனை உணராதவர்களாதலாலே, இதனால் என்ன வந்துவிடும் என்ற அலக்ஷ்ய புத்தியோடு இசைவு கூறினர். உடையவரும் 'இதுவும் அவனதின்னருளே" என்று கொண்டு அரசனிடம் கிரந்தத்தைப் பெற்றுச் சென்றார். சென்றவர் தானும் கூரத்தாழ்வானுமாய் அக்கிரந்தம் முழுவதையும் கடாக்ஷித்துவிட்டு அரசனிடமே திரும்ப அளித்துவிட்டனர்.

அரசன் அவையிலே வாதிலே தோற்ற அத்வைதி முதலிய பிறமதத்தார் தம்முள்ளே குமுறிக் கூடிப் பின்னர் அரசனிடம் உடையவர் கூறிய கிரந்தத்தை நம் சாரதை ஒப்பினாலல்லவா நாம் ஒப்புவது என்று கூற, அரசனும் உடையவரை அழைத்து வித்வான்களின் எண்ணத்தைக் கூறலும் உடையவர் சற்றும் தயக்கமின்றி அவர்கள் சொல்வதும் சரிதானே. ஒன்று செய்வோம். அக் கிரந்தத்தை இன்றிரவு சாரதையின் திருக்கரங்களிலே ஸமர்ப்பித்து விடுவோம். ஸன்னிதியைக் கவாட பந்தனம் செய்துவிடுவோம். நாளைக் காலை செல்வோம். வாணி கிரந்தத்தை ஒப்பினால் கையிலேயே தரித்திருப்பாள். அவள் ஒப்பவில்லையானால் கீழே எறிந்து விடட்டும்" என்று கூற அனைவரும் அதனை ஒப்பினர். அதன்படி அக் கிரந்தம் ஸரஸ்வதியின் அங்கைகளிலே ஸமர்ப்பிக்கப் பெற்றுக் கதவும் பூட்டப்பெற்றது.

—தொடரும்.

# "ஸ்ரீ வைஷ்ணவ-பரிபாஷைச் சொற்கள்"

( திரு. என். எஸ். தாத்தாச்சாரியர், தஞ்சை )

அமர ஓர் அங்கம் ஆறும்,
வேதம் ஓர் நான்கும் ஓதி(த்)

தமர்களில் தலைவராய
சாதி அந்தணர்கள் ஏனும்

நுமர்களை(ப்) பழிப்பராகில்,
நொடிப்பதோர் அளவில் ஆங்கே

அவர்கள் தாம் புலையர் போலும்
அரங்கமா நகருளானே.

(தொண்டர் அடிப்பொடி)

---

"எம்பெருமானுடைய கலியாண குணங்களை
அனுஸந்தித்தலுக்கு ஒப்பாகாது
அவன் போரப் பொலியக் கொடுக்கும்
பரமபதம்" (திருப்பாவை உரை)

## முகப்புரை.

நம் பரந்த பாரதநாடு பண்டைப் பேரும், பண்புப் பெருமையும் வாய்ந்தது என்பதை உலகமே ஒப்புக்கொண்டுள்ளது. அதிலும் பதியே பரவித் தொழும் பெரும் அடியார்கள் பண்ணையாக அமைந்தது நம் பழம் தமிழ் நாடாகும். இராமனும் தன் பொன்னடியைத் தமிழ் நாட்டிற்குச் சூட்டியபின்பல்லவோ தன்முடியைச் சூடிக்கொண்டான். சரணாகதி தத்துவம் உரம்பெற்றதும் நம் நாட்டிலேதான். மிகப் பழங்காலம் தொடங்கிச் சிவனடியார்களும், திருமாலடியார்களும் ஒரு செடியில் பூத்த ஒரு மலரில் காணும் இதழ்கள் போல் ஒன்றிநின்று சமய மணம் வீசினார்கள். ஸ்ரீவைணவர்களைப் பகவர்கள் என்றும், பாகவதர்கள் என்றும் அழைத்துவந்தார்கள். தமிழ் நாட்டில் உள்ள நிலங்களை ஐவகைத் திணைகளாக வகுத்து, அவைகளுள் "முல்லை' என்ற நிலத்திற்குத் திருமாலைக் காவல் கடவுளாகவும் பழம் தமிழாசிரியர்கள் கூறினார்கள். "**நெடுமால்** குறும்பொறை நாடன்றோன்றல்" என்றும் அகப்பொருள் நூல் உரைக்கிறது. ஆகவே திருமால் வழிபாடும் நம் தமிழகத்தே மிகவும் தொன்றுதொட்டு நடந்து வந்திருக்கிறது என்பதை அறியலாம்.

## திருமாலடியார்கள்.

"திருமால்" என்ற சொற்றொடரில் (அல்லது சொல்லில்) 'மால்' என்ற சொல்லுக்கு "மயக்கம், ஆசை, பெருமை, திருமால், இந்திரன், மேகம்" என்ற பொருள்கள் கூறப்பட்டுள்ளன. அடியார்களிடம் அளவுகடந்த மயக்கம் கொண்டவன் நாரணன் ஆதலால், அவன் **மால்** எனப்பட்டான். "ஞானீது ஆத்மைவமே மதம்" (எம்பெருமானை உள்ளபடி உணர்ந்தவர்களே என் ஆன்மா) என்ற கீதைப்பேருரையில் கண்ணன் திருவாக்கு. அடியார்களின் அகம் தேடி அலையும் அந்த ஆராவமுதம், அடியார்கள் தொட்ட, உகந்த பொருள்களுக்கே விரும்பி நிற்கிறான். களவும் செய்கிறான். ஆட்டம் காட்டி நாட்டம் கொள்கிறான். ஆயர்பாடியில் பாலுக்கும் வெண்ணைக்கும் அவன் வேட்கை கொண்டதும் ஆயர் மகளிர் கைபட்ட அருமைக்காகவன்றோ? "இறியென நினைமின்" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் உரையில் "அனுகூல ஸ்பர்சமுள்ள திரவியத்தால் அல்லது தரிக்கமாட்டாது அவன் என்கை" என உரைக்கப்பட்டிருக்கிறது. தூண்டிலைக் காட்டி மீனைப்பிடிப்பதுபோல் தன் அழகைக் காட்டி அடியார்களை மயக்க வைக்கும் மாயனும் அவனே. அவனுடைய வடிவழகிலே ஆழங்கால் பட்டு "என் அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே" என அலற்றும் அடியார்களிடம் மயக்கம் கொண்டு திரிபவனும் அவனே.

ஆகவேதான் "அன்பிலன்றி ஆழியானை யாவர் காணவல்லரே" என்று பிரான் திருவாக்கு. திரு என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுவோம். திரு என்பது பெரும்பாலும் சிறப்புச் சொல்லாக இருப்பினும், திருமால் என்ற சொற்றொடரில் திருமகள் என்றே பொருள்கொள்ளுவது தகும். திருவுடன் அமர்ந்த மால் திருமாலாகிறான். திரு என்ற சொல்லைத் தவிர்த்தால், சொல் பொருள் நிறம் பெறாது போகும். அவளால் அன்றோ அவன் ஏற்றம் பெறுகிறான். அவள் தொடர்பற்ற எம்பெருமான் அடியார்களுக்கு எட்டாக் கனியாகவும், காட்டாக் காட்சியாகவும் ஆகிவிடுகிறான். "திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு" என்ற திவ்யப்ரபந்த நல்லுரையும் இக்கருத்தை வலுவுறுத்தியே காட்டுகிறது.

வேதம் "சிரத்தயா தேவோ தேவத்வம் அச்நுதே" (லக்ஷ்மியால்தான் தேவனாகிறான் திருமால்) என்றது. அவன் அடிகளே, புகலிடம், நிழலிடம், எனக்கொண்டு நலம் தரும் பொற்பேழையாகக் கருதியவர்களே திருமால் அடியார்கள் ஆகுகிறார். அவன் பொன்னடிகளே அடியார்களுக்குக் குலதனமாகும். ஸ்ரீ ஆளவந்தாரும் ஸ்தோத்திரரத்தினம் என்னும் நூலில் "குலதனம் தத் பாதாரவிந்தம் அரவிந்தவிலோசனஸ்ய" (செந்தாமரைக் கண்ணன் திருவடிமலர்களே முன்னோர் காட்டிய செல்வம்") எனப் பேசினார். ஆழ்வாரும் "புகல் ஒன்றில்லா அடியேன் உனதடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்கிறார். "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" என்ற பாசுர உரையில் "கொக்கு வாயும் (பொன் ஆபரணங்களில் உள்ள கொக்கியின் வாய்) படுகண்ணியும் போலே உன் திருவடிகளும் என் தலையும் சேரவேணும்" என்று வடக்குத் திருவீதிப்பிள்ளையின் திருவாக்கு. பக்தர்கள் என்றும், பாகவதர்கள் எனவும் திருமாலடியார்கள் இரு வகைப்படுவார்கள்—பக்தர்கள் எம்பெருமான் குண நலம் கண்டு மகிழ்வார்கள். பாகவதர்கள் அவன் போதடிக்கே என்றும் குற்றேவல் செய்து இன்புற்றுக் களித்து மகிழ்வார்கள்.

## பரிபாஷைச் சொற்கள்

ஸ்ரீ வைணவர்களின் பேச்சு வழக்கில் அடிக்கடி செவிப்படுவது அடியேன் என்னும் சொல்லாகும். பரிபாஷைச் சொல்லென்றால் நன்கு ஆயப்பட்டுக் கையாளப்படும் சொல்லாகும். மரபுச் சொல் என்றும் கூறலாம். ஸ்ரீ வைஷ்ணவ பரிபாஷையில் கையாளப்படும் சொற்கள் யாவுமே மிகவும் கருத்துச் செறிவு உள்ளவை. பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களாகவும் இருக்கும். நம் நாட்டு நாகரிகம் செயல் அளவில் அன்றிப் பேச்சளவிலும் பரிமளித்து நின்றதற்கு இதுவும் சான்றாகும். பேச்சில் "ஔசித்யம்" அதாவது பொருத்தம் கொண்டது இவர்கள் பரிபாஷையின் ஏற்றம். "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்ற தொல்காப்பியப் பொருள் அதிகார அகத்திணை இயல் சூத்திரத்தையும் கருத்தில் கொள்வது நலம். சில சொற்களுக்கு ஒரே பொருள் இருப்பினும் அதைக் கையாளும் பொழுது இடத்திற்குத் தகுந்தாற்போல் கையாளுவது நல் புலமையும், பண்பாட்டையும் காட்டும்.

ஔசித்யம் என்ற இந்த உண்மையை வடமொழி அலங்கார நூல்களில் மிகவும் சிறப்பாகப் போற்றுகிறார்கள். இதைப் பற்றியே "ஔசித்யவிசார சர்ச்சை" என்ற நூலும் எழுந்துள்ளது. உண்பது என்ற கருத்தை—மனிதன் உண்கிறான், மாடு தின்கிறது, அல்லது மேய்கிறது, என்று பிரித்துக்கூறுவதையும் நாம் அறிவோம். இது உலகியல் வழக்கில் கையாண்டுவருகிற முறையாய் இருக்கலாம். ஆனால் பண்பாட்டைக் காட்டும் முறையை மற்றும் பல இடங்களில் காணலாம். கடவுளுக்குப் பூவிடும் பொழுது, "பூவைச் சார்த்து, அல்லது பூவைச் சூட்டு" என்றே கூறவேண்டும். "பூவைப்போடு" என்று கூறக்கூடாது. உயிரற்ற பொருள்களுக்கு இடும்பொழுது தான் அவ்வாறு கூறவேண்டும். நன்மை தீமைகளையும், உயர் திணை அஃறிணையும் பிரித்துக் காட்டும் வகையில் இத்தமிழ் வழக்கு அமைந்திருக்கிறது.

மங்கள கரமான இடங்களில் அமங்களச் சொற்களை நினைக்கவும் கூடாது. சொல்லவும் கூடாது என்பது பெரியோர் வழக்கம். தர்மசாஸ்திரத்தில்—"நாச்லீலம் கீர்த்தயேத்" (தகுதியற்ற சொற்களைச் சொல்லக் கூடாது) என்று கூறியதும் இவ்விதமான நோக்கத்தைக் கொண்டதே. ஆகவே மாளாவினையில் சிக்கித் துவளும் மனித இனத்திற்குப் பல படியில் மேம்பட்ட தேவாதிராஜன் ஆன பகவான் முன்பு பேசப்படும் சொல்யாவும் பண்பட்டதாய், பரிவுகொண்டதாய் அமைந்தே இருக்கவேண்டும்.

இவ்வாறான பல பரிபாஷைச் சொற்கள் நம் வைணவஸ்தலங்களில் அடிக்கடி கையாளப்பட்டு வருகின்றன. அவை எளிதில் எல்லோருக்கும் பொருள்படத் தோன்றாது. ஏன்? வைணவர்களில் சிலருக்கும் இந்தவிதமான பரிபாஷைச் சொற்கள் நாவில் வருவது இல்லை எனலாம். அச் சொற்களின் கருத்துச் செறிவை யாவரும் அறிவது நலம். சிறப்பாகப் பெருமாள் கோயில்களில் பணியாற்றும் பெருமக்கள் அறிந்திருப்பது நலம். அச்சொற்கள் பல இருப்பினும் கூடியமட்டும் நினைவிருக்கும் பரிபாஷைச் சொற்களின் கருத்தின்பத்தைப் பல கட்டுரைகளில் எழுதலாம் என்ற எண்ணம். இக்கட்டுரைகளில் கூறப்படும் பொருள் நயத்திற்குமேலும் நயமான பொருளைக் குருகுலவாசம் செய்து. குழாம்கலந்து குதுகலிக்கும் பெரியார்கள் கூறலாம்.

### அடியேன்

இப்பொழுது 'அடியேன்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். "தாஸன், அடியேன்" என்ற இரண்டு சொற்கள் ஒரே கருத்துடையதாகப் பொதுவில் தோற்றிடினும், உள்புகுந்து உரை நயம் கண்டால் வேற்றுமை புலப்படும். தேவரீர்கள் என்று எதிரே உள்ளவரைக் கேட்பதும், அதற்குப் பதில் கூறும்பொழுது. "அடியேன்" என்று பதில் சாற்றுவதும் ஸ்ரீ வைணவ லக்ஷணமாகும். "ஏகாந் தீவ்ய பதேஷ்டவ்ய: நைவ க்ராம குலாதிபி; ] விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்ய: தஸ்யஸர்வம் ஸ எவ ஹி" (திருமாலடியார்கள் தம்மை உணரக் கூறியோ, குலத்தைக் கூறியோ, பெயரைக் கூறியோ, அறிமுகப் படுத்திக் கொள்ளக்கூடாது. திருமால் சம்பந்தத்துடன் வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும்) என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆக "அடியேன்" என்றால் திருமாலுக்கும், அவன் அடியார்களுக்கும் அடிபோல் உள்ளவன் என்றும், அவர்களுக்கு எந்நேரத்திலும் எந்நிலையிலும் தொண்டு செய்பவன் என்றும் கருத்தை வெளியிட்டதாகும்.

"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும்" என்றல்லவோ நம்மாழ்வார் வேண்டிநின்றார். ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தில் திருமால் விஷயமாக எதைக் கூறினாலும் அது அவன் அடியார்கள் திறத்திலும் பொருந்துவதேயாகும். இறைவன் கருணை அடியார்களிடமன்றி அவர்கள் அடியார்களிடமும் வெள்ளமிட்டோடும் என்பார்கள். "ஸர்வேசுவரன் ஆழ்வார் பக்கம் பண்ணின ப்ரேமம் (பேரன்பு) இவர் ஒருவர் அளவன்றிக்கே ஸம்பந்தி ஸம்பந்திகள் அளவும் வெள்ளமிடுகிறபடி சொல்லுகிறது" என்று திருவாய் மொழி உரையில் தித்திக்கப் பேசப்பட்டதைக் காண வேணும். அடியேன் என்றதும், தம்மை அடிமைகொண்டு விற்கவும், வாங்கவும் ஆடுமாடுகள் போலே ஆகிநின்றவன் என்றும் கூறுவதாகவும் கொள்ளலாம்.

"எம்மை விற்கவும் பெறுவார்களே" என்று முன்னோர் ஸ்ரீ சூக்தி. இதுவே ஸ்ரீ வைணவ லக்ஷணத்தின் எல்லை நிலமாகும். "நித்யாபி வாஞ்சித பரஸ்பர நீசபாவை (ஒருவருக்கொருவர் நீசனேன், நிறைவொன்றும் இலேன்) என்று எளிமை மனம் கொண்டவர்களாய் என்ற செய்யுளும் "க்ரய விக்ரயார் ஹ தசயா ஸமிந்ததே "(வாங்கவும் விற்கவும் தகுதியுள்ளவனாகத் தம்மைச் செய்து கொண்ட நிலையில் ஸ்ரீ வைணவர்கள் விளங்குகிறார்கள்) என்ற செய்யுளும் இக்கருத்திற்குச் சான்றாகும்.

# திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர், திருவெண்காடு.)

## (வாரானைப்பருவம்)

காமருச தங்கையொடு தண்டையணி ஞெகிழம்
கலின்கலி னெனக்கலிப்பக்

கனகமணி யரைஞாண் கிணின் கிணி னெனப்பொலி
கழற்று மரை பெயர்த்துத்

தேமருவு மைம்படைத் திருமார்பு வில்லிடத்
திண்டோளின் வளைகலிப்பச்

செம்மைதரு புண்டரத் திருநீற்று நெற்றியில்
திகழ்சுடர்ச் சுட்டியசையப்

பூமருசெ வித்தல மலம்புமணி குண்டலம்
பொற்குழைக ளோடுமசையப்

புதுமலர்க் கொந்தளக் குஞ்சியொ டசைந்துநின்
புன்மூரல் நிலவரும்பப்

பாமருவு செந்தமிழ்க் கவுணியென வந்ததோர்
பரமநா யகன் வருகவே

பானலம் பொய்கை மலி கானலங் காழிதரு
பரஞான முனிவருகவே ! (1)

தெய்வநெறி யெங்கும் பரந்துலவ வந்ததோர்
சிவஞான மோனன் வருக

செவ்விய மலர்க்கழல் காட்டியெனை யாட்கொண்ட
செந்தமிழ்ச் சேய்வருகவே

மையிருளும் ஒளியென்னும் ஆணவம றைப்பகல
வருஞான பாநுவருக

வாரிதியி னலையென்ன ஓவாது பெருகிடுஉம்
வல்வினைக் கேடன் வருக

பொய்தகையு மாயா மயக்கம தொழிந்திடப்
போதமருள் நாதன் வருக

பூங்கணைக் கிழவனுடல் தீங்குற தேகீத்த
புனிதமா ஞானன் வருக

பையரவ மார்த்தாடு கூத்தப்பி ரானையே
பாவித்தவன் வருகவே

பானலம் பொய்கைமலி கானலங் காழிதரு
பரஞான முனிவருகவே ! (2)

உம்பர்திரி கோள்களெமை நலியாமை யாணையிட்
டுரைசெய்த சேய்வருகவே

ஓதரிய அஞ்செழுத் துண்மையினை உலகெலாம்
ஓதுவித் தவன்வருகவே

வெம்புசுர நோயொழிய நீலகண் டப்பதிகம்
விள்ளுமலர் வாயன் வருக

வெண்ணீற்றி னொளிகொள்நற் பதிகம்வி ரித்ததொர்
வேதநா யகன்வருகவே

கொம்பனைய மங்கையுறு முயலக னொழிந்திடக்
கொழிதமிழ்ப் பதிகன் வருக

கூறரிய ஞானமொழி மாறனுக் கருளுமோர்
குமுதவாய்ச் செல்வன் வருக

பம்புசிவ குமரனென அம்புவியு தித்ததோர்
பரமநாயகன் வருகவே

பானலம் பொய்கைமலி கானலங் காழிதரு
பரஞான முனிவருகவே ! (3)

வாமாண் கலைப்பே ரகலல்குல்
மாதர்த் திலக மனையாரை

மணத்தா லணையு மந்நாளில்
மாதேவன் றன் கழல்நினைந்தே

போமா றெழுந்த திருவுள்ளப்
புனிதன் வருக சிலத்தாற்

போற்றும் முனிவோர் அதிசயிப்பப்
புத்தே ளுலகு புகழ்ந்தேத்தத்

தூமா மணங்காண் நல்லோரும்
தொண்டர் குழாமும் சுடர்ச்சிவிகை

சுமக்கும் பேறு பெற் றோரும்
சோதிப் படலம்புக ஏவிக்

கோமான் கழலே சேர்வனெனக்
கூடும் பெரியோன் வருகவே

குருமா மணியாய் வருஞானக்
கொழுந்தே வருகவே ! (4)

ஆடல் புரியும் திருக்கோலம்
அதனை மறவா நெறிபயின்ற

அரசே வருக உயர்தமிழால்
அமையு மிசையால் உளங்கூரப்

பாடிப் பரவும் நெறிதந்த
பரமா வருக ஏழிசையாழ்ப்

பாணர்க் கருளின் திறம் காட்டும்
பதிகன் வருக முதுநெறிபோல்

வீடல் நெறியே கட்டுரைத்த
வெஞ்சொற் சமணர்வலை வீழ்ந்த

வேந்தன் வழுதி தனைக்காத்து
வெண்ணீ றணிவித் தருள்வதெனக்

கூடல் நகர்க்கே எழுந்தருளும்
கோமான் வருக வருகவே

குருமா மணியாய் வருஞானக்
கொழுந்தே வருக வருகவே! (5)

சேவிற் றிகழ்வார் தமையழைத்த
செல்வா வருக சிவஞானத்

தெளிவா ரமுதுண் டிறுமாந்த
சேயே வருக திரைகடல்சூழ்

பூவிற் கணியா யுதித்த மறைப்
புனிதா வருக உமையம்மை

பொங்கும லர்க்கண்ணீர் துடைத்த
பொற்பே வருக புதுமலர்ப்பூங்

காவிற் றிகழும் சீகாழிக்
கனியே வருக பேரின்பக்

கடலார்ந் தெழுந்து பொழிகருணைக்
காரே வருக காலத்தாற்

கூவிப் பணிகொண் டெனையாளும்
கோவே வருக வருகவே

குருமா மணியாய் வருஞானக்
கொழுந்தே வருக வருகவே! (6)

பொறிவா யோடும் புலனைந்தின்
புறமே யோடும் புன்மணமும்

புந்திக் குரங்கும் வந்தடரப்
போமோ சொல்லாய் புகலியனே

கறியார் கொடியும் நறுங்குறடும்
கல்வா யகிலும் உந்திவரு

கலங்கற் புனலார் காவிரியின்
கரையார் காழிப் பதிவாழ்வே

நெறியார் வாழ்வீந் தெனையருள
நிமலா வருக ஒருகணமும்

நில்லா மனத்தை நின்றருளில்
நிறுத்த வருக நினைவொன்றி

அறிவார் அறியும் வகையுரைத்த
அமலா வருக வருகவே

அருளார் செங்கோ லதுவோச்சும்
அரசே வருக வருகவே ! (7)

கன்னித் தமிழால் சிவநெறியால்
களிகூர்ந் துலகம் துயர்நீங்கக்

கனிவா யதரம் புடைதுடித்தக்
கண்ணீ ருகுத்தமணி வருக

தென்னந் தமிழ்நா டாசறுத்த
திருவே வருக செழுந்தரளச்

சிவிகை நடத்தி உலகாண்ட
செல்வா வருக தீம்புனலார்

பொன்னித் திருநா டளித்தசிவ
போதன் வருக போதமலி


பொன்னார் வள்ளம் கையகலாப்
புனிதன் வருக சிவகாமி

அன்னை சுரந்த திருமுலைப்பா
லமுதன் வருக வருகவே

அருளார் செங்கோ லதுவோச்சும்
அரசே வருக வருகவே ! (8)


ஊனே குழையப் புகுந்தாண்ட
ஒளியே வருக தெளிவுடையார்
உள்ளத் துணர்வா லள்ளியள்ளி
உண்ணத் தெவிட்டா இன்னமுதாம்
தேனே வருக ஞானப்பால்
சிந்தும் குமுதச் செங்கனிவாய்ச்
செல்வா வருக பூம்புகலித்
தேவாயுதித்துத் தென்னவர்கோன்
கூனே ஒழியத் திருவருள்செய்
குமரா வருக அமரர் தொழும்
கோவா யுதித்துக் கலையமுதம்
கொழிக்கத் தழைத்த குருமணியாம்
ஆனே றுயர்த்த பெருமானுர்க்
கருமைத் திருமா மகன் வருக
அருளார் செங்கோ லதுவோச்சும்
அரசே வருக வருகவே! (9)

இசையி லினிய தமிழி லருளை
எழுது முதல்வன் வருகவே
எழிலும் வடிவும் அருளி னிலையும்
எழுத அரியன் வருகவே
அசையு நடையி லிமய முதல்வி
அருள உரியன் வருகவே
அமுத மொழுகு குமுத இதழி
னமுதன் வருக வருகவே
வசைகொ ளமணர் ஒழிய உலகில்
மருவு குமரன் வருகவே
மறையி னிதய மருவும் வசியை
உரைசெய் சதுரன் வருகவே
நசைகொ ளறிவி லெனையு மருளு
கழலன் வருக வருகவே
நறவு சொரியு மலர்கொள் புகலி
வருக வருக வருகவே! (10)



நமது தமிழக முதலமைச்சர் திருமிகு எம். பக்தவத்சலம், B.A., B.L., அவர்களும், அறநிலைய ஆணையர் திருமிகு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்களும், சென்னைத் திருமயிலைக் கபாலீச்சுரர் கோயிலில் நிகழ்ந்த சமயக் கலை மலர் வெளியீட்டு விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தல் (17—4—65).





தேவிகாபுரம் ஸ்ரீ பெரியநாயகி அம்மன் கோவில் உள்தோற்றம்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34. Printed at Manorama Press, 39, M. J. B. St., Madras-5.